# மரகதப்பிடவல்லி

சொக்கன்



பண்டிதர் கோ. கந்தையா
நல்லூர்- 1994.

கல்விக்கான இலட்சியப் பயணம்
சிறகுகள் அமையம்
Sirakukal
Foundation

[illegible]
[illegible]

[illegible]

உ

# மாருதப்பிரவல்லி

சொக்கன்

வெளியீடு

மாவைக் கந்தசுவாமி தேவஸ்தானம்,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.
1990 - 06 - 02

முதலாம் பதிப்பு: 01 - 06 - 1990

பதிப்புரிமை: திருவாட்டி தெய்வானை சொக்கலிங்கம்

அச்சுப்பதிவு
திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்
ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், யாழ்ப்பாணம்.

அட்டைப்படம்
ரமணி

விலை ரூபா: 30/-

# ஆசியுரை

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் உடல் ஆரோக்கியம், உள்ளத்தூய்மை, மனநிம்மதி, நிறைவான அமைதி ஆதியன இருந்தால்தான் அவன் அறிஞனாகவும், பண்பாளனாகவும், நல்லவனாகவும் வாழ முடியுமென விதுரோபநிஷத் கூறும். இதற்கு இயல், இசை, நாடகம் உந்து சக்தியாக இருப்பதோடு மேற் கூறிய பேறுகளையும் பெற வாய்ப்பும் தருகின்றன. இதனாலே தான் முத்தமிழ்க் கலைகள் யாவும் தெய்வீகமானவையெனக் கரு தப்பட்டு ஆலயங்களை நடுநாயகமாக வைத்து அவற்றை இறைவ னுக்கு அர்ப்பணிக்க வேண்டுமெனச் சான்றோர்கள் கூறியுள்ள னர், அதுதான் மரபுமாகும். ஆனால் இன்றைய காலங்களில் இவ்வாறு நடைபெறுவதில்லை, அதோடு இக் கலைகளின் வளர்ச்சிக்கு உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணித்து அயராது உழைக்கும் கலைஞர்களைச் சமுதாயம் ஆற்றுப்படுத்து வதுமில்லை. இதனை இந்து தர்மம் பதினோராவது மலரில் பேராசிரியர் கா. சிவத்தம்பி கூட ''கவிஞர்களது மனப் போராட் டங்களையும் வாழ்க்கைப் பின்னணியையும் அவர்களது ஆக்க மூலம் அறிந்து கொள்ளும் முறைமை தமிழ் மரபில் போற்றப் படுவதில்லை,'' எனத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுவாகக் கலைஞர்கள் கல்வியறிவு, ஒழுக்கம், நேர்மை நடுவுநிலைமை, பரந்த அறிவு, பெருநோக்கம் ஆதியவற்றைக் கொண்டிருத்தல் அவசியம். வித்துவ சிரோமணி சி. கணேசையர், புலவர்மணி சு. நவநீதகிருஷ்ண பாரதியார், பண்டிதமணி சி, கணபதிப்பிள்ளை, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை ஆகி யோர் இந் நூற்றாண்டில் சிறந்த கலைஞர்களாகவும், பேராசிரி யர்களாகவும் மேற்கூறிய வரிசைகளை முதன்மையாகக் கொண் டும் வாழ்ந்தனர். வேற்று மொழியினும், விண்ணவர் மொழியி னும் செந்தமிழ் மொழியினும் தேர்ந்த நூற் புலமை சான்ற ஈழநாட்டின் முடிசூடா மன்னர்களாகவும் வாழ்ந்தனர் வாழ்ந்து தான் பயனென்ன? பல்கலைக்கழகங்கள், இவர்களைப் போன்ற அறிஞர்களையும் கலைஞர்களையும் ஊக்குவிக்க முன் வருகின் றனவா ? அல்லது அவர்கள் தம் துறையில் இன்னும் நன்றாக ஈடுபட ஆற்றுப்படுகின்றனவா? இல்லைவேயில்லை.

இத்தகையதானதோர் காலகட்டத்திலே தான் சொக்கன் அவர்களும் வாழ இறைவனும் அருள் பாலித்திருக்கிறார். பல்

கலைக் கழகங்களே செய்யக்கூடியவற்றைச் சொக்கன் அவர்கள் தனித்துநின்றே செய்து காட்டுகிறதை உலகு அவதானித்துக் கொண்டுதானிருக்கிறது. கவிதை, நாடகம், சமயம் முதலிய கலையோடு சார்பானவற்றையெல்லாம் அதற்குரிய இலக்கண வரம்பிற்குள்நின்று செய்து காட்டி உலகிற்கு உகந்ததாகச் செயல்படுத்துவதையும் கடல் கடந்து வாழும் மக்கள் கூட ரசித்தும் ஆதரித்தும் மகிழ்கின்றனர். இப்போது ஆய்வுகள் என்றதோர் துறையும் இணைந்துவிட்டது. இந்த ஆய்வில் ''மாவிட்டபுரம்'' ஊர்ப் பெயரும் ஓர் சரித்திரப் பேராசிரியரால் ஆராயப்பட்டதாம். குதிரைமுகம் மாறப் பெற்றதனால் ''மாவிட்டபுரம்'' என்ற பெயர் வழங்கலாயிற்று. இந்தக் கதை ஏழாம் நூற்றாண்டிலிருந்து கர்ண பரம்பரையாக வளர்ந்து வேரூன்றியது ஆயிரத்து முன்னூறு வருடகாலமாக உலகெங்கும் இக் கதை பேசியதைப் போல இன்றும் பேசுவார் உளர். ''மாவிட்டபுரம்'' கந்தன் ஆலயத்தை நிறுவிய இளவரசி மாருதப்பிரவல்லியை மணம் செய்த சிங்கையாரியன் உக்கிரசிங்கன் மூலம் யாழ்பாடி பரிசாகப் பெற்றதே யாழ்ப்பாணமாகும். அல்லாமலும் அக்காலத்தில் உக்கிரசிங்கன் யாழ் குடா நாடெங்கும் தமிழர்களைக் குடியேற்றிய வரலாறும் பல வரலாற்று நூலாசிரியர்களால் தரப்பட்டுள்ளது. இதனைப் பண்டிதர் கந்தையா அவர்கள்கூட மாவைபிள்ளைத் தமிழ் நூல் மூலம் குறிப்பிட்டுள்ளார். அந்தோ 'பரிதாபம்' நவீன புலமையுலகில் தோற்றம் பெற்றார் சரித்திரத்தில் பேரறிஞர் என்று சொல்லப்படுபவர் ஒருவர்'' மாருதப்பிரவல்லி உக்கிரசிங்கன் கதைகள் கட்டுக்கதைகள். மாருதப்பிரவல்லிக்குக் குதிரை முகமும் இல்லை என்கிறார். இவ்வாதத்தினை மறுக்கும் பண்டிதர், மு. கந்தையா ''குதிரைக்கு முகமேயில்லை'' யெனவும் இப் பேரறிஞர் வாதிக்கமுயலலாம் என்கிறார் இப்படித்தான் நவீன ஆய்வுகள் ஆளப்படுகின்றன.

நல்ல வேளையாகப் புலவர் ஜெகன்னாதன் ஓர் நூலை வெளிக் கொணர்ந்து. அதனை இலக்கிய வட்டம் மூலம் வெளியீடு செய்து விட்டார். இதனால் சரித்திரச் சான்றுகள் அழிபடாது தப்பின இப்போது நாடக நூல் வடிவில் ''மாருதப்பிரவல்லி'' சரித்திரத்தைப் பலவகைச் சுவைகளோடு எமது ஆசிரியர் சொக்கன் அவர்கள் தமது மணிவிழாப் பரிசாக வெளியீடு செய்துள்ளார்கள். இதுவும் திருவருட்கடாட்சமே. அகஸ்திய முனிவர் தமிழை வழங்கியது போல, இந்தக் குறு முனிவரான சொக்கனும் அருங் கலைகளை இன்று வாழ வைத்துள்ளார். இவரது சரித்திர

நாடகம் சிங்ககிரிக்காவலன் எத்தகைய வெளிக் கொணர்வுகளைத் தந்ததோ அதற்கு மேலான அரிய போக்கிஷங்களை இந்த மாருதப்பிரவல்லி நாடகநூலிலும் தந்துள்ளார்.

இது எல்லோராலும் இயற்ற இயலாது. சொக்கனால்தான் அது முடியும். எனெனில் சொக்களிடம் அகஸ்திய முனியின் சாயல் உண்டு. அறிவு உண்டு. ஆற்றலோ அளவு கடந்தது. நேர்மையான கலையுணர்வும், உறுதியான மனப்பான்மையும், அருமையான பண்புகளாகவும் கலையுலகிலே தென்றல்போல வீசி வலம் வருகிறார். இப் பெரியாரிடம் கேட்டறிய வேண்டியவை பலவுண்டு. ஈழத்தமிழ் மக்கள் சொக்கனது புலமையையும், கலைநிபுணத்துவத்தையும், சமயப்பற்றோடு கூடிய தொழிற்பாடுகளையும் நன்கு வரவேற்று அவதானித்து மகிழ்வதைப்போல யானும் நன்றாக ஆதரித்து ஆற்றுப்படுத்தி மகிழ்ச்சியடைகின்றேன். மணிவிழாக் காணும் சொக்கன் அவர்களும் அவரது குடும்பமும் எந்நாளும் இன்புற்றுச் சகல சௌபாக்கியங்களையும் பெற்று இனிதே வாழ எம்பெருமான் நிறைந்த திருவருட் செல்வங்களை வாரி வழங்க வேண்டுமென யான் எந்நாளும் மாவை முருகப் பெருமானை நினைந்து பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க உங்கள் தொண்டு என வாழ்த்தும்

மஹாராஜஸ்ரீ ச. து. சண்முகநாதக்குருக்கள்
ஆதினகர்த்தா — பிரதமகுரு

# ஈழத் தமிழர் வரலாற்றுக் கதைகளைப் பயன் கொள்ளல்

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாநிலங்களை ஈழத்தமிழகம் அல்லது தமிழீழம் என்னும் மரபு நிலை பெற்றுள்ளது. இப்பகுதி ஈழத்தமிழரின் மரபு வழித் தாயகம் எனப்படுகிறது. வடக்கு, கிழக்குத் தவிர்ந்த இலங்கையின் பிற பகுதிகளில் தமிழர் வாழ்ந்தமைக் கான சான்றுகள் நவீன வரலாற்றறிஞர்களால் அள வுக்கு அதிகமாகத் தரப்பட்டுள்ளன. சைவமும் தமிழும் தென்னிலங்கையில் வாழ்ந்தன; வளர்ந்தன; ஆண்டன வென்பதற்கான பல்வகைச் சான்றுகளையும் திரட்டும் அளவுக்கு எமது அறிஞர் பெருமக்கள் தந்து தென்னி லங்கையும் தமிழீழமே என்பதனை ஐயந்திரிபற எடுத் தோதியுள்ளனர். அவர்களது நுண்மாண் நுழைபுலம் வியக்கத்தக்கது!

ஈழத் தமிழரின் மரபு வழித் தாயகத்திலே மிகத் தொன்மையான காலம் முதலாகத் தமிழர் வாழ்ந்த னர், வளர்ந்தனர், ஆண்டனர் என்ற கருத்தைப் பல அறிஞர்கள் முன்வைத்துள்ளனர். இராசநாயக முதலி யார், சி. எஸ். நவரத்தினம், ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை, பேராசிரியர் கணபதிப்பிள்ளை முதலியோர் இவர்களுட் சிலர். எனினும், கடந்த கால் நூற்றாண்டு காலமாக இவ்வரலாற்றை உறுதியாக நிராகரிக்கும் ஒரு போக்குத் தலையெடுத்து வந்துள்ளது.

'மகாவம்ச மனப் போக்கு' எனப் பெயரிட்டழைக் கப்படும் இப்போக்குப் பல்வேறு காரணங்களைக் காட் டிக் கி. பி. 12 ஆம் நூற்றாண்டுக்கு முன் ஈழத்தில் தமி

ழர் பெருந்தொகையாக வாழவில்லை; ஆளவில்லை என நிறுவியுள்ளது. அவற்றுட் சில!

(1) அநுராதபுர வல்லரசு ஈழத் தமிழர் அரசு அல்லது அரசுகள் வாழ விட்டிருக்காது.

(2) அநுராதபுர அரசின் செல்வாக்கால் ஈழத் தமிழர் அனைவரும் சிங்கள பௌத்தராக மாறிவிட்டனர்.

(3) மகா வம்சத்தில் தமிழீழத்தில் தமிழர் வாழ்ந்ததனை ஆண்டதனை உறுதிப்படுத்தும் சான்றுகளில்லை.

(4) காலத்துக்குக் காலம் பல்லவ, சோழ, பாண்டிய, சேர, விஜயநகர மன்னர் படைகள் இலங்கைக்கு வந்தமைக்கான சான்றுகள் உண்டு.

(5) தமிழீழத்தில் தமிழர் வாழ்ந்தமைக்கான, ஆண்டமைக்கான தொல்லியற் சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை,

(6) தென்னகத்திலிருந்து காலந்தோறும் சிங்கள அரசர்களின் கூலிப்படைகளாகத் தமிழரும் பிற திராவிடரும் தென்னிலங்கையில் வந்து தங்கினர்.

(7) ஈழத் தமிழர் வரலாற்றிலக்கியங்கள் பௌராணிகமரபிலான, தலைதடுமாற்றமான கற்பனைக் கதைகளைக் கூறுகின்றன. இவற்றின் ஆசிரியர்களுக்கு வரலாற்றுணர்வு இல்லை.

ஈழத் தமிழரின் தொடர்ச்சியான வரலாற்றை நிராகரித்து, அவர்கள் வந்தேறு குடிகள் என வழங்கப்பட்ட தீர்ப்பை மீளாய்வு செய்து தள்ளவேண்டியவற்றைத் தள்ளியும் கொள்ளவேண்டியவற்றைக் கொண்டும் புது வரலாறு படைக்கும் பெரும் பொறுப்பு, புதிய தலைமுறை வரலாற்றறிஞருக்கு உண்டு அவர்கள் சிலர் புரட்சிகரமான தேடலில் ஈடுபட்டுப் பெருவெற்றிகளும் ஈட்டியுள்ளனர்.

கிடைக்கும் தரவுகளைச் சேகரித்து ஒழுங்குபடுத்திக் கருதுகோள் ஒன்றை உருவாக்கி அதனைச் சான்றுகளைக் கொண்டு வாய்ப்புப் பார்த்துத் தள்ளுவது அல்லது கொள்ளுவது விஞ்ஞான முறையாகும்;

இத்தகைய முறையை மேற்கொள்ளும் வரலாற்றறிஞனுக்குக் கிடைக்கும் முதன்மையான ஆதாரங்களாக அமைவன ஈழத்துத் தமிழர் வரலாற்றியல் நூல்களேயாகும். இவற்றுள் ஐயத்திற்கிடமின்றிக் காலத்தால் முந்தியது உறையூர்ச் செந்தியப்பர் மகன் முத்துராசக் கவிராயர் எழுதிய கைலாய மாலையாகும்; வையாபாடல் காலத்தால் முந்தியது எனச் சில அறிஞர்கள் கூறுவர். அச்சுவடிவிலுள்ள நூலின் அமைப்பும் பொருளும் அது காலந்தோறும் வளர்ந்த தொகுப்பு நூல் என்றே கொள்ளத் தூண்டுகின்றன. யாழ்ப்பாண வைபவமாலை மேலுமொரு நூலாகும். இவற்றைவிடக் கோணேசர் கல்வெட்டு, தட்சிணகைலாச புராணம், மட்டக்களப்பு மான்மியம் முதலியனவும் ஈழத் தமிழர் வரலாற்றை மீள உருவாக்கப் பயன்படத்தக்க நூல்களாகும்;

ஈழத்தமிழருக்கு வரலாற்றுணர்வு இல்லை என்ற ஒரு பழி கூறப்படுகிறது. இது உண்மையல்ல என்பதற்கு மறைந்த நூல்களாகிய இராசமுறைகள், பரராசசேகரனுலா என்பனவை சான்றாகும். கற்றறிந்தவர்களின் மூடத்தனங்களும் அறியாமையும் மயில்வாகனப் புலவர் காலத்தின் பின் இந்நூல்கள் அழியக் காரணமாயின. நூல்களையும் பயனற்றவை என்று தள்ளி அழித்துவிட வலுவான இயக்கமொன்று வரலாற்றுப் பேரறிஞர்களால் நடத்தப்படுவது கண்கூடு. இம்முயற்சிகளை முறியடித்து ஈழத் தமிழ் வரலாற்று நூல்களிலிருந்து ஈழத் தமிழ மக்கள் வரலாறு பற்றிய முழுமையான கருதுகோளை உருவாக்கி, அதனைத் தொல்லியற் சான்றுகள் முதலியவற்றைக் கொண்டு நிறுவி, முறையான,

அறிவியல் நெறிப்பட்ட வரலாற்றை உருவாக்க அறிஞர்கள்-சிறப்பாக இளம் அறிஞர்கள் - முன்வரவேண்டும்.

ஈழத்துத் தமிழர் வரலாற்று நூல்கள் மூன்று முக்கிய தலைவர்களை எமக்கு அறிமுகம் செய்கின்றன. உக்கிரசிங்கன், யாழ்ப்பாணன், (சிங்கை) ஆரியச் சக்கரவர்த்தி ஆகியோரே அவ்வரலாற்று நாயகர்கள்.

சிங்கையாரியச் சக்கரவர்த்திகள் மரபு பற்றிய இலக்கியங்களும் சாசனங்களும் நாணயங்களும் எண்ணற்றவையாகக் கிடைப்பதால் அவனை நிராகரிக்கும் துணிவு வரலாற்றாசிரியர்களுக்கு ஏற்படவில்லை. எனினும், அவர்கள் அவனை ஈழத்தமிழன் அல்லன் என்பதை நிறுவி விட மிகவும் தீவிரமாக உழைத்துள்ளனர். இம்முயற்சியால் சேர, சோழ, பாண்டியத் தமிழ் நாடுகளிலும் வட இந்தியாவிலும் நிலவிய ஆரியச் சக்கரவர்த்தி பற்றி மிக விரைவாக ஆராயும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது. எனினும் இம்மரபினருள் ஒருவனே சிங்கையாரியச் சக்கரவர்த்தி என்று உறுதியாக நிறுவிவிட அவர்களால் முடியவில்லை. இதனால், அவனுடைய காலத்தை வரையறுப்பதிலும் வரலாற்று அறிஞர்கள் முரண்படுகின்றனர். அவனை வந்தேறு குடிகளின் தற்காலிக தலைவன் எனக் கொள்ளாமல் நிலையான குடிபதிகளின் தலைவன் எனக் கருதிக் கொண்டு சான்றுகளைத் தேட முயன்றால் வரலாற்றாசிரியர்கள் வெற்றி காணமுடியும்.

இன்னொரு உக்கிரசிங்கன் ஈழத் தமிழர் வரலாற்றில் இடம் பெறும் ஒரு நாயகன். இவனது 'கதையை' கைலாயமாலை வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை முதலியனவும் திரிகோணாசல புராணம், நகுலகிரிப்புராணம் முதலியனவும் கூறுகின்றன. எனினும், இக்கதைகளுக் கிடையே நிரம்பிய முரண்பாடு காணப்படுகிறது.

உக்கிரசிங்கன் வரலாற்றோடு மாருதப்புரவீகவல்லி என்ற பாத்திரம் கதையில் இணைந்து கொள்கிறது.

மாருதப்புரவீக வல்லி 'சோழன் மகள்' என அறிமுகப் படுத்தப்படுகிறாள். உக்கிரசிங்கன்-மாருதப்புரவீகவல்லி கதையைக் கைலாயமாலை முதன்முதலிற் கூறுகிறது. இக்கதை மிகவும் சுருக்கமானது.

......தனிக்கவிகைச் செம்பியர்கோன்-நீடுகரைப்
பொன்னித் துறைவன் புலிக்கொடியன் பூவின்மன்னர்
மன்னனெனுஞ் சோழன் மகளொருத்தி - கன்னிமின்னார்

என முதலில் மாருதப்புரவீகவல்லி அறிமுகப்படுத்தப் படுகிறாள். ஆனால் அவளது பெயரோ தந்தையின் பெயரோ இங்குக் குறிப்பிடப்படவில்லை என்பது சிறப்பாக நோக்கத் தக்கது 'அவள் கடலருவித் தீர்த்த சுத்த நீரகத்துள் ஆடிப் பிணிதணிப்ப வந்தாள். தீர்த்தம் படிந்தாள். பாடி அமைத்து இருந்தாள். என்று கைலாய மாலை தொடர்கிறது.

அடுத்து, உக்கிரசிங்கன் மாருதப்புரவீகவல்லியை உடன்கொண்டு போவதைக் கைலாயமாலை பாடு கிறது.

வாய்ந்த கதிரைமலை வாழு மடங்கன் முகத்
தாய்ந்த நகராகத் தடலேறு - சாய்ந்துகங்குல்
போவதன்முன் னேகியந்தப் போர்வேந்தன் மாமகடன்
காவல் கடந்தவளைக் கைப்பிடித்தே - ஆவலுடன்
கொண்டேகித் தன் பழைய கோலமலை மாமுழைஞ்சில்
வண்டார் குழலை மணம்புணர்ந்து...

இங்கும் கதிரைமலை அரசனின் பெயரை முத்து ராசர் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களிருவருக்கும் இரு குழந்தைகள் பிறந்தனர். ஆணின் பெயர் நரசிங்கராசன். பெண்ணின் பெயர் கூறப்படவில்லை.

மன்னன் மகள்தன் மணிவயிற்றில் - மன்னு
கருவாய்ந் தயனமைத்த கட்டளைகள் திட்ட
உருவாய்ந்து பத்துமதி யொத்துத் - திருவாய்ந்த
திங்கள் முகத்தழகுஞ் செய்யுவடி வாலழகும்

துங்கமுறும் உச்சிச் சுழியழகும் - பொங்குமணக்
கண்ணழகும் மூக்கழகும் காதழகுங் கையழகும்
மண்ணில் நரர்போல் வடிவழகும் - நண்ணி
வரசிங்க ராயன் மகராச ராசன்
நரசிங்க ராசனெனும் நாமத் துரைசிங்கம்
வந்துபிறந் திந்தவள மண்டலமெல் லாம்மதிக்க
இந்துவென வேவளரும் எல்லையினிற் பிந்தியொரு
பெண் பிறந்தாள்...

எனக் கதை தொடர்கிறது. தொடர்ந்து இவர்களின் திருமணமும் முடிசூட்டலும் கூறப்படுகின்றன.

இருவருக்கும் நன்முகூர்த்த மிட்டுமகிழ் பூப்பத...
செய்யமணஞ் செய்து நிறல்வேந்தர் போற்றிநிற்பத்
துய்யநவ ரத்னமுடி சூட்டி...

இவ்வாறு கைலாயமாலை இரத்தினச் சுருக்கமாகப் பெயர்களேயின்றிக் கூறும் உக்கிரசிங்கன் மாருதப்பூர வீகவல்லி கதை கண்ணன் பாஞ்சாலிக்கு அளித்த வண்ணப்பொற் சேலையாக வளர்ந்தது.

முதல் வளர்ச்சியை வையாபாடலிற் காண்கின்றோம். இங்குப் பாத்திரங்கள் பெயரோடு பிறப்பெடுக்கின்றன.

உக்கிரசோழன்

உகந்துபெற் றிடுமக வானோர்
மரபினுக் குரிய சிங்ககே தென்ற
மைந்தனு மாமுகந் தரித்தங்
குரனொடு முதித்தான் மாருதப் பிரவை
உவமையில் வல்லியென் பவளும்

என வையாபாடல் (15) குடும்ப உறவைப் பெயரோடு விவரிக்கிறது: குதிரை முகத்தோடு பிறந்த செய்தியையும் கூறுகிறது. தொடர்ந்து கீரிமலையிலும் மாவிட்டபுரத்திலும் நிகழ்ந்தவை கூறப்படுகின்றன.

பொன்னகர் நிகரும் கதிரையம்பதியிற்
போயரன் மகவினை வணங்கிப்
பின்னர்உக் கிரம சிங்கசே னன்றன்
பெண்ணெனை விருந்தாள்

எனக் கதிரைமலையரசன் பெயரும் அவன் வல்லியை மணந்ததும் கூறப்படுகின்றன. (வையா பாடல் 17) தொடர்ந்து முதல்வன் பிறப்புக் கூறப்படுகிறது.

அப்பொழு தன்னான் றனக்கொரு மைந்தன்
அரியினின் முகமுமோர் வாலும்
ஒப்பனை சொல்லற் கரியதரீ யுதித்தான்

என உக்கிரசிங்கனுக்கும் வல்லிக்கும் சிங்கமுகத்துடனும் சிங்கவாலுடனும் குழந்தை பிறந்ததை வையா பாடல் (18) கூறுகிறது.

மயில்வாகனப் புலவர் ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தவர். இலங்கை முழுவதையும் ஒன்றாகக் கண்டவர், ஒன்றாக்க முயன்ற டச்சுத் தலைவனின் ஆணைப்படி யாழ்ப்பாண வைபவமாலையை எழுதியவர். இதற்கு மேலாக மகாவம்ச வரலாற்றை நன்கு அறிந்தவர். எனவே அவர் உக்கிரசிங்கன் மாருதப்புரவீகவல்லி வரலாற்றைப் புதிய கோணத்தில் மகாவம்சநோக்கில் விரிவாக வரைகிறார்.

உக்கிரசிங்கன் சாலிவாகன சகாபதம் 717 இல் (கி.பி.795) இல் ஆட்சியமைத்தான். விசயராசனின் சகோதரன் மரபில் வந்தவன். பலதலை முறையாய் இழந்திருந்த இலங்கையின் அரசை வென்று கதிரை மலையிலிருந்து அரசாண்டான். தென்னாடுகளை வேற்றரசர் ஆண்டனர் - இது மயில் வாகனப் புலவர் தரும் ஈழத்து அரசியற் செய்தி. இவன் வடதிசையிலிருந்து பெரும் படையுடன் வந்ததாக அவர் கூறுகிறார்

இவருடைய கதை பௌராணிக மரபில் விரிந்து செல்கிறது. உக்கிரசிங்கனுக்குச் சிங்கத்தையொத்த முகமும் மானிடத்தேகமுமிருந்தன இவன் நகுலேசரைதரிசிக்கக் கீரிமலை வந்தான் அப்போது தொண்டைமான் அவனைச் சந்தித்தான். அவனை வன்னியர் எதிர்கொண்டு திறை செலுத்தி ஆள உத்தரவு

பெற்றனர். திரையைக் கோணேசர் கோயிலுக்குக் கொடுக்க ஆணைபிறப்பித்தான். திசையுக்கிர சோழனின் மகள் மாருதப்பிரவல்லி அவள் குன்ம வியாதி தீர்க்கத் தீர்த்த யாத்திரை செய்கிறாள். வழியில் சாந்தலிங்கத் துறவி கண்டு கீரிமலைக்குச் செல்ல நெறிப்படுத்துகிறார். அதன்படி கீரிமலையில் நீராட அவளது குன்ம வலி தீர்ந்து குதிரைமுகமும் மறைகிறது. அங்கு உக்கிர சிங்கன் வருகிறான். அவளைக் காண்கிறான். காதல் கொள்கிறான். கடிமணம் புரிகிறான். கோவிற் கடவையில் மாவிட்டபுரம் முருகன் கோயில் எழுகிறது. திசையுக்கிர சோழன் கோயிலுக்குரிய அனைத்தையும் அனுப்புகிறான். கதிரைமலையிலிருந்த உக்கிரசிங்கன் பின் செங்கடகல நகரியைத் தலைநகராக்குகிறான். அக்காலத்தில் அவர்களுக்கு மன்மதன் போன்ற ரூபமும் சர்வராச லட்சணங்களும் உடையனாய்ச் சிங்கத்தின் வாலை யொத்த வாலுடனே நரசிங்கராசன் என்ற குமாரனும் சண்பகாவதி என்ற பெண்ணும் பிள்ளைகளாகப் பிறந்தனர். நரசிங்கராசன் என்னும் பெயர் படைத்த வால சிங்க ராசன் முடிசூட்டி செயதுங்கவரராசசிங்கம் என்ற பெயரோடு ஆட்சி புரிந்தான்.

இங்குப் புதிய பாத்திரங்களும் புதிய நிகழ்வுகளும் இடம் பெற்றுக் கதை வளர்வதைக் காண்கிறோம். யாழ்ப்பாண வைபவ மாலையின் முதலியார் குலசபாநாதன் பதிப்பில் (1953) அடிக்குறிப்பாக மேலும் நீண்டவரலாறு தரப்பட்டுள்ளது; அவை மயில்வாகனப் புலவரின் மூலநூலுக்குரியவை அல்ல எனக் குலசபாநாதன் அவற்றை நீக்கி விடுகிறார். அதில் கீரிமலை என்ற புனித தலத்தின் வரலாறு விரிவாகப் பேசப்படுகிறது; இதனை அடிப்படையாகக் கொண்டு நகுலகிரிப் புராணத்தை அப்பாசாமி சர்மா பாடியுள்ளார். ஆனால் அதில் வரும் மாருதப்புரவீகவல்லி கதையில் உக்கிர சிங்கன் தொடர்பு இல்லை. அவள் சோழ நாடு மீள்கிறாள்.

ஞாயாவாத தும்சகோளரி எனப்பட்ட யாழ்ப் பாணத்து மேலைப் புலோலி, மகாவித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை சுப்பிரமணிய பராக்கிரமம் என்ற நூலில் மாவிட்டபுரம் காங்கேய மூர்த்தி வரலாற்றைக் கூறுகிறார். (அருணாபதிப்பு, சென்னை 1930, பக்.277-280) இதில் கலிங்க தேசன் மகளானகனகசுந்தரி அயக் கிரீவ முனிவரைப் பார்த்து நகைத்ததும் அதனைக் கண்டு வெகுண்ட முனிவர் குதிரை முகம் பெறுவாய் எனச் சாபமிட்டதும் கனகசுந்தரி மறுபிறப்பிலே மதுரை மன்னன் உக்கிரப் பெருவழுதி மகளாகப் பிறந்து அங்கசுந்தரி என்ற பெயரோடு வளர்ந்ததும் பின் குதிரை முகம் பெற்றதும் அசரீரி புனித நதியிலும் கடலிலும் மூழ்கப் பணித்ததும் அங்கசுந்தரி எங்கும் தீர்த்த மாடி இறுதியில் நகுலகிரிக்கு வந்து தீர்த்தமாடி முருகனருளால் குதிரை முகம் நீங்கப் பெற்றதும் கூறப் படுகின்றன. அங்கசுந்தரி தந்தையாகிய வழுதியிட மிருந்து உதவி பெற்று குதிரை முகம் நீங்கிய இடத்தில் காங்கேய மூர்த்திக்குக்கோயில் அமைத்து மாவிட்டபுரம் எனப் பெயரிட்டதும்இதிற் கூறப்படுகின்றது, இக்கதை தக்ஷிண கைலாயமான்மியத்தில் உள்ளது எனக் கதிரைவேற்பிள்ளை கூறுகிறார்.

உக்கிரப் பெருவழுதியின் மகள் அங்கசுந்தரி என அடிக்குறிப்பாகச் சுப்பிரமணிய பராக்கிரமம் (ப 278) பின்வருமாறு கூறுகிறது:

> மாருதப் பிரவல்லி யென்னும் பெயருடையாளென்றும்
> உக்கிர சோழ மகாராசனின் குமாரி யென்றும்
> குட்ட நோயால் பிடிக்கப்பட்டவ ளென்றுஞ்
> சிலர் கூறுவர்.

இது பதிப்பாளர் பி.எல். அருணாசலம் குறிப்பேயாக லாம்.

மட்டக்களப்பு மான்மியத்தில் ஆடக சவுந்தரி கதை கூறப்படுகிறது. யாழ்ப்பாண வைபவ விமரிசனம் எழு

திய ஞானப்பிரகாச அடிகளார், "மாருதப்பிரவல்லி கூள்ளபடி மாறுதலடைந்த ஆடக் சவுந்தரியேயாம் என்று கூறுகிறார். ஆனால், அது வேறு கதை

மாருதப்புரவீகவல்லி - உக்கிரசிங்கன் கதையின் வளர்ச்சியையும் வரலாற்றையும் விரிவாக நோக்கினோம். இது திரிசோணாசல புராணத்தின் தம்பை நகர்ப் படலத்தில் வேறொரு பரிணாமத்தைப் பெறுகின்றது திசையுக்கிர சோழன் தவத்தில் வந்த அரிவையாம் மாருதப் புரவீகவல்லி தனது தொல்லைப் பரிமுகம் நீங்குமாறு தில்லை நகராதி சேத்திரங்களைத் தரிசித்துச் சோணாட்டை நீங்கி, இலங்கை கண்டலத்தினுற்றாள் அங்கு பெரிய மாதோட்டம் மேவிப் பிறங்கு கேதிச்சரம் திருகோணமலை சார்ந்து கன்னிகா தீர்த்தம் கரைசையிலீசன் உவந்த மாவலித் துறைகளில் ஆடிவெருகல் திருக்கோயில் ஆலயங்கள் சார்ந்து கதிரையம்பதி சென்று மாணிக்க நதியில் மூழ்கி, செங்கடகமாநகரி சேர்ந்து இறுதியில் நகுலமலை வந்தாள். அங்கு தீர்த்தமாடிப் புரவியின் முகந் தீர்ந்தாள். மாவை முருகனுக்குத் திருப்பணி செய்தாள். இவ்வாறு அவள் இலங்கை முழுவதிலுமுள்ள தலங்களைத் தரிசித்ததாக நிலவும் மரபு கூறப்படுகிறது. இத்தகைய மரபு யாழ்ப்பாணத்திலும் நிலவுகிறது. இது பற்றிக் ஆய்வாளர் ஒருவர் கூறுவது இங்கு நோக்கத் தக்கது!

யாழ்ப்பாணத்து ஐதிக இளவரசியாகிய மாருதப்புரவல்லி தனது யானையில் இவ்வழியாக (இளவாலை ஆனை விழுந்தான்) மாவிட்டபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பொழுது அந்த யானை இந்த இடத்தில் விழுந்து விட்டதாகவும் பின்னர் இந்தத் தலத்தின் மகிமையறிந்து மாருதப்புரவல்லி இப்பிள்ளையாரை வழிபட்டாளென்றும் இதனால் இவ்விடம் ஆனை விழுந்தான் எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்பட்டது.

(சாங்கேசன் கல்வி மலர், 1985, ப. 160)

மாருதப்புரவீகவல்லி கதை எழுந்தது ஏன்? இதற்கான இரண்டு விளக்கங்களைத் வரலாற்றறிஞர் ஒருவர் தந்துள்ளார்:

1. உக்கிரசிங்கன் - மாருதப்புரவீகவல்லி கதையானது யாழ்ப்பாண இராச்சியத்தின் உற்பத்தி பற்றிய கதையைப் பயன்படுத்த மேற்கொண்ட முயற்சியின் விளைவாகும்.

2. மாருதப் புரவீகவல்லி கதையானது மாவிட்டபுரம் கீரிமலை ஆகிய தலங்களின் வளர்ச்சியை விளக்குவதற்கென எழுந்த புனைகதையாகும். அதிலே சோழராட்சிக் காலத்து நிகழ்ச்சிகள் சில கலப்புற்றிருத்தல் கூடும்.

மாருதப்புரவீகவல்லி கதை யாழ்ப்பாண இராச்சியத்தின் உற்பத்தியை விளக்க எழுந்தது என்று கூறுவதற்கான சான்று எதையும் கொண்டிருக்கவில்லை. மாறாக, யாழ்ப்பாண அரசின் வரலாற்றில் ஒருகட்டத்தில் சோழர் ஆட்சியுடன் தொடர்பு ஏற்பட்டது என்பதையே காட்டுகிறது. ஈழத்தில் பல்லவர் செல்வாக்கு நிலவியது. அந்தச் செல்வாக்கு வீழ்ச்சியுற்ற போது கதிரைமலை அரசன் தனது ஆட்சியை மீண்டும் நிலைநாட்டிக் கொண்டான். அதன்பின் சோழர் ஆட்சிக்குட்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் நிலவியது. இக்கருத்தோட்டங்களையெல்லாம் உக்கிரசிங்கன், மாருதப்புரவீகவல்லி கதையிலிருந்து பெறலாம்போல் தோன்றுகிறது. சோழ அரச குமாரியை மணந்த கதிரைமலை அரசன் தனது மகனுக்கு நரசிங்கராசன் என்று பெயர் சூட்டினான் எனக் கைலாயமாலை கூறுகிறது. இப்பெயர் பல்லவர்கள் சூட்டிக்கொண்ட நரசிம்மன் என்ற பெயரை நினைவூட்டும் வகையில் அமைந்திருப்பது கருதத்தக்கது. இது விசயன் கதையை நினைவூட்டுவதன்று.

"பல்லவப்படை கி. பி 664 இல் மானவர்மன் என்ற சிங்கள அரசன் இழந்த அரசசைப் பெற உதவியது. இப்படையெடுப்பின் போது பல்லவப்படை யாழ்ப்பாணத்தில் இறங்கி யாழ்ப்பாணத்தைத் தனது கட்டுப்பாட்டிற் கொண்டு வந்திருக்க வேண்டும். இக்காலத்தில் பல்லவ நாட்டுக்கும் இலங்கைக்கும் தொடர்ந்த தொடர்பு இருந்தது" என்கிறார் முதலியார் செ. இராசநாயகம் பல்லவராயன் கட்டு முதலிய பெயர்கள் இதற்குச் சான்றாகும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் காலத்தில் பல்லவர் செல்வாக்குற்றிருந்தனர் இக்காலத்தில் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் முதலிய தலங்களுடன் தமிழகத்தினர்க்குத் தொடர்பு இருந்ததென்பதற்குத் தேவாரத் திருப்பாடல்களே சான்றாகும்.

ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கொஸ்மோஸ் என்ற கிரேக்க எழுத்தாளர் இலங்கை பற்றிய சில கருத்துக்களைக் கூறுகின்றனர். அக்கருத்துக்களை விளக்கும் சேர் எமேசன் ரெனன்ற் "அவன் யாழ்ப்பாணத் தரசனே" எனக் கூறுகிறார் என இராசநாயகமுதலியார் எடுத்துக்காட்டுவார்.

கொஸ்மோஸ் குறிப்பிடுங் காலத்துக்குப் பின் யாழ்ப்பாண அரசர் ஆதிக்கம் இழந்து சிற்றரசர்களாகவோ உரிமையிழந்தவர் ஆகவோ மாறியிருக்கலாம். பல்லவர்-சோழர் ஆதிக்க மாற்றக் காலத்தில் அவர்கள் மீண்டும் செல்வாக்குப் பெற்றிருக்கலாம். இத்தகைய ஒரு காலகட்டத்தையே உக்கிரசிங்கன் கதை பிரதிபலிக்கிறது என்று கொள்வதிலே தவறில்லை. இக்கருத்தையே முதலியார் செ. இராசநாயகம் முன்மொழிந்தார்:

கி. பி. 9ஆம் நூற்றாண்டில் பல்லவராட்சி வீழ்ந்து சோழராட்சி மீண்டும் எழுச்சி பெறுகிறது இக் காலத்தில் சிங்களரிடையே போட்டி, பூசல் நிலவுகிறது. சிங்கள அரசிலிருந்த தமிழ்ப் பிரதானிகள்

> தமக்கிடையே பூசல், போர் என்பவற்றில் ஈடுபடு
> கின்றனர், இந்தக் குழப்பங்களுக்கு மத்தியில் உக்
> கிரசிங்கன் கதிரைமலையை மீண்டும்தனதாக்கிச்
> சுதந்திர அரசை நிறுவினான்.

என்கிறார். கைலாயமாலை கதிரை மலையைக் கதிர் காமம் என்று கூறவில்லை. இராசநாயக முதலியாரும் கதிரைமலை கந்தரோடையே என்கிறார்.

உக்கிரசிங்கன் - மாருதப்புரவீகவல்லி கதையைக் கூறிய கைலாயமாலை ஆசிரியர், பெயரைக் கூடக் கூறவில்லை என மேலே கண்டோம். எனினும் வரலாற்று நிகழ்வொன்று தொடர்ந்து நினைவில் இருந்தது என்பதையே இது காட்டுகிறது. இக்கால கட்டத்தில் கதிரைமலை அரசர்-சோழர் உறவு நல்ல நிலையில் இருக்கவில்லையோ என்ற ஐயத்தைக் கைலாயமாலை ஏற்படுத்துகிறது

> — ...போர்வேந்தன் மாமகள்தன்
> காவல் கடந்தவளைக் கைப்பிடித்தே-ஆவலுடன்
> கொண்டேகி— — —

என்ற தொடர் இதனை உறுதி செய்வதாகவே கொள்ளலாம். பகைமையை வெளிப்படுத்த இவ்வாறு செய்வது அரச பாரம்பரியம். இக்கதைகள் கதிரைமலை அரசன் திருமணத்தின் பின் தனது தலைநகரைச் செங்கடக நகருக்கு மாற்றினான் என்றும் கூறுகின்றன. சோழ அரசு இன்னும் வலுப்பெறாத நிலையில் நோய் தணிப்ப வந்த இளவரசியை அவன் கைப்பிடித்த பின் பாதுகாப்புக்காகச் செங்கடகநகருக்கு மாற்றியிருக்கலாம். செங்கடகநகர் எது? 'செங்கடகல' என்பர் சிலர். சிங்கை நகர் என்பர் சிலர். கண்டியில் யாழ்ப்பாண அரசன் தலைநகர் அமைத்தான் என்பது பொருந்தாது. எனவே, செங்கடக நகரை யாழ்ப்பாணத்தில் தேடுவோம். கண்டடைவோம்,

யாழ்ப்பாண வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு சங்கிலியன், பூதத்தம்பி முதலிய பல நாடகங்கள் தோன்றியுள்ளன. மாருதப்புரவீகவல்லி கதையைத் தமிழருவி, த. சண்முகசுந்தரம் அவர்கள் 'வாழ்வு பெற்ற வல்லி' என்ற நாடகமாக எழுதினார். மணிவிழா நாயகரான வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) எம். ஏ அவர்கள் அக்கதையை மாருதப்பிரவல்லி என்ற நாடகமாக உருவாக்கியுள்ளார். இருவரும் சங்கிலியன் என்ற யாழ்ப்பாண வரலாற்று நாடகத்தை எழுதிய பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் மாணவர்கள்.

சொக்கன் அவர்கள் சிங்ககிரிக் காவலன், சிலம்பு பிறந்தது, தெய்வப்பாவை முதலிய வரலாற்றியல் இலக்கிய நாடகங்களை எழுதியுள்ளார் தமிழீழ மண்ணின் மணங்கமழும் நாடகம் ஒன்றை அவர் முதன்முதலாக எழுதியுள்ளார்; இந்நாடகம் ஈழத்தமிழர் சுதந்திரப் பெருமையை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. இன்றைய காலகட்டத்தில் இந்நாடகம் வெளிவருவது மிகப் பொருத்தமானதே. நாம் வந்தேறு குடிகளல்ல; வேரில்லா மரமல்ல; ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றிய பாரம்பரியம் மிக்க மக்கட் குழுவினர் என்பதை விளக்கும் சின்னமாக இந்நாடகம் அமைந்துள்ளது. இதுபோன்ற ஆக்கங்களை மணிவிழாக்காணும் திரு சொக்கன் அவர்கள் தொடர்ந்து படைக்க வேண்டும் என விழைகிறோம்.

அறுபதிற் றிரட்டி ஆண்டுகள் பெற்றே
உறுதமிழ் மொழிபோல் ஓங்கியே வாழ்க.

மயிலங்கூடலூர் பி. நடராசன்

# முகவுரை

எழுபதுகள் வரை நாடகத்துறையில் ஆர்வமும் ஈடுபாடுங் கொண்டு பல நாடகங்களை எழுதியும் முதுகலைமாணிப்பட்டத் தேர்வுக்கு 'ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி' பற்றி ஆராய்ந்தும் வந்த நான், எண்பதுகளில் நாடகத்துறையில் அதிக ஈடுபாடு கொள்ளாமைக்கு நாடகம் பற்றிய எனது கோட்பாடு காரணம் என்று கூறல் இயலாது. நவீன நாடக உத்திகளில் எனக்குப் பயிற்சியோ அநுபவமோ இல்லாமையும் பாடசாலை நாடகங்களில் பங்கு கொண்டு உதவும் வாய்ப்புக்கள் அருகியமையுமே அடிப்படைக் காரணங்கள் எனலாம்.

இந்நிலையில் மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தான கர்த்தர். மஹாராஜஸ்ரீ ச. து. சண்முகநாதக் குருக்கள், தமது இல்லத்தில் தம்முடைய நாவல் வெளியீட்டின் பொழுது மாருதப்பிரவல்லி கதையை நாடகமாக எழுதித் தருமாறு சபையார் முன்பு பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்து, அவ்வாறு நான் எழுதித் தரும் நாடகத்தைத் தாம் நூல்வடிவில் வெளியிடுவதாகவும் அதனை மேடையேற்றும் செலவு முழுவதையும் ஏற்பதாகவும் உறுதி கூறிய பொழுது, தமிழ் நாடகத் துறையில் நான் மறுபிறப்பு எடுக்கவேண்டிய சந்தர்ப்பம் வலுவில் வருகின்றது என்பதை உணர்ந்து கொண்டேன்.

எனினும் இம்மறுபிறப்பு, எனக்கு நன்மை அளிக்குமா தீமையில் வீழ்த்திவிடுமா என்று பலநாள் சிந்திக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இதற்கான காரணங்கள் இரண்டு.

1. ஒரு தசாப்தம் கழிந்து மீண்டும் விட்ட இடத்தில் தொடர்கையில் முன்னைய திறமையும் ஆர்வமும் ஏற்படுமா என்ற ஐயம்;

'மாருதப்பிரவல்லி' கதை குமரர் த. சண்முகசுந்தரம் அவர்களால் 'வாழ்வு பெற்ற வல்லி' என்ற பெயரில் எழுதி நூலாகவும் வந்தபின் அரைத்த மாவையே மீண்டும் அரைப்பதா, என்ற தயக்கம்.

இவ்வாறு ஐயம். தயக்கம் ஆகிய பாரிய தடைகளின் மத்தியில் சில மாதங்கள் சென்றன. இந்நிலையில் குருக்களவர்களூடாக என்னை இம்முயற்சியில் ஈடுபடுத்தத் திரையின் காரணராய் விளங்கிய நண்பர் நா. சோமகாந்தன் அவர்களின் நினைவூட்டல்கள் அடிக்கடி நிகழவே, 'இனிப் பொறுப்பதில்லை தம்பி, எழுதுகோல் எடு' என்று என் மனம் என்னைப்பணித்தது; வற்புறுத்தியது; சில வேளைகளில் கெஞ்சவும் தொடங்கியது. அதன் மாயச் செயல்களுக்கு ஆட்பட்டு மாருதப்பிரவல்லி கதை பற்றிய ஆதாரங்களைத் தேடத் தொடங்கினேன்.

மாருதப்பிரவல்லியின் வரலாறு, வரலாற்றிற்குரிய அமிசங்களைக் கொண்டிருந்தாலும் அந்த அமிசங்களை உறுதி செய்யக்கூடிய ஆதாரங்கள் மிகக் குறைவே. மாருதப்பிரவல்லிக்கு ஏற்பட்டது குதிரைமுகமா, குதிரைமுகம் என்னும் ஒருவகை நோயா, குதிரை முகத்தோடு கூடிய குன்ம நோயா என்பதிலேயே யாழ்ப்பாண வரலாற்றாசிரியர்களிடையே ஒற்றுமை இல்லை. அவள் பெயர் மாருதப்புரவீகவல்லியா, மாருதப்பிரவல்லியா மாருதப்புரவல்லியா என்பதிலும் தெளிவான முடிவுக்கு வர இயலவில்லை, பெயரின் பொருளும் மயக்கமாகவே உள்ளது.

குருக்கள் சமய வரலாறுகளிலும் புராணங்களின் உண்மைகளிலும் அழுத்தமான நம்பிக்கை உடையவர்; வரலாற்று உண்மைகளையும் புறக்கணிக்காது அவற்றோடு சமயச் சம்பவங்களையும் இணைத்து 'மாவிட்டபுரத் திருத்தல வரலாறு' அவரால் எழுதப்பட்டுள்ளது. அவர் மஹாவித்வான் சதாவ

தானம் மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளை எழுதிய 'சுப்பிரமணிய பராக்கிரமம்' என்னும் நூலில் எழுபத்தைந்தாவது இயலாய் அமைந்த 'மாவிட்ட புரக் காங்கேய மூர்த்தி (பக் 277 - 280) யைத் தமது வரலாற்றிற்கு முதன்மையான ஆதாரமாக ஏற்றுள்ளார். அதில் மாருதப்பிரவல்லியின் முற் பிறப்புப் பெயர் கனகசுந்தரி எனவும் அயக்கிரீவ முனிவரின் சாபத்தால் மறுபிறப்பில் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியின் மகளாய்ப் பிறந்து அங்கசுந்தரி என அவள் பெயர் பெற்றாள் எனவும், அந்தப் பிறப்பிலேயே சாபகாரணமாகக் குதிரைமுகம் பெற்றாள் எனவும் அது நீங்கியது மாவிட்டபுரம் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த மான்மியக் கதையையும் நான் தள்ளிவிடவில்லை. கனகசுந்தரி, அயக்கிரீவமுனிவர் இருவரும் எனது நாடகத்திலும் பாத்திரம் ஏற்கிறார்கள். மாருதப் பிரவல்லியின் அங்கசுந்தரி பெயரை நான் காரணப் பெயராக்கிக் கையாண்டுள்ளேன் ஆனால், அவளைப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியின் மகளாகக் கொள்ள என் மனம் இடந்தரவில்லை காரணம்,

அரசனித் தவணம் இருந்திடு நாளி
லயோத்தி மன்னன் குலக்கேதுக்
குரியமைந் தனனவ் வுக்கிர சோழன்
உகந்துபெற் றிடுமக வானோர்
மரபினுக் குரிய சிங்ககே தென்ற
மைந்தனு மாமுகந் தரித்தக்(கு)
உரனொடு முதித்தாள் மாருதப் பிரவை
உவமையில் வல்லியென் பவளும்

என்று வையா பாடலும்

தேடுந் தனிக்கவி கைச் செம்பியர்கோ—னீடுகரைப்
பொன்னித் துறைவன் புலிக்கொடியன் பூவின் மன்னர்
மன்னனெனுஞ் சோழன் மகளொருத்தி-கன்னிமின்னார்
தேடுங் கடலுருவித் தீர்த்தகத்த நீரகத்துள்
ஆடிப் பிணிதணிப்ப............................

என்று கைலாயமாலையும்

"இவை சம்பவித்த எட்டாம் வருடத்திலே சோழ தேசாதிபதியாகிய திசையுக்கிர சோழன் மகள் மாருதப் பிரவல்லி ... " என்று யாழ்ப்பாண வைபவமாலையும் அறுதியிட்டுக் கூறுவதே அன்றியும் இக்கன்னனுக்குச் சோழநாட்டுப் பதியாகிய சிதம்பரத்துடனேயே தொடர்பு கற்பிக்கப் படுவதும், அவள் மாவிட்டபுரத்துக் கந்தசுவாமி கோயிலுக்கு, பெரிய மனத்துளார் என்ற தில்லைச் சிவாசாரியாருள் ஒருவரையே (தீக்ஷிதர்) சிவாசாரியாராய் அனுப்பி வைப்பதும் சோழனை வலியின் தந்தையாக நான் கொள்ள உறுதியான ஆதாரங்களாயின.

திசை உக்கிர சோழனை அரசன் என்னாது தேசாதிபதி என்ற பெயராலேயே யா வை. மாலை குறிப்பதும் கருத்திற் கொள்ளத் தக்கது. யாழ்ப்பாண வரலாற்றாசிரியர்களும் அவனைச் சோழப் பெருமன்னனது ஆட்சிக்குட்பட்ட குறுநில மன்னனாகவே கொள்கின்றனர். சோழர் வரலாற்றில் திசையுக்கிர சோழன் என்ற மன்னன் பெயர் இடம் பெறாமையே இவர்களின் முடிவிற்குக் காரணமாகலாம். இம்முடிவினை நானும் ஏற்றுத் திசையுக்கிர சோழனைக் குறுநில மன்னனாகவே காட்டியுள்ளேன்.

அடுத்தது, உக்கிரசிங்கன் பற்றியது. இவன் கதிரைமலையிலிருந்து அரசாண்ட மன்னன். கதிரைமலை இன்றைய கந்தரோடை என்பது. யாழ்ப்பாண வரலாற்றாசிரியர் சிலர் முடிபு. இது, எனக்கு அவன் மருதப்பிரவல்லியை அவள் கேசயிற்கடவை (மாவிட்டபுரத்தில்) வாசியாயிருந்த காலத்தில் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்த உதவியுள்ளது. உக்கிரசிங்கன் சிங்கள அரசனாகிய விசயனின் தம்பி மரபில் வந்தவன் என வரலாறு பேசுவதால் அவன் தமிழனா, சிங்களவனா என்ற பிரச்சினை ஏற்படுகின்றது. நான் அவனை 'உயிரால், உளத்தால், உணர்வால் தமிழன்' என்றே காட்டியுள்ளேன்.

மேற்குறித்த பாத்திரங்களோடு நகுலமுனிவர், சாந்தலிங்கச் சந்நியாசி ஆகியோரும் வைபவமாலை முதலியவற்றில் இடம் பெறுவோர். இவர்களைத் தவிர மற்றையோர் யாவரும் இந்நாடகத்துக்கென நான் படைத்துக் கொண்ட பாத்திரங்கள்.

யாழ்ப்பாண வரலாற்றோடு தொடர்புடைய இடப்பெயர்கள், முற்குறித்த உக்கிரசிங்கன் முதலான பாத்திரங்கள் என்பவற்றை உலாப்போக விடுத்ததால் இதனை வரலாற்று நாடகம் என்று அறுதி உறுதியாக முத்திரை குத்திவிட முடியாது. முனிவர்கள் சாபங்கள், அற்புதசம்பவங்கள் வருவதால் இதில் புராணத்தின் மேலாண்மையும் இடம் பெற்றேயுள்ளது. எனவேதான் காவியம், வரலாறு இணைந்த நாடகம் என இதனைக் குறித்திருக்கின்றேன். இக்காரணத்தினாலேயே மரபுவழி நாடகப்பாட்டு, கப்பற்பாட்டு, குறவஞ்சிப் பாட்டுப் பாணிகளிலே அமைந்த என் சொந்த ஆக்கங்கள் இந்நாடகத்தில் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழ் உரையாடலையும் நாடக உள்ளுறுப்பாக ஓரிடத்திலே கையாண்டுள்ளமையும் இக்காரணத்தினாலேயே. நாடக கதாநாயகனான உக்கிரசிங்கன் கி பி 795 இல் வாழ்ந்தவனாகக் கொள்ளப்படுவதால் அக்கால உணர்வையும் முற்றாகக் கைவிடவில்லை என்பதற்கு அப்பர் சுவாமிகளின் ‘முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்’ எனத் தொடங்கும் திருத்தாண்டகம் ஒன்று கையாளப்பட்டுள்ளமையையும் உதாரணமாகக் கொள்ளலாம்.

நிகழ்ச்சிகளால் வளர்க்கப்படுவது நாவல். நிகழ்ச்சிகளின் இயக்கங்களை எதார்த்தமாக அரங்கிற் காட்டுவதோடு அவற்றிற்கு இன்றியமையாத உரையாடல்களையும் பொருத்தமாகவும் கூர்மையாகவும், பார்ப்போரின் நெஞ்சங்களிலே ஏற்படுத்தும் வகையாகவும் அமைத்துக் கொள்ளல் வேண்டும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவன் நான். சிங்ககிரிக்காவலன், தெய்

வப்பாவை, சிலம்பு பிறந்தது, துரோகம் தந்த பரிசு, மண்டோதரி, நட்புக்கு ஒருவன், கானல்வரிமுதலான எனது முன்னைய நாடகங்கள் ஆத்மதிருப்தி தருமளவுக்கு வெற்றி பெற்றன என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் அவற்றின் கையாளப்பட்ட உரையாடல்களே. ஒரு தசாப்தத்தின் பின்னர் எழுதப்படும் இந்த நாடகத்தில் இவ்வாறு உரையாடல் அமையுமோ என்ற அச்சம் ஆரம்பத்தில் எனக்கு இருந்ததுண்டு. ஆனால், எழுதிய நாடகத்தை மீள வாசித்துப் பார்க்கையில் அந்த அச்சத்திற்கு இடமில்லை என்றே சொல்லத் தோன்றுகின்றது.

நாடகம் ஒரு தொடக்கம், உச்சகட்டம், இறுதல் ஆகிய அம்சங்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதிலும் எனக்கு அக்கறை உண்டு. அந்த அக்கறையைக் காட்சிக்குக் காட்சி நினைவூட்டிக் கொண்டு மிகக் கவனமாக நாடகத்தை வளர்க்க முயன்றிருக்கிறேன். நாடக பாத்திரங்களின் உணர்ச்சி மோதல்கள் முரண்நிலைகள் என்பவற்றை உளவியல் ரீதியில் அணுகும் முறையும் நான் வரித்துக்கொண்ட ஒன்று. இந்நாடகத்தில் இவையும் இயன்ற அளவு கடைப்பிடிக்கப்பட்டுள்ளன என்பதே என் கருத்து.

இந்நாடகத்திற்கு என் இனிய நண்பர் மயிலங்கூடலூர் பி. நடராசன் ஓர் ஆய்வு முன்னுரை வழங்கியுள்ளார். அது மாருதப்பிரவல்லி தொடர்பான பல ஐயங்களைப் போக்கலாம் என்பது என் நம்பிக்கை. அவருக்கு எனது ஆழிய நன்றி உரியது.

என்னை 'மறுபிறப்பெடு'க்க வைத்த மஹாராஜ ஸ்ரீ ச. து. சண்முகநாதக் குருக்கள் அவர்களுக்கும் அவர் மூலம் என்னை வெளிக்கொணர்ந்த அன்பு நண்பர் நா. சோமகாந்தன் அவர்களுக்கும் ஓவியர் ரமணி அவர்களுக்கும் உளங்கனிந்த நன்றி உடையேன்.

சொக்கன்

வாணி,
நாயன்மார்க்கட்டு
யாழ்ப்பாணம்
1990-06-02

## மாருதப்பிரவல்லி

## நாடக பாத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மாருதப்பிரவல்லி | - வல்லி | திசையுக்கிரசோழனின் புதல்வி |
| 2. | உக்கிரசிங்கன் | - உக்கிர | ஈழத்து மன்னன் |
| 3. | கனகசுந்தரி | - கனக | கலிங்கத்தரசன் மகள். மாருதப்பிரவல்லியின் முற்பிறப்பில் அவள் பெற்ற பெயர். |
| 4. | கோமளாங்கி | - கோமளா | |
| 5. | சுபாங்கி | - சுபா | கனகசுந்தரியின் தோழியர். |
| 6. | மங்கையர்க்கரசி | - மங்கை | மாருதப்பிரவல்லியின் தோழி. |
| 7. | திசையுக்கிரசோழன் | - திசை | மாருதப்பிரவல்லியின் தந்தை |
| 8 | வானவன்மாதேவி | - வானவ | அவன் - பட்டமகிஷி. மாருதப்பிரவல்லியின் தாய் |
| 9. | அயக்கிரீவர் | - அயக் | பொதிகை மலைச்சாரலில் வாழ்ந்த முனிவர். |
| 10. | வேல்மாறன் | - வேல் | உக்கிரசிங்கனின் அமைச்சன் |
| 11. | பூபாலன் | - பூபா | அவனுடைய தளபதி. |
| 12. | புவனேந்திரன் | - புவனே | அவனுடைய பிரதானி. |
| 13. | சாந்தலிங்கச் சந்நியாசி | - சாந்த | மாருதப்பிரவல்லியை ஆற்றுப்படுத்திய துறவி |
| 14. | நகுலமுனிவர் | - நகுல | கீரிமுகம் நீங்கி நகுலேச்சரத்தில் வாழ்ந்த முனிவர். |
| 15. | சிவனடியார் | - சிவ | சிதம்பரக் கோயிலில் இடைவிடாது தரிசனம் செய்து வரும் ஒருவர். |
| 16. | பெரியமனத்துளார் | - பெரிய | மாவிட்டபுரத்தில் முதற் சிவாசாரியார் |
| 17. | அருண்மொழித்தேவர் | - அருண் | திசையுக்கிரசோழனின் அமைச்சர் |
| 18, | மார்த்தாண்டன் | - மார்த்தா | அவனுடைய தளபதி. |
| 19. | கீரிமலையூர்த் தலைவன் | | கீ. த. மாருதப்பிரவல்லியைக் கீரிமலையில் வரவேற்போன். |
| 20. | தளன் | | நிடதத்து மன்னன். |
| 21. | மதிவாணர் | - மதி | கலிங்க மன்னனின் அமைச்சர் |
| 22 | உரோமர் | - உரோம | அயக்கிரீவரின் சீடர். |

மற்றும்

| | |
|---|---|
| சிவபெருமான் | சிவனடியார்கள் |
| குடிமக்கள் | ஏவலர் |
| மீனவர் | நாட்டுக்கூத்தர் |

ஆகியோர்

# மாருதப் பிரவல்லி

## நாடக ஆற்றுப்படை

( திரை மெல்ல விலகுகிறது. ஒளி சிறிது சிறிதாக மேடையில் படர்கின்றது. மாவிட்டபுரக் கந்தன் கோயில் மூலஸ்தானம் தீபங்களின் ஒளி வெள்ளத்திலே மூழ்கிக் காட்சி தருகின்றது. கோயில் மணி யோசை. அடுத்து நாதஸ்வரத்திலே பூபாளராகம் எழுகிறது. (இரு நிமிடங்கள்) அதுவரை உறை நிலையிலே நின்ற சிவாசாரியார் முருகனுக்குப் பஞ்சாராத்தி காட்டுகின்றார். அவர் போலவே நின்ற அடியார்களும் தங்கள் கரங்களைச் சிரசுகளின்மேற் குவித்த வண்ணம் '' முருகனுக்கு அரோஹரா'' என்று கோஷிக்கின்றனர். தீபாராதனை முடிகின்றது. சிவாசாரியாரின் ஆசீர்வாதத்தினை அடுத்து 'மாருதப்பிரவல்லி' நாடக இயக்குநர் கூப்பிய கரத்தோடு பாடுகின்றார். )

பாட்டு

திருவமை எழிலுறை திரைகடல் அணிதுறை
செருவிறல் மறமொடு தெளிவான
தகையறி வமைபவர் தமிழினை உயிரெனத்
தமதுளம் நினைபவர் தமைமேன்மை
மருவிட வளமமை மழையொடு கதிரொளி
மகத்துவம் அளித்திடும் ஈமதீழம்
மதிவல புரவலன் வளவர்தம் வழியினில்
வருபவன் மகளது பிணிபோக்கும்
அருமைசெய் தவளுளம் களிகொள உயரருள்
அருளிய இறையவன் மகனேஉன்
அதிவல மகிமைகள் திகழ்தரக் கருதியன்
றமைத்திடும் அணிதிகழ் பெருங்கோயில்
உருகிடு மனமொடு வழிபடும் அவரிடர்
ஒழித்துயர் வளித்திடும் அருள்வேலா!
உனதடி யவளது கதைஅரங் கினையுற
உவந்தருள் மாவையின் பெருமானே!

(மூலஸ்தானத்திரை மூடிக்கொள்ளுகிறது. அடியார்கள் ஒவ்வொருவராகக் கலைகின்றனர். நாடக இயக்குநரும் சிவாசாரியாரும் எஞ்சுகின்றனர் )

இயக்கு: ஐயா, வணக்கம்.

சிவா: வணக்கம், இண்டை இரவு குதிரைவாகனத் திருவிழா. வருவீரல்லே?

இக்யகு: போனகிழமை குதிரைவாகனத்தின்ர முகப்பக்கம் ஏதோ உடைவு எண்டு கதைச்சினம்.

சிவா: அதெல்லாம் எம்பெருமான் அருளாலே சரியாக்கியாச்சு. எங்கடை சின்னப்பு 'ஆசாரியாரை என்னவெண்டு நினைக்கிறீர்? சாட்சாத் விசுவகர்மாதான், போம்.

இயக்கு: உங்களையும் என்னையும், சின்னப்பு ஆசாரியாரையும் இயக்கிற முருகப் பெருமான்ர அருள் இருக்கேக்கை இதில் என்ன அதிசயம்? அதிருக்க ஐயா, ஒரு விசேடம்.

சிவா: அதிர்ச்சியான விஷயம் எண்டால் சொல்லாதையும். எனக்கு Heart Weak.

இயக்கு: அதிர்ச்சி தரும் சங்கதியல்ல ஐயா. அது ஆனந்தமான சங்கதி

சிவா: சொல்லும், சொல்லும்.

இயக்கு: குதிரை முகம் நீங்கிக் குமரனுக்குக் கோயிலெழுப்பினளே?

சிவா: மாருதப் பிரவல்லி .. ...... அவளின்ர கதையையும் எங்கடை மாவிட்டபுரக் கோயிற்கதையையும் சேர்த்து நாடகமாய் எழுதச் சொன்னனான். எழுதீட்டீரோ?

இயக்கு: ஐயாவின்ர ஆசையை நாடகம் எழுதியதோடை நிறுத்தாமல் அதை மேடையிலும் இண்டைக்கே, இன்னும் சில நிமிசங்களிலே மேடையேத்தப் போறன்.

சிவா: அப்படியோ? ஆனந்தம் ....... ஆனந்தம்! குதிரைவாகனத் திருவிழாவுக்கு ரொம்பப் பொருத்தமான நாடகந்தான். நான் தந்த சுப்பிரமணிய பராக்கிரமத்தில் வருகிற கதை, யாழ்ப்பாண வைபவமாலைக் கதை எல்லாம் சேர்த்திருப்பீரெண்டு நினைக்கிறன்.

இயக்கு: ஓம் ஐயா! என்ர 'மாருதப் பிரவல்லி நாடகம்' அற்புத சம்பவங்களோடை வரலாற்றுச் சம்பவங்களும் இணைஞ்சதுதான். போய் முன்வரிசையிலே இருந்து பாருங்கோ.

சிவா: சந்தோஷம். நன்றி.

(போகிறார்)

திரை

# காட்சி I

*(மேடையில் ஒற்றைத் தீபம். பின்னணியில் பாட்டு இசைக்கப் படுகின்றது)*

## பாட்டு

தேவிட்ட சாபத்தால் குதிரை போலும்
திரிந்திட்ட முகத்துடனே சோழன் செல்வி
பாவிட்ட காங்கேயன் துறையைச் சேர்ந்து
பகர்கிரி மலைசென்று தீர்த்தம் ஆடிக்
காவிட்ட மலர்போலும் அழகைப் பெற்றுக்
கனிந்துருகிக் கந்தனருள் நெஞ்சிற் கொண்டு
மாவிட்ட புரக்கோயில் அமைத்த செய்தி
மகிழ்வுடனே நாடகமாய் வழங்கு கின்றோம்.

*(தீபத்தின் ஒளி மறைகிறது. தென்பொதியை மலைச்சாரலில் ஒரு சோலை. குறப்பெண்கள் சிலர் ஆடிப் பாடுகின்றனர்)*

## பாடலும் ஆடலும்

தென்பொதியை மலைஎங்கள் வாழ்விடமாம் அம்மே!
தேன்தமிழின் பொழிவாலே செழிப்பதிது அம்மே!
மன்னுபுகழ் அகத்தியமா முனிவன்மலை அம்மே!
மாட்சிநிறை முருகனுடை ஆட்சிமலை அம்மே!

மான்புலியோ டொருதுறையில் நீரருந்தும் அம்மே!
மக்களிலே மேன்மையிழி விங்கிலையாம் அம்மே!
கான்வளரும் மரங்கள்தரும் கனிஅகழ்ந்த கிழங்கு
ககனமுட்டும் மலைத்தினையும் தேனுமுண்டு மகிழ்வோம்;

ஈசனருள் போலருவி தேசுடனே ஓடி
இருநிலத்துக் குழிகள்நிறைத் திடஅவற்றில் மூழ்கி
வாசமலர் மாலைகளை மார்பசையச் சூடி
மாதேவன் மைந்தனடி வாழ்த்திவணங் கிடுவோம்.

ஆசைஎமக் கதிகமில்லை அன்புமிகக் கொண்டோம்
ஆதிமுதல் இன்றுவரை நீதிவில கோம்நாம்
பேசரிய புகழ்மறவர் எங்கள்மணவாளர்
பேணிஉயிர் போலுரிமை காத்திடுவர் அம்மே

*(இவர்கள் ஆடல் முடிந்து மேடையிலிருந்து அகலக், கலிங்க நாட்டில் இளவரசி கனகசுந்தரியும், தோழியரும் அமைச்சர் மதிவாணரும் வருகிறார்கள்)*

மதி: இளவரசி, இளந்தென்றல் சுமந்துவரும் இனிய நறுமணம் மூக்கோடு உறவாடுகையில் எவ்வளவு ஆனந்தம்! "எங்களைப் பறித்துச் சூடுங்கள், சூடுங்கள்" என்று இன்முகங்காட்டி, எழில் முறுவல் பூண்டு வரவேற்கும் இனிய மலர்கள்........ மங்கையர்தம் உள்ளம் போல எத்தனை நிறங்கள், எத்துனை மாயங்கள் காட்டுகின்றன? பொதியை மலைச் சாரலின் அழகு என் நெஞ்சை அள்ளிக் கொண்டது.

கோமளா: கலிங்கத்து அமைச்சர் கவிஞராய் மாறியது எப்போது?

மதி: (சிரித்த வண்ணம்) தமிழ் மண்ணில் காலை வைத்தேனே, இல்லையோ? அந்தக் கணத்திலிருந்து நான் என்னை இழந்து பரவசனாகி விட்டேன்.

(கனகசுந்தரி ஏளனமாக நகைத்து மௌனிக்கிறாள்)

சுபா: அமைச்சரின் இளமைக்கனவுகள் குடிபோய் விட்டதை நரைத்த மீசைதான் வெளிப்படுத்துகின்றது. ஆனால் மனமும் வாக்குமோ........

கனக: சிரஞ்சீவி இளமைக்குக் கட்டியம் கூறுகின்றன.

சுபா: காரணம் என்ன தெரியுமோ?

கனக+கோமளா: என்ன? சொல்.

சுபா: அந்தக் காட்டுமிராண்டிச் சிறுமிகளின் ஆடலும் பாடலும் அமைச்சரது முதுமையைப் போக்கும் சஞ்சீவிகள் ஆகிவிட்டன.

கனக: சேச்சே! என்றாலும் தமிழ் நாட்டுப் பெண்கள் இவ்வளவு மோசமாகவா இருக்க வேண்டும்? பொது இடத்தில் ஆடுவதும் பாடுவதும்........ நான் சற்றும் எதிர்பார்க்வில்லை.

கோமளா: அவர்களின் சங்குக் காப்பும் கருமணி ஆரமும் பூவும் இலையும் பிணைந்த மாலையும்......... சுத்த அநாகரிகம்!

சுபா: இவர்கள்தாம் எங்கள் அமைச்சரின் கண்களுக்கு அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை!

(மூவரும் சிரிக்கின்றனர்)

மதி: அம்மா, நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் பழக்க வழக்கங்கள் வேறுபடுவது இயல்புதான். கள்ளம் கபடமற்ற சிறுமிகளின் உள்ளக் களிப்பு எவ்வித கட்டுப்பாடுமின்றி ஆடலாயும் பாடலாயும் வெளிப்படுகின்றது. அவ்வளவுதான். ஆனால் ஒழுக்கத்திலோ அவர்கள் நெருப்பு.

கனக: எப்படித் தெரியும்? ஞானதிருஷ்டியால் கண்டீர்களோ?

மதி: அல்ல. கலிங்க மண்ணிலே பிறந்த நான் என் கல்விக்காகத் தமிழ் நாடு வந்து பத்தாண்டுகள் வாழ்ந்தவன். அந்த அநுபவத்தில்தான் சொல்கிறேன்.

கோமளா: நீங்கள் சூடுகண்ட பூனை என்று சொல்லுங்கள். (சிரிப்பு)

மதி: (சற்று வேதனையுடன்) உங்கள் கேலிகளை என்னோடு நிறுத்திக் கொள்ளுங்கள் நீங்கள் இருப்பது உங்களைப் பொறுத்தவரை முற்றிலும் புதிய இடம்; நீங்கள் வந்ததோ தல யாத்திரை நோக்கமாக, இதை மறந்துவிடாதீர்கள். அண்மையிலுள்ள முருகன் ஆலயத்தின் சிவாசாரிமாரிடம் சென்று பூசைக்கான ஒழுங்குகளைச் செய்து வருகிறேன். அதுவரை இளவரசியாரும் தோழிமாரும் வாய்களுக்குக் கடிவாளம் இட்டுக் கொள்வது நல்லது. (போகிறார்)

கனக: பாருங்களடி, இந்தக் குரங்குமூகக் கிழவன் சொன்னதை எங்கள் வாய்களுக்குக் கடிவாளம் இடவேண்டுமாமே! நாங்கள் என்ன குதிரைகளா?

கோமளா: (தன் சுட்டுவிரலை மூக்கில் வைத்து) வாய் பேசக் கூடாது. கலிங்க நாட்டு இளவரசிக்கு முதலமைச்சர் மதிவாணர் இட்ட கட்டளை. (கனககசுந்தரி அவளை முறைத்துப் பார்க்கப் பயந்தவள்போல் வாய் புதைத்து) இல்லை, இல்லை, பணிவான வேண்டுகோள்.

கனக: நீ சொன்னது உண்மை. நாங்கள் வாய் பேசாமல் இருப்போம். ஆனால் ....... எங்கள் கால்களையும் கைகளையும். பயன்படுத்துவோம்.

சுயா: அதுவும் சரிதான். மந்திரியாரின் கணிப்பில் நாங்கள் குதிரைகள்தாமே!

கனக: வாருங்கள், இந்தச் சோலையை ஒருகை பார்ப்போம்.
(மூவருமாகச் செடிகொடிகளைப் பிய்த்துப் பிடுங்குவதும் மலர்களைக் கொய்து கசக்கித் தரையில் வீசுவதுமாகப் பல குறும்புச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். அவ்வேளை தண்டு, கமண்டலங்களுடன் அயக்கிரீவ முனிவர் அங்கு வந்து அவர்கள் செயலைக் கண்டு சீற்றம் கொள்கிறார்)

அயக்: பெண்களே!
(பெண்கள் அவர் அழைப்பைச் செவிமடுக்காது தங்களின் அழிவுச் செயல்களைத் தொடர்கின்றனர்)

அயக்: (முன்னரிலும் அதிக சீற்றத்துடன்) துஷ்டைகளே!
(மூவரும் முனிவர் பக்கம் திரும்பி முனிவரைக் கேலிகலந்த சிரிப்போடு பார்க்கின்றனர். மீண்டும் தங்கள் அழிவுச் செயலைத் தொடர்கின்றனர்)

அயக்: அடி, கனகசுந்தரி! கலிங்கத்து மன்னனின் கண்ணியத்தைக் கறைப்படுத்தும் காதகி!
(மூவரும் திகைக்கின்றனர், கனகசுந்தரி வியப்புக் கலையாத முகபாவத்தோடு, ஆனால் அச்சமின்றி முனிவர் முன்பு வந்து நிற்கிறாள்)

கனக: என் நாடும் பெயரும் உமக்கு எப்படித் தெரியும்?

அயக்: திரிகாலமும் உணர்ந்த அயக்கிரீவ முனிவன் நான். எனது ஞானதிருஷ்டியால் நான் காணும் காலங்களில் எங்கோ ஒரு மூலையில் தூசாக, துரும்பாகத் தோற்றுபவள் நீ. உன்னை நான் அறிவது அண்ட சராசரங்கள் அனைத்தையும் அறிவதற்குச் சமம் என்பது உன் நினைப்போ?

(கேலியாகச் சிரிக்கிறார்)

கனக: (கோபத்துடன்) சிரிக்காதீர். என் தந்தையின் அவைக்களத்திலே உம்மைப் போல் ஆயிரம் ஆயிரம் யாசகர்கள் தானத்துக்குக் கையேந்தி நிற்பதை நான் கண்டிருக்கிறேன்.

அயக்: ஆணவக்காரி!

கனக: (பெருமிதத்துடன்) கலிங்கத்தானின் குலக்கொழுந்து நான். காவி தரித்துக் காற்றை உண்டு காடு மேடெல்லாம் அலைகின்ற கபட சந்நியாசி நீர். உமக்கே இவ்வளவு ஆணவம் என்றால், எனக்கு எவ்வளவு ஆணவம் இருக்க வேண்டும்? நினைத்துப் பார்த்தீரா?

அயக்: (வெகுளிச் சிரிப்புச் சிரிக்கிறார்)

கனக: (முகத்தைச் சுழித்து) சே! இதுவும் ஒரு சிரிப்பா? நீர் சிரிக்கும் போது உமது முகம் நீண்டு, குதிரை கனைப்பது போல இருக்கிறது.

அயக்: (வெகுளியோடு) என் முகம் குதிரை முகமாகவா தோன்று கின்றது? நல்லது ..... நல்லது ..... உனது அடுத்த பிறவி சோழ மண்ணில் நிகழட்டும். சோழநாட்டுக் குறு நில மன்னன் ஒருவனின் மகளாக நீ பிறந்து. இடையில் உனக்குக் குதிரை முகம் உண்டாகி நீ வாழ்நாளெல்லாம் கண்ணீர் விடுவாய். எதை மனிதன் நினைக்கிறானோ அவன் அதுவே ஆகிறான். நீ குதிரையை நினைத்தாய். உன்முகம் அதுவே ஆகட்டும்

(இறுதி உரையாடலின் போது அங்கு வந்த மதிவாணர் ஓடி வந்து முனிவரின் காலடிகளில் வீழ்கிறார்)

மதி: ஸ்வாமி, ஸ்வாமி! எங்கள் இளவரசி குழந்தை. கள்ளங் கபடற்றவர். சிறுபிள்ளைத் தனத்தால் வாய்த்துடுக்காய் அவர் பேசியதை மன்னித்துச் சாப நிவிர்த்தி வழங்குங்கள். (திகைத்துக் குழப்பத்துடன் நிற்போரிடையே கனகசுந்தரி யைக் குறிப்பாகப் பார்க்கிறார்)

இளவரசி! எத்தகைய பயங்கர விளையாட்டை நடத்தி விட்டீர்கள்! வாருங்கள். முனிவர் பெருமானின் பாதங் களில் வீழ்ந்து மன்னிப்புக் கேளுங்கள்.

கனக: (ஓடி வந்து முனிவரின் காலடிகளில் மண்டியிட்டு நின்று) ஸ்...... வா...... மி..... என்னை மன்னியுங்கள்.

அயக்: நீ உன்னைப் பீடிக்கும் குதிரைமுக நோயினால் சிலகாலம் வருந்துவாய். ஒரு நாள் துறவி ஒருவன் உன் அரண்மனை வருவான் "கடல் கடந்து ஈழம் சென்று அங்குள்ள கீரி மலைத் தீர்த்தத்தில் நீராடி அருகில் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபட்டால் உன் குதிரை முகம் நீங்கும்" என்று அவன் அறிவுறுத்துவான். அவ்வாறே நீ சென்று நோய்மாறி முருகப் பெருமானுக்குக் கோயில் எழுப்புவாய். அந்தக் கோயில் 'மாவிட்டபுரம்' என்ற பெயரில் ஊழி உள்ளவரை நிலைக்கும். போ.

திரை

# காட்சி 2

(சிதம்பரம் திருக்கோயில் திருவெம்பாவைக் காலம், காலை அபிடேகம், பூசை, ஆராதனை யாவும் முடிவுற்று மூலஸ்தானம் பூட்டிய நிலையில் உள்ளது. எனினும் அடியார்கள் ஒருவர் இருவராக வந்தும் போய்க்கொண்டும் இருக்கின்றனர். மண்டபத்தின் மூலை ஒன்றில் சிவனடியார் ஒருவர் அமர்ந்திருந்து கண்மூடி அப்பர் சுவாமிகளின் நமச்சிவாயப் பதிகத்தை ஓதுகின்றார். அவ்வேளையில் திசையுக்கிர சோழனின் மகள் மாருதப் பிரவல்லியும் தோழி மங்கையர்க்கரசியும் அவ்விடம் வந்து அவர் பாடுவதைக் கூர்ந்து கவனிக்கின்றனர். ஈழமன்னன் உக்கிரசிங்கனும் அவன் அமைச்சன் வேல்மாறன், தளபதி பூபாலன், பிரதானி புவனேந்திரன் ஆகிய மூவரும் வணிகர் வேடத்தில் அவ்விடம் வந்து மறுபக்கம் நிற்கின்றனர். மாருதப் பிரவல்லியும் மங்கையர்க்கரசியும் உக்கிரசிங்கன் கூட்டத்தை முன்னரே அறிந்து கொண்டதற்கு அறிகுறியாக அவர்களை நோக்கி முறுவலிக்கின்றனர். உக்கிரசிங்கன் கூட்டமும் அவ்வாறே செய்கிறது. பின்பு இருபகுதியினரும் அமைதியுடனும் பயபத்தியுடனும் சிவஅடியாரின் பாடல்களைக் கேட்கின்றனர்)

நமச்சிவாயப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

(இரண்டாவது திருப்பாடல் முடியும் பொழுது சிவனடியார் கண்திறந்து மாருதப் பிரவல்லியையும் மங்கையர்க்கரசியையும் அடையாளம் கண்டு அவர்களை நோக்கி முறுவலிக்கின்றார். அவர்களும் மலர்ந்த முகத்துடன் அவருக்கு வணக்கம் செய்ய அவர்களைப் பின்பற்றி உக்கிரசிங்கன் கூட்டமும் வணக்கம் செலுத்துகின்றது)

சிவ: அனைவர்க்கும் ஆடல்வல்லான் அருள்புரிக. திசையுக்கிர சோழனின் செல்வத் திருமகளாரே, வல்லி நாச்சியாரே, பூசை நேரம் எப்போதோ நிறைவு பெற்றுவிட்டதே! உங்கள் விடுதிக்குத் திரும்பவில்லையா?

வல்லி: அங்குதான் எங்களுக்கு என்ன வேலை? இவ்வேளையில் இங்கு நின்றதும் நல்லதாய்ப் போயிற்று.

(உக்கிரசிங்கன் அர்த்த புஷ்டியுடன் முறுவலிக்கிறான்)

சிவ: எப்படி?

வல்லி: அப்பர் சுவாமிகளின் நமச்சிவாயத் திருப்பதிகத்தைத் தாங்கள் ஓதக்கேட்கும் பாக்கியம் கிடைத்ததே!

உக்கிர: (சற்று ஏமாற்றத்துடன்) ஆமாம்! நாங்களும் நேரம் போகாததால் இங்கு வந்தோம். இந்த அகாலவேளையிலும் நல்லதொரு பத்தி அநுபவம் எங்களுக்குக் கிடைத்தது.

சிவ: நீங்கள்?

உக்கிர: ஈழத்து வணிகர்கள். ஆண்டுதோறும் அப்பனின் திருவெம்பாவைக் காலத்தில் அபிடேகத்திற்குப் பாலும் தயிரும் நெய்யும் கொண்டு வரும் பணியைப் பூண்டவர்கள். இங்குள்ள வாகீசர் சத்திரத்திலே தங்கியிருக்கிறோம்.

வேல்: நேற்றும் இன்றும் நடைபெற்ற அபிடேக ஆராதனையின் போது முன்வரிசையில் ஆண்கள் பக்கத்தில் நின்றோமே? இளவரசியாரும் தோழியாரும் எங்களைக் கண்டிருப்பார்களே!

பூபா: காணவில்லையா?

மங்கை: நாங்கள் வந்தது வழிபாட்டிற்கு.

(உக்கிரசிங்கன் முதலாக அவன் கூட்டத்தினரின் முகங்களிலே ஏமாற்றம்)

வல்லி: ஸ்வாமி, ஒரு சிறு சந்தேகம், அதனைப் போக்கியருளுங்கள்.

சிவ: இளவரசியாரே, தங்கள் அறிவாற்றலைகளை நன்கறிவேன். தங்களுக்கே சந்தேகம் ஏற்படுகிறதென்றால் என்னால் அதைப் போக்குவது முடியும் காரியமா? எதற்கும் சொல்லுங்கள், முடியுமானால் சந்தேக நிவிர்த்தி செய்வேன்.

வல்லி: ஸ்வாமி, அப்பர் சுவாமிகள் பூக்களுள்ளே சிறந்தது தாமரை என்று பாடியருளியுள்ளார். இல்லையா?

சிவ: ஆமாம் ... ... ... ... ...

வல்லி: தாமரை உருவத்தாற் பெரியதுதான். நிறமும் மணமும் உடையதுதான். சிவபெருமானின் திருவடிகளைத் தாமரைகளாக உவமிப்பதையும் நான் அறிவேன்.

மங்கை: சிவன் மட்டுமோ? சாதாரண மானிடப் பெண்களையே புலவர்கள் வருணிக்கையில் அவர்களின் விழிகள், முகங்கள், கைகள், கால்களையெல்லாம் தாமரைகளாகவே உவமிப்பர்

உக்கிர: திருமால் தாமரைக் கண்ணன். ஏன்? ஆண்களில் அழகுவாய்ந்தவர்களின் அங்கங்களையும் தாமரையாய் உவமிப்பதுண்டு.

சிவ: வணிகரே, மங்கை! இளவரசியாரது ஐயத்தை அவர் வெளியிட வாய்ப்பு அளிக்கமாட்டீர்கள் போலிருக்கிறது.
(மங்கையும் உக்கிரசிங்கனும் வாயடங்குகின்றனர்)

வல்லி: சிவனுக்கு உகந்தது கொன்றைப்பூ, மஞ்சள் நிறமும் மங்கலமும் பொருந்திய மலர் அது, இன்னும் மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம் என்று மணமும் எழிலும் வாய்ந்த மலர்கள் வேறும் பல உள்ளன. மாலையாய்த் தொடுக்கவும் தாமரையிலும் மற்றைய மலர்களே வாய்ப்பானவை, இவ்வாறெல்லாம் இருக்கவும் தாமரைக்குத் தலைமை அளித்தது ஏன்?

சிவ: இது தான் உங்கள் ஐயமோ?

வல்லி: ஆமாம்.

சிவ: பொருத்தமான கேள்வி, நியாயமான ஐயம், வல்லி நாச்சியாரே, எங்கள் இருதயம் தாமரை மலரின் வடிவில் அமைந்தது, அதில் சிவபெருமான் மேலாகத் தோன்றி விளங்குகின்றார். சூரியன் வரவால் தாமரைகள் மலர்கின்றன. அடியார் தம் உள்ளங்களும் அவர் அருளால் மலர்கின்றன. இவை தாம் கமலத்துக்கு உண்டான கணிப்பு என்று கருதுகின்றேன்.

மங்கை: தாமரை மட்டுமோ? எல்லா மலர்களுமே சூரியன் வரவால் மலர்கின்றன.

வல்லி: நீ சற்றுப் பேசாதிரு மங்கை, ஸ்வாமி, எங்கள் இதயங்கள் தாமரை வடிவினவா என்பதை நான் அறியேன். இந்த ஓர் உருவகத்தால் மட்டும் தாமரைக்கு மகிமை வந்திருக்கும் என்று நான் நம்பவில்லை.

உக்கிர: ஸ்வாமி, அநுமதித்தால் நான் எனக்குத் தெரிந்த பதிலைக் கூறுகிறேன்.

சிவ: சொல்லுங்கள். இளவரசியார் எவரது சிந்தனைக்கும் வாய்ப் பூட்டுப் போடமாட்டார்.

உக்கிர: அப்படியா? நன்று என் சமாதானம் இதுதான் கலைமகளும் திருமகளும் படைப்பிறையாம் நான்முகனும் அமரும் மலர் தாமரை இவர்கள் மட்டுமோ? அருட்சத்தியாகிய பராசத்தியும் ஆயிரம் இதழ்த் தாமரையில் எழுந்தருளியுள்ளாள் என்பர்: எனவே மலர்களிலே தாமரை மேன்மை பெறுவதிலே தவறு என்ன?

வல்லி: (சிரித்தபடி) வணிகர் பெருந்தகை பதில் கூறப்போவதாக முதலிற் சொன்னார். பின்பு சமாதானம் கூறுவதாய்க் கீழி றங்கித் தெய்வங்கள் அமர்வதால் தாமரை சிறப்படைந்தது என்கிறார்.

உக்கிர: நான் சொன்னதில் என்ன தவறு?

வல்லி; தவறு என்று சொல்லவில்லையே! சமாதானம் சொல்வது வேறு வினாவிற்குத் தகுந்த பதில் இறுப்பது வேறு, என்றல்லவா சொன்னேன்?

உக்கிர; ஓஹோ!

சிவ: நல்லது, இளவரசியாரே, அப்பர் சுவாமிகளின் கூற்றுப் பொருத்தமற்றது என்பதா தங்கள் முடிபு?

வல்லி: (அச்சம் கொண்டவள் போல் கைகூப்பி) முருகா, முருகா! அப்பர் சுவாமிகளின் கூற்றுப் பொருத்தமற்றது என்றுரைக் கும் சிவாபராதத்தைச் செய்வேனோ? அவர் கூறியது முற்றி லும் பொருத்தம் என்று வைத்துக்கொண்டுதான் இந்த ஐய வினாவை எழுப்பினேன்.

வேல்: அப்படியானால் தங்கள் வினா ஐய வினா அல்ல. அறிவினா!

உக்கிர: வேல்மாறு! (வலக்கைச் சுட்டுவிரலை மூக்கில் வைத்து வேல் மாறனை அடக்க அவன் அடங்குகிறான்)

மங்கை: தாமரையே பூக்களிலே தலைமையானது என்ற கருத்து இள வரசியாருக்கு முன்னரே உண்டு.

சிவ: நீங்கள் இந்த முடிவுக்கு வர என்ன ஆதாரம்? இளவரசியாரே, அதனைக் கூறுங்கள்.

வல்லி: சொல்கிறேன், தாமரைக் கொடியின் வேர் சேற்றின் அடியில் புதைந்து கிடக்கின்றது. கொடிகள் நீரின் நடுவிற் கிடக்கின்றன. இலைகள் நீரின் மேற்பரப்பில் உள்ளன. ஆனால் இவற்றையெல்லாம் கடந்து மேல்வந்து சூரியனின் ஒளிக்குக் காத்திருந்து மலர்கிறது தாமரை.

வேல்: இதனால் தாமரைக்கு என்ன மேன்மை?

வல்லி: சேறுதான் ஆணவம். ஆணவ முனைப்புடைய ஆன்மாக்கள் ஆணவத்தால் மூடுண்டு கிடைப்பதைத் தாமரையின் வேர்ப் பகுதி நினைவூட்டவில்லையா?
( எல்லோரும் மௌனமாய் இருக்கின்றனர் )

வல்லி: ஸ்வாமி, நான் சொல்வது .. ..

சிவ: உம் .. .. ... . அப்பாற் சொல்லுங்கள்.

வல்லி: நீரின் இடையிற் கிடக்கும் தண்டுகளோ ஆணவ முனைப்பினின்றும் விடுபட முயன்றும் திருவருளின் ஒளி தமக்குக் கிடைக்காமையால் பிரபஞ்சத்தில் உழல்கின்ற ஆன்மாக்களை நினைவுபடுத்துகின்றன.

சிவ: நீர் மேற்கிடக்கும் இலைகள் திருவருளின் ஒளியானது தம்மீது விழுவதால் உலக வாழ்வோடு ஒட்டியும் ஒட்டாதும் உள்ள பக்குவ ஆன்மாக்களுக்குக் குறியீடுகள் என்று கொள்ளலாமோ?

வல்லி: சரியாகச் சொன்னீர்கள். தாமரை மலரோ பிரபஞ்சத் தொடர்பினின்று விடுபட்டுத் திருவருளின் வழிப்பட்டு முத்தியின்பத்தினை இப்பிறப்பிலேயே அநுபவிக்கும் சீவன்முத்தர்களை ஒத்துள்ளது. இந்த நினைவும் முடிவுந்தான், ஆன்மாக்களில் அதிபக்குவரான அப்பர் சுவாமிகளைத் தாமரைக்கு முதன்மை அளிக்க வைத்தன போலும்.

(சிவனடியார், உக்கிரசிங்கன், மங்கையர்க்கரசி, வேல்மாறன் முதலியோர் பராட்டு முகமாக ஆஹாகாரம் செய்கின்றனர்).

சிவ: நாச்சியாரே, சிவதத்துவம், ஆன்மதத்துவம், பிரபஞ்சதத்துவம் அனைத்துமே பளிங்குத் தெளிவாக உங்களால் விளங்கிக் கொள்ளப்படுகின்றன. முருகன் அடியாரான உங்களுக்குச் சிவன்பற்றிய பேருண்மைகள் புலனாவது முன்னைத் தவப் பயன்தான். ஐயம் இல்லை.

வல்லி: ஸ்வாமி, நான் சிறுமி. சிவனையும் முருகனுகவே சித்தத்தில் பாவித்து வழிபடுபவள். ஆடல் அழகனை ஆராதிக்கும் போதெல்லாம் அவனில் முருகனையே கண்டு முருகா, முருகா, என்று ஒதுவதே என் வழக்கம்.

சிவ: காலாதீதனும் குணாதீதனும், உருவங்கடந்த ஒளிப் பிழம்புமான பெருமானை எவரும் எப்பெயர் கொண்டு அழைத்து வழிபட்டாலும் அவர்களுக்கு அவர்கள் விரும்பும் வடிவில் அவன் தோன்றி அருள் புரிவான். தங்களின் பக்குவநிலை என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது.

வல்லி: மீண்டும் என்னை இவ்வாறெல்லாம்புகழாதீர்கள். தாமரையின் நிலை எனக்கு இன்னும் சித்திக்கவில்லை. சித்திக்க நான் முயன்றதும் இல்லை. (உக்கிரசிங்கனை நோக்கிய வண்ணம்) என்னைச் சூழ்ந்துள்ள உறவுகளை, அழகுகளை, இன்பங்களை நான் மிகுதியும் நேசிக்கிறேன். இவற்றை என்றுவது துறந்திட முடியுமோ? எனக்குத் தெரியவில்லை..........

(உக்கிரசிங்கனின் முகம் மலர்கிறது. அவன் ஆழ்ந்த அன்போடு வல்லியை நோக்குகிறுன்)

மங்கை: இளவரசியாரே, நேரம் ஆகிறது. பெற்றோர் தேடுவர்.

வல்லி: நல்லது ஸ்வாமி (சிவனடியார், உக்கிரசிங்கன், அவன் கூட்டத்தினர் ஆகியோரை முகம் மலர நோக்கி) நாங்கள் சென்று வருகிறோம்.

(சிவனடியார் ஆசி கூறும் பாவத்தில் கையைத் உயர்த்துகிறார் உக்கிரசிங்கனும் கூட்டத்தினரும் சிவனடியாரை வணங்கிவிட்டு வல்லி, மங்கையைத் தொடர்கின்றனர்)

உக்கிர: இளவரசி (வல்லி திரும்பி 'ஏன்' என்ற பாவத்தில் நிற்கிறுள்) முந்தா நேற்றும், நேற்றும் ஆடல் அழகனின் அபிடேக ஆராதனையின் போது, தங்களையும் காணும் பாக்கியம் கிட்டியது அவ்வேளைகளில் தங்களின் புற அழகுதான் என் கண்களுக்குத் தோற்றியது.

மங்கை: (சற்றுக் கேலியாக) இப்பொழுது அக அழகும் புலனாகியதோ? (வல்லி மங்கையை உறுத்து நோக்க அவள் அடங்கிப் போகிறாள்)

உக்கிர: அக அழகு மட்டுமல்ல அறிவழகையும், கண்டேன். மெய்ம் மறந்து போனேன்; முன்னோர் சொன்ன 'கல்வி அழகே அழகு என்ற உண்மையை உணர்ந்து கொண்டேன்.
(உக்கிரசிங்கன் திரும்பிக் கண்சாடை காட்ட வேல்மாறன் முதலியோர் மெல்ல வெளியேறுகின்றனர்)

வல்லி: உண்கரே, தங்களை முன் பின் அறியேன். ஆனால் ...... உங்களைக் காணும் போதும் உங்கள் வார்த்தைகளைக் கேட்கும் போதும் என்னுள்ளே ஏதோ ஒரு பரவச உணர்வு உண்டாகின்றது. இது ஏன் என்று எனக்கு விளங்கவில்லை

மங்கை: நாச்சியாருக்கு விளங்காதது எனக்கு விளங்கி விட்டது!

உக்கிர: நான் பெரும் பாக்கியசாலி.

வல்லி: ஈழத்துக்கு எப்போது திரும்புகிறீர்கள்?

உக்கிர: இன்னும் இருவாரங்கள் இருப்பேன். தில்லைக் கூத்தனின் திருவாதிரைத் திருநாளில் ஆருத்திரா தரிசனம் பெற்ற பின்னர், சில வணிக விடயங்களையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஏன் கேட்டீர்கள்?

வல்லி: (மௌனமாக நாணி நிற்கிறாள்)

உக்கிர: வாகீசர் சத்திரத்தில் மாலைப் பொழுதுகளில் அறிவாற்றல் நிறைந்த பெண்மணி ஒருவருடன் உயர்ந்த பொருள்கள் பற்றி உரையாடும் பாக்கியத்தை (சந்நிதானம் நோக்கித் திரும்பி இருகரங்களும் கூப்பி) பெருமானே! எனக்கு அருள்வாய்.

மாருத: (முறுவலித்து) உங்கள் பாக்கியம் எனக்கும் பாக்கியமே.

மங்கை: இளவரசியாரே, இது என்ன? பெற்றோரின் சந்தேகப் பார்வைகளுக்கும் குறுக்குக் கேள்விகளுக்கும்... ......

வல்லி: உன் சமயோசித சாதுரியத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. வா,
(உக்கிரசிங்கன் பக்கம் திரும்பிச் செல்வதாகச் சைகைகாட்டி விட்டுப் போகிறாள்; மங்கை அவளைத் தொடர்கிறாள். உக்கிரசிங்கன் அவர்கள் செல்லும் திசையையே நோக்கி நிற்கிறான்)

திரை

## காட்சி 3

(சோழ நாட்டில் வாகீசர் சத்திரம், உக்கிரசிங்கனும், அவன் கூட்டத்தினரும் அந்தச் சத்திரத்தில் ஓர் அறையிலே காணப்படுகின்றனர். பீடம் ஒன்றில் தங்கத்தால் உருவாக்கி வைரங்கள் பதித்த ஞானவேல் ஒளிகான்ற படி காட்சி தருகின்றது. அதன் முன்பு தூண்டாமணி விளக்கு ஒன்று சுடர்விடுகின்றது. மேடையில் ஒளி வந்ததும் அதுவரை கூப்பிய கரங்களோடு உறைநிலையில் வேல் முன்பு நின்ற உக்கிரசிங்கன் பேசத் தொடங்குகின்றான்)

உக்கிர: முருகா! உன் அத்தனாகிய எம்பெருமானுக்குப் பாலும் தயிரும் நெய்யும் குடம் குடமாய்க் கொணர்ந்து, தில்லைப் பதியிலே அந்தணப் பெருமக்களிடம் அர்ப்பணித்தேன். மார்கழித் திருவாதிரைத் திருநாளிலே ஆடல் அழகனின் அபிடேகத் திருக்கோலத்தையும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன் நான் அரசாளும் ஈழத்தின் தலைநகராகிய கதிரைமலையிலே எழுந்தருளுவிக்க உன்னைத் தங்கத்தில் வேலாக வடிப்பித்து எடுத்துச் செல்கின்றேன். எல்லாம் நின் அருள் எனக்கு ஒரு குறையும் இல்லை.
(வேல்மாறன் மெல்லச் சிரிக்கிறான்)

உக்கிர: வேல்மாறா! நீ சிரிப்பதன் அர்த்தம்?

வேல்: மஹாராஜா! தெய்வத்தின் முன் பொய்சொல்லக் கூடாது என்பார்கள்.

உக்கிர: நீ என்ன சொல்கிறாய்? நான் பொய் சொன்னேனா?

பூபா: மன்னர் பெருமானே! நாங்கள் தங்களின், கண்களும் கவசங்களும் மட்டும் அல்ல. தங்கள் உயிரும் உள்ளமும் தாங்களே. நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை;

உக்கிர: (சலிப்பும் சினமுமாய்) ஓ! பூடகமாக இது என்ன பேச்சு?

வேல்: தங்களுக்கு ஒரு குறையும் இல்லை என்று பொய்தானே சொன்னீர்கள்?

உக்கிர: (முகத்தில் அசட்டுக் களையுடன்) ஆமாம், நான் சொன்னது பொய்தான். (திரும்பி வேலை நோக்கிக் கன்னத்தில் இரு கைகளாலும் தட்டியபடி) முருகா! என்னை மன்னித்தருள்,
(அமைதியின்றி அங்கும் இங்கும் நடக்கிறான்)
திருவெம்பாவைத்தினத்திலிருந்து இன்றுவரை நாள்தோறும்

மாருதப்பிரவல்லியைப் பலமுறை சந்தித்தேன், என் உள்ளத்திலே அவள் மீது எழுந்த அன்பு கணந்தோறும் வளர்பிறை போல வளர்ந்த வண்ணமே உள்ளது. அவளை அடைய முடியுமோ, முடியாதோ என்ற போராட்டம் ஆழமானதொரு குறையாக என்னை அரித்துக் கொண்டே இருப்பது உண்மையே.

புவனே: உங்கள் இருவருக்குமிடையே உண்டான அன்பு இருக்கிறதே? அது மிகவும் புதுமையானது மஹாராஜா!

வேல்: நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு வேளையிலும் ஏதோ பட்டிமண்டபம் நடக்கிறதோ என்ற எண்ணந்தான் எங்களுக்கு உண்டாகிறது.

பூபா: நாழிகை பலவாக ஒரே பேச்சுத்தான்; காரசாரமான உரையாடல்தான்.

உக்கிர: (மெல்லச் சிரித்து) வேறு எதைத்தான் எங்களிடம் எதிர்பார்க்கின்றீர்கள்?

புவனே: (நாணிக் கோணி) என் அன்பே! (திரும்பிப் பூபாலனைப் பார்க்கிறான்)

பூபா: என் ஆருயிரே! (இருவரும் ஒருவர் அருகிலே மற்றவர் சென்று கைகளைப் பற்றுகின்றனர்)

வேல்: ஆஹா! (கைகளைத் தட்டி) உண்மையான காதல் என்றால் இப்படியல்லவா கூடிக் குலாவ வேண்டும்?

உக்கிர: (அருவருப்பை முகத்தில் காட்டி) சே! இது மகாமட்டரகமான காதல்.

வேல்: மன்னிக்க வேண்டும், வேந்தே! முதன் முறையாக நீங்கள் இருவரும் சந்தித்த பொழுது ஒருவரை ஒருவர் நோக்கிய நோக்கிருக்கிறதே?

புவனே: அண்ணலின் விழிவாளும் அணங்கொத்தாள் விழிவேலும் ஒன்றை ஒன்று மோதின.

பூபா: செருக்களத்திலே சினக்களிற்றையும் கீறிக் கிழித்திடும் எம் வேந்தர் மங்கை நல்லாளின் மயக்க விழி வீச்சிற்கு ஆற்றாது சரணடைந்தார்.

வேல்: தமை இழந்தார்,

பூபா; அவளுக்கே பித்தரானார்,

உக்கிர: (கம்பீரமாய்த் தலை நிமிர்ந்து) இப்பொழுதும் என்ன? அவளுக்கு நான் என்றும் பித்தன்தான் ...........
ஆனால் என் பித்துக்கு காரணம் அவள் அழகு ஒன்றே என்று நீங்கள் நினைத்தால் அது முற்றிலும் தவறு.

வேல்: எங்கள் மன்னர், ஆட்சியில் நடுவு நிலையும் பகைவரில் இரக்கமின்மையும் காட்டுபவர் என்பது உண்மையே. ஆனால் அழகிற்கு அடிபணிந்து கனிந்திடும் கலையுள்ளமும் வாய்ந்தவர் என்பதையும் நாங்கள் அறிவோம்.

உக்கிர: நான் மாருதப்பிரவல்லி என்ற அங்க சுந்தரியின் அழகிலே கனிந்ததை மறுக்கவில்லை. ஆனால் நாட்செல்லச் செல்ல அவளின் பண்புகளும், அறிவாற்றல்களுமே என்னை அதிகமாக ஆக்கிரமித்துக் கொண்டன,

பூபா: ஆச்சரியந்தான்.

உக்கிர: இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. சாசுவதமற்ற அழகிலும் நிலைபேறான அறிவை, அன்பை, பண்பை ஆராதிப்பது புத்தசாலித்தனம் அல்லவா? அழகு நல்லதுதான். ஆனால் நல்லதெல்லாம் புறக்கண்களுக்கு அழகாகத் தோன்ற வேண்டும் என்ற அவசியம் இல்லை.

புவனே: உங்களின் மனப்பக்குவம் சோழன் மகளுக்கும் இருக்குமோ என்பது...... ......

உக்கிர: அதில் என்ன சந்தேகம்?

வேல்: ''தாமரையின் நிலை எனக்குச் சித்திக்கவில்லை. சித்திக்க நான் முயலவும் இல்லை. என்னைச் சூழ்ந்துள்ள உறவுகளை, அழகுகளை, இன்பங்களை நான் மிகுதியும் நேசிக்கிறேன்'' என்று அன்று அவர் சிவனடியார் முன்பு சொன்னதை மறந்து விட்டீர்களா?''

உக்கிர: நான் மறக்கவில்லை. ஆனால் அவள் அறிவாளி, காலப்போக்கில் அழகின் நிலையின்மையை அவள் உணராது போகாள்.

பூபா: அது என்னவோ? இளவரசி தாய் தந்தையருக்குச் சாக்குப் போக்குச் சொல்லி இங்கு ஒவ்வொரு மாலைப் பொழுதும் வருவதும், வணிகர் வேடத்தில் தாங்கள் அவருக்காக ஆவலோடு காத்திருப்பதும் ...........

வேல்: வெறும் அறிவுக் காதலால் மட்டும் என்று எங்களால் முடிவு செய்யக் கூடவில்லை.

புவனே: மஹாராஜா, கவனம், வேடரகசியங்கள் வெட்ட வெளியானல் ..........?

உக்கிர: உஷ்! இரைந்து பேசாதே. இந்த நாட்டுச் சுவர்களுக்கும் செவிகள் உண்டு.

(மாருதப்பிரவல்லியும் மங்கையர்க்கரசியும் ஆவேசத்தோடு உள்நுழைகிருர்கள்)

மங்கை: எங்களுக்கும் செவிகள் இருக்கின்றன.

(உக்கிரசிங்கனும் வேல்மாறன் முதலிய மூவரும் திடுக்ஹற்றுக் குரல் வந்த திசையை நோக்கி அதிர்ச்சியுறுகின்றனர், சில கணங்களில் வேல்மாறனும் மற்றிருவரும் அறையை விட்டு மெல்ல நழுவ, உக்கிரசிங்கனும், மாருதப்பிரவல்லியும் மங்கையர்க்கரசியுமே எஞ்சுகின்றனர் மாருதப்பிரவல்லியின் விழிகளிலே கண்ணீர் ததும்பி நிற்கிறது)

உக்கிர: மங்கை............அங் .. – க.........சுந்தரி

வல்லி: என் பெயர் மாருதப்பிரவல்லி

உக்கிர: அது பெரிய பெயர். அங்க சுந்தரி என்ற காரணப் பெயர்தான் எனக்குப் பிடித்திருக்கிறது.

மங்கை: பிடிக்கும்! பிடிக்கும்! இயல்புத் தகுதியை மறைத்து ஏதோ காரணத்தால் வணிகர் வேடம் பூண்டவருக்குக் காரியத்திலும் காரணந்தான் முக்கியம்.

உக்கிர: (சமாளித்தபடி) சரி...... மாருதப்பிர ......வேண்டாமே! வல்லி என்று சுருக்கமாகவே அழைக்கின்றேன். என் அன்பு வல்லி! உன் பற்களின் முத்துக்களேயே நான் காணவேண்டும் கண்களின் முத்துக்களை அல்ல.

வல்லி: (தளதளத்த குரலில்) இனி என் கண்கள் முத்தை அல்ல; மழையைத்தான் பொழியப் போகின்றன. (அழுகிருள்)

உக்கிர: (அது கண்டு ஆற்ருது விரைந்து சென்று அவளின் தோளிலே கைவைத்து) வல்லி ... அழாதே, என்னல் தாங்க முடியாது. நான் செய்த பிழைதான் என்ன?

வல்லி: ஈழநாட்டின் வேந்தரான தாங்கள் வணிகராக வேடம் போட்டது ஏன்?

உக்கிர: (சிரித்து) ஓ! அதுவா? கேளுங்கள். நான் தமிழ் பேசும் தமிழ் நிலத்துக்குத் தலைவனாயினும் சிங்கள மன்னரின் இரத்தமும் என்னில் ஓடுகிறது. இலங்கையின் முதல் மன்னனான விஜயனின் பரம்பரையில் வந்தவன் நான். இந்நிலையில் சோழநாடு என்னை ஏற்குமா என்ற தயக்கந்தான். வேறொன்றும் இல்லை. உயிரால், உள்ளத்தால், உணர்வால் நான் என்றும் தமிழனே. ஆனால்—.. இந்த உண்மையை எத்தனைபேர் விளங்கிக் கொள்வார்கள்? ஆடல் அழகனின் ஆருத்திரா தரிசனத்தைப் பெறவேண்டும் என்ற வேட்கை தான் என்னை வணிகனாக வேடம் பூண வைத்தது.

மங்கை: நீங்கள் சாதாரணமாகச் சொல்லி விட்டீர்கள். ஆனால் உங்கள் செயல் விளைக்கப் போகும் குழப்பம்—......

உக்கிர: குழப்பங்கள், சோதனைகள், போராட்டங்கள் இழப்புக்கள், என்ற முள்வேலிகளின் நடுவிலேதான் காதற்பயிர் செழித்து வளரும்.

வல்லி: நீங்கள் வணிகராய் இருந்திருந்தால் இவையாவும் எனக்கும் கூடச் சாதாரணமானவையாகவே தோன்றியிருக்கும். ஆனால் நீங்களோ மன்னர். அந்நியர். என் தந்தை எங்கள் திருமணத்திற்கு ஒப்புதல் தரவே மாட்டார். இனப்பெருமையே போற்றும் மனப்பண்பு வாய்ந்தவர் அவர்.

உக்கிர: (கம்பீரமாக) அதையுந்தான் பார்த்து விடுவோமே!
(வல்லியும் மங்கையும் வியப்புடனும் திகைப்புடனும் உக்கிர சிங்கனை நோக்குகிறார்கள்)

உக்கிர: அதிர்ச்சி அடையாதீர்கள். நாளைக்கு என் அமைச்சன் வேல் மாறனும் தளபதி பூபாலனும் வல்லியின் தந்தையிடம் பெண் கேட்க வருவார்கள்.

வல்லி: தந்தை மறுத்தால்— — ...—?

உக்கிர: (வல்லியின் கண்ணீரைத் துடைத்து) பெண்மை கொடிபோலத் துவண்டு விடுவதற்கு உரியதல்ல. அது மலைபோல உறுதியும் வாய்த்திருக்க வேண்டும். வல்லி, இந்த வேற்பெருமானும் உன் உயிர்த்தோழி மங்கையர்க்கரசியும் சாட்சி. என்றோ ஒருநாள் உன்னை என் இனியாளாய் அடைந்தே தீருவேன்.

வல்லி: (மகிழ்வுடன்) தங்களின் உறுதியை நானும் கடைப்பிடிப்பேன். எவ்வளவு காலம் செல்லினும் எத்தனை சோதனைகள் வரினும் இனி நான் கலங்கேன். அவற்றையெல்லாம் கடந்து தங்களை அடையக் காத்திருப்பேன். இதுவே என் தவம்.

திரை

# காட்சி 4

(மெல்லிய வெளிச்சம் மேடையில் தோன்றுகிறது. கப்பல் ஒன்று அலைகள் மீது அசைந்தாடிச் செல்வது போலவும் கப்பல் செலுத்துவோர் கப்பலின் மேல்தளத்தில் ஆங்காங்கே நின்று நெற்றியில் கை வைத்துத் தூரத்தே பார்வையை ஓட்டுவது போலவும் பாவனை, கப்பலின் முன்னணியத்தில் உக்கிரசிங்கனும் பிரதானிகளும் நிழல் வடிவங்களாகத் தோற்றுகின்றனர். திடீரென்று கப்பலின் மீகாமன் வலக்கரத்தை மேலே உயர்த்திய வண்ணம் பாடத் தொடங்குகின்றான் அவனைத் தொடர்ந்து அதே பாவனையில் கப்பலோட்டிகளும் பாடுகின்றனர்)

பாட்டு

ஏலேலோ தாத்தையா ஏல ஏலோ தாத்தையா ஏலேலேலோ
ஏலேலோ தாத்தையா ஏல ஏலோ தாத்தையா ஏலேலோ

கொண்டல் வானப்பரப்பை மூடிக் கொட்டம் அடிக்குது
கூதல் உடலை ஊசிபோலக் குத்திக் குடையுது
மிண்டி நெருங்கிக் குமுறி அலைகள் மேலே எழுகுது
மிச்சம் சொச்சம் இல்லாமலே திசையள் மறையுது.
(ஏலேலோ...... )

ஆச்சி அப்பு அன்பு மனுசி அருமைப் பிள்ளையள்
அந்தக் கரையில் எங்கள் வரவுக் குந்தரிக்கிறார்
நாச்சி யரே! தாயே கடலே! நல்ல மனசோடே
நாங்கள் விரைவாய்க் கரையைச்சேர உதவுவாயெணை.
(ஏலேலோ........)

எங்கள் ராசா சேமமாகக் கரையை அடையவும்
எங்கள் உடலைப் பாயில் கிடத்தி ஒய்வு கொள்ளவும்
தங்க மனசுத் தாயே! கொஞ்சம் தயவு காட்டெணை
தரையை விரைந்து கப்பல்போக உதவுவாயெணை
(ஏலேலோ ---)

காச்சிச் சோறு கறியளோடை காத்திருப்பினம்
கள்ளு நிறைய முட்டியிலே வைச்சிருப்பினம்
வீச்சுக் காற்று மூசுதடி விரைந்தே செல்லுவாய்
வெள்ளி முளைக்கக் கரையைச் சேர விரைந்தே ஓடுவாய்.
(ஏலேலோ ... ---)

(பின்னணியில் 'ஏலேலோ' விட்டு விட்டு மெல்லக் கேட்டுக் கொண்டிருக்க இந்த உரையாடல் நிகழும்)

வேல்: மஹாராஜா;

உக்கிர: (சிந்தனையிருந்து விடுபட்டவனாய்த் திடுக்குற்று) ஆய்!

வேல்: கப்பல் செலுத்துவோரின் பாட்டைக் கேட்டீர்களா?

உக்கிர: 'அப்பு, ஆச்சி, அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள்........' இவர்கள் தங்களின் வரவுக்காகக் காத்திருப்பார்களாம். உண் மைதான். இவர்களைப் போலப் பாக்கியசாலிகள் யார்?

பூபா: பாவம் ஏழைகள்! குளிரையும் கொடுங்கடலையும் தாண்டி விடவேண்டும் என்ற அந்தரம் அவர்களுக்கு, அவர்களைப் போய்ப் பாக்கியசாலிகள் என்கிறீர்களே!

உக்கிர; பூபாலா! அவர்களின் பாடுகளுக்கும் பரிதவிப்புக்களுக்கும் பின்பு பரிவுகாட்ட எத்தனையோ உறவுகள் .. பஞ்சணையும் பாலன்னமும் ஏவியதைத் தலையால் ஏற்று உடன் முடிக்க ஏவலரும் இருப்பதால் மட்டும் வாழ்வு நிறைவு பெறுவதில்லை.

புவனே: மன்னருக்கு இந்த ஏழை எளியவர்கள் மீது பொறாமை போலிருக்கிறது.

உக்கிர: நிச்சயமாகப் பொறாமைதான்: அன்புக்கு உறவு கிடைக் காத அபாக்கியன் நான். அந்தஸ்தும் அதிகாரமும் என் அடிகளை வருடுவதால் என் வாழ்வு நிறைவடையாது புவனேந்திரா!
(எல்லோரும் மௌனம் சாதிக்கிறார்கள்)

வேல்: மஹாராஜா! திசையுக்கிர சோழனின் கொடிய சொற்களை இன்னமும் நினைவில் வைத்து மறுகுகின்றீர்கள். "சுண்டைக் காய் அளவு சிறியது அந்த ஈழம். தமிழைப் பேசி விடுவதால் மட்டும் உக்கிரசிங்கன் தமிழனாகி விடமுடியாது. அவனுக்கு என் மகளை மணஞ்செய்து கொடுக்க இசையேன்'' என்று அவன் கூறிய திமிரான வார்த்தைகளால் உங்கள் மனம் புண்பட்டு விட்டது. அப்படித்தானே?

பூபா: அவன் அவ்வாறு சொன்னதற்கு நான் விட்டேனா? "மன்னா, சிங்கம் என்று பெயர் தரிப்பதெல்லாம் சிங்கம் ஆகிவிடாது. திசையுக்கிர சோழன் என்ற நாமத்திலே சோழன் என்ற பெயரும் ஒட்டியிருப்பதால் நீர் சோழனாகிவிட முடியாது, அவன் கீழ்க் குறுநில மன்னராய்ச் சிறுநிலம் ஆள்பவர் நீர் எவருக்கும் அடிப்படாது தமது ஆற்றலாலே தமக்கென ஓர் அரசை அமைத்துக் கொண்ட எங்கள் அரசருக்கு நீர் சமா னமாகிவிட மாட்டீர்'' என்றேனா? உடனே தீயில் பட்ட செந்தாமரையாய் அவன் முகம் கருகியதை நீங்கள் பார்த் திருக்க வேண்டும். (சிரிக்கிறான்)

உக்கிர: பூபாலா, நீ எதைச் சொன்னாலும் என் மனம் ஆறுதல் கொள்ளாது. திசையுக்கிர சோழனின் சின்னத்தனமான பேச்சுக்களால் என் மனம் பாதிக்கப்படவில்லை. ஏன் தெரியுமா? அவன் வல்லியின் அப்பன்.

வேல்: அரசே, மாருதப்பிரவல்லியை இன்னுமா ---?

உக்கிர: என்றும் நினைப்பேன். உடலில் உயிரும் நெஞ்சில் நினைவும் உள்ளவரை அவளை நினைத்துக் கொண்டே இருப்பேன். (வேல்மாறன் முதலிய மூவரும் வியப்போடு உக்கிரசிங்கனை நோக்குகின்றனர். உக்கிரசிங்கன் புவனேந்திரனின் தோளிலே கையை ஊன்றி மெல்ல எழுந்திருக்கிறான். அங்கும் இங்கும் தன் சிந்தனையின் அறிகுறியாக நடக்கிறான். பின் நின்று ஒவ்வொரு சொல்லாக அளந்து கூறுகின்றான்)

உக்கிர: இதைக்கேளுங்கள். என் தந்தை மறைந்த போது நான் பதினாறு வயது இளைஞன். என் தாயின் முகத்தையே காணாத அபாக்கியன் நான். இத்தகைய அநாதைத் தனத்தை நான். உணரமுன்னரே என் தோள்களிலே இராச்சியபாரம் மலையாய் வந்து அமர்ந்து கொண்டது.

அரசியற் சதுரங்கத்தில் என்னைப் பகடையாக்க முயன்றோர் பலர். என்னிடமிருந்து. அரசாட்சியைக் கவர முயன்றோரும் பலர். இவர்களை அடக்கி ஒடுக்கி என்னை நிலைப்படுத்த இரக்கத்தைத் துறந்தேன். பாச பந்தங்களுக்குப் பிரியாவிடையளித்தேன். என் நெஞ்சப் பாறையிலே மோதமுயன்ற வன்னியர் வீழ்ந்தனர். ஆட்சிப் போட்டிகள் ஒடுங்கின. இன்று என்னை எதிர்ப்பார் இலங்கையில் எவரும் இல்லை.

பூபா: அரசர் உரைத்தது அனைத்தும் சில தினங்களுக்கு முன் உண்மையாகவே இருந்தது. தங்கள் உள்ளமாகிய நெக்குவிடாப்பாறை இன்று நெக்கு விட்டு நெகிழ்ந்து போயிற்று

புவனே: மெழுகுப் பாறையாய்க் குழைந்து விட்டது.

வேல்: குழைந்தது மட்டுமல்ல. கட்டழகுக் காரிகை வல்லியின் கடைக்கண் பார்வையிலே உருகி ஓடவும் தொடங்கிவிட்டது.

உக்கிர: (சிறிது சீற்றத்துடன்) அழகு! அழகு! அழகு! பேதைகளே! நான் அன்று சொன்னதை இன்னும் நீங்கள் நம்பவில்லையா? என் நெஞ்சப் பாறையின் ஒரு பகுதி இன்னும் மென்மை யாகவே இருக்கிறது. அந்த மென்மையை நிரந்தரமாக்கிக் கொள்ள எனக்கு வல்லியின் தூய அன்பு வேண்டும். அரசி யலும் அர்த்தமற்ற பேச்சுக்களுமாய் நாள்களைக் கழித்து அலுத்து விட்டேன். என் அலுப்பு நீங்கி என் உள்ளம் எழுச் சியும் மலர்ச்சியும் பெற அவளின் அறிவார்ந்த கருத்துரை களும் வேண்டும்.

வேல்: இதற்கு, வல்லி விரும்பியது போல நீங்கள் வணிகராக இருந்து விடுவதே நல்லது!

உக்கிர: இல்லை.......... நான் அரசன், என் மக்களின் காவலன்; அவர்கள் என் உடல். வல்லி என் உயிர். இரண்டும் எனக்கு வேண்டும்.

(மூவரும் மௌனம்)

மீகாமன்: டேய்! விடிவெள்ளி பூக்குது. இன்னும் கொஞ்ச நேரத்திலை பலபலவெண்டு விடுஞ்சுபோம்; அதோ காசாத்துறைக் கரை யும் தெரியுது. நங்கூரத்தை எடுத்து ஆயத்தமாகுங்கோ.

திரை



## காட்சி 5

*(மேடையில் ஒளி மலர்கிறது. முருகனின் விக்கிரகத்தை நோக்கியபடி (சபைக்குப் புறங்காட்டி) மாருதப்பிரவல்லி அமர்ந்திருக்கிருள். அவளின் எதிரில்வீணையை மீட்டிக் கொண்டு மங்கையர்க்கரசி சோககீதம் இசைக்கின்ருள்)*

பாட்டு

அழகின் உருவே! இளமை நிறைவே!
அருளின் முகிலே! ஒளிசெய் கதிரே!
விழையும் அடியார் உளமென் மலரில்
விரைந்தே செலுமெம் முருகோனே!
விரைந்தே செலுமெம் முருகோனே!
விரைந்தே செலுமெம் முருகோனே!

*(கடைசி அடியின் பிற்பகுதியை மூன்ருவது முறை மங்கையர்க்கரசி பாடுகையில் திசையுக்கிர சோழனும் அவன் பட்டத்தரசி வானவன்மாதேவியும் உள்நுழைகின்றனர். பாடலைத் தொடரமுடியாது மங்கையர்க்கரசி விம்முவதையும் மாருதப் பிரவல்லி முகம் குப்புற முருகனின் விக்கிரகத்தின் முன்பு விழுந்து அழுது குமுறுவதையும் கண்டு அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்த பின் தலைகுனிகின்றனர். இப்பொழுது வானவன் மாதேவியையும் அழுகை தொற்றிக் கொள்ள அவளும் விம்முகிருள். திசையுக்கிர சோழனும் கவலையைத் தாங்க முடியாது தடுமாறுகின்ருன். மங்கையின் பாட்டுத் தொடர்கின்றது)*

நிழல்செய் தருவாய் நினையென் றென்றும்
நினைவில் கொளுமெம் உயிர்வல்லி
தழல் வேந் தளிராய் நிலைகெட்டழியந்
தருமோ பரிவில் கொடியோன் எனலோ?

வல்லி: (விம்மித் துடித்து) முருகா! முருகா! உன்னைப் பரிவில்லாக் கொடியோன் என்று பாடிய மங்கையை மன்னித்தருள் ..... மன்னித்தருள்.

*(மங்கையர்க்கரசி வீணையிலே தலைசாய்ந்து விம்மி அழுகிருள். அழுகையும் விம்மலும் மெல்ல அடங்கச் சில கணங்கள் பயங்கர மௌனம் அங்கு ஆட்சி புரிகின்றது. வானவன்மாதேவி ஓடிச் சென்று வல்லியின் தலையை நிமிர்த்துகின்ருள். ஒருகணம் பார்வையாளர் பக்கம் வல்லியின் முகம் திரும்புகின்றது. பயங்கரக் காட்சி. காதுவரை நீண்ட உதடுகளும்*

நுரைக்கும் வாயும் பெரிய பற்களுமாக வல்லியின் முகம் குதிரையின் முகத்தை ஒத்துக் காட்சி தருகின்றது. அடுத்த கணம் "அம்மா, அம்மா" என்று கதறியபடி வல்லி தாயின் மடியில் தன் முகத்தைப் புதைத்துக் கொள்கிறாள். திசையுக்கிர சோழன் மெல்ல மெல்ல அடியெடுத்து நடந்து மகளின் அருகுசென்று மண்டியிட்டு அவள் தலையை ஆதர வோடும் உருக்கத்தோடும் தடவுகிறான்)

திசை: என் அன்பு மகளே! மாருதப்பிரவல்லி நீண்ட பெயர். உன் அங்கமெல்லாம் தங்கமாய் ஒளிகான்று சௌந்தரி யத்தின் பெட்டகமாய் நீ விளங்கியதால் நானும் உன் அன் னையும் அங்கசுந்தரி என்று உன்னை ஆசையோடு அழைத் தோம். அதுவே உன் இயற்பெயர் போலவும் ஆயிற்று...... இன்று (அழுகிறான். வல்லியின் உடல் தாயின் மடியில் விம்மி விம்மித் தணிகிறது. வானவன்மாதேவி தன் கன்னத்தை மகளின் தலைமேல் சாய்த்துக் கதறுகிறாள்)

திசை: (திடீரென்று ஆவேசத்துடன் எழுந்து முருகன் விக்கிரகத்தின் முன்பு சென்று) முருகா! கோமள பத்ம மலராய்க் கண்ட என் குமாரியின் முகத்தைக் குதிரையின் கோரமுகமாகக் காணவைத்தாயே! நான் செய்த பாவந்தான் என்ன? கல் கண்ட இடமெல்லாம் உனக்கும் உன் அப்பனுக்கும் கோயில் எடுத்தேனே? அது பாவமா? பாலுந் தயிரும் நெய்யும் பன்னீரும் இளநீருங் கொண்டு குடம் குடமாய் உங்களுக்கு அபிடேகம் செய்வித்தேனே? அது பாவமா? ஆண்டின் அரை வாசிக்காலம் நோன்பிலும் வழிபாட்டிலும் கழித்தேனே? அது பாவமா? உண்ணும் ஒவ்வொரு கவளமும் பருகும் ஒவ்வொரு மிடறு நீரும் "முருகா! நீ தந்த பிச்சை" என்று வாழ்கிறேனே? அது பாவமா? இந்தப் பாவங்களுக்கெல்லாம் முழுமையான தண்டனை வழங்க என் செல்விதான் கிடைத் தாளா? எனக்கு நீ எந்தத் தண்டனையும் வழங்கியிருக்கலாமே?

வானவன்: (உணர்ச்சிக் குவியலாய் எழுந்து தன் கணவனுக்கு எதிர்ப் புறமாய்ச் சென்று நின்று) முருகா! ஏன் பேசாதிருக்கிறாய்? என் மகள் துயரம் கண்டு கல்லும் கனிந்துருகும். நீயோ கல்லிலும் கடியவன். உன் உள்ளம் உருக்கால் ஆனது, நீ அருளே வடிவானவன் என்பதெல்லாம் வெறும் பொய்...... பொய்......(கதறுகிறாள்)

(மங்கையர்க்கரசி வானவன்மாதேவியின் நடுங்கும் உடலை அணைத்து ஆதரவு செய்கிறாள்)

வல்லி: தந்தையே! என் அன்புத் தாயே! அனைத்துயிர்க்கும் அருள் மழை பொழிந்து புரக்கும் அப்பன் முருகன் மீதா இத்தனை ஆத்திரம்? வேண்டாம். அடங்குங்கள். 'ஊழிற் பெருவலி யாவுள?' என் ஊழ். நான் அநுபவிக்கிறேன்: ஆனால் அதற்காக எம்பெருமானை நான் நோகவில்லை; நோகவும் மாட்டேன். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நம்பின என்னை அவன் கை விடமாட்டான்.

(வெளியில், தொலைவில்

'முருகா முருகா முருகா' என்று ஒருவர் பாடப் பலரும் தொடர்ந்து பாடுகின்றனர். பாடல் அண்மி அண்மி வருவதற்கு அறிகுறியாக முதலடியிலும் மறு அடியின் ஒலி கூடிப் படிப் படியாக உயரல் வேண்டும்)

பாட்டு

முருகா! முருகா! முருகா! (முருகா)

அருவாய் உருவாய் அருளாய் எமதுள்
வருவாய் கதிராய் ஒளிர்வாய் குமரா (முருகா)

இருளாய் வருவார் மருளில் உறைவார்
செறுவார் அசுரர்க் கிடிபோல் பவனே! (முருகா)

திரியா மனமும் செறிவாய் அறிவும்
தருவாய் வருவாய் அருள்வாய் பதியே! (முருகா)

எரிவாய் நரகில் உழலா தொழிய
இணைதாள் தமிலே நிலையாய் அருள்வாய் (முருகா)

(இப்பாடலின் 'திரியா மனமும்........' என்ற அடிகள் பாடப்படும் பொழுது ஏவலன் ஒருவன் உள் நுழைந்து சோழனை வணங்கி நிற்கிறான்.)

ஏவ; வேந்தர் பெருமானே! பேரூர்ச் சாந்தலிங்க மடத்திலிருந்து சாந்தலிங்கத்துறவி தம் அடியார் கூட்டத்துடன் எழுந்தருளுகின்றார். அவர்கள் இப்பொழுது இங்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

திசை; அப்படியா? நல்ல சகுனந்தான். நானே வந்து அவரையும் அடியார்களையும் வரவேற்று இங்கு அழைத்து வருவேன். நீ போகலாம்.

(ஏவலன் போகிறான். அவனைத் தொடர்ந்து திசையுக்கிர சோழனும் செல்கிறான். மங்கை கம்பளம் ஒன்றை விரித்துச் சாந்தலிங்கத்துறவி குழுவினரை வரவேற்க ஆயத்தம் செய்கிறாள். வானவன் மாதேவியும் அவளுக்கு உதவுகிறாள். மாருதப்

பிரவல்லி தன் முன்றுனையால் முகத்தை மூடிக்கொண்டு பார்வையாளர் பக்கம் திரும்பிக் கை கூப்பியபடி நிற்கிறுள். முருகன் பாட்டு சிறிது சிறிதாக அண்மித்து வந்து 'முருகா முருகா, முருகா!' என்ற நாம சங்கீர்த்தனத்தோடு இனிது றுகின்றது. சாந்தலிங்கத் துறவி குழு உள்நுழைகின்றது. வானவன் மாதேவி, மாருதப்பிரவல்லி, மங்கையாகியோர் பஞ்சாங்கமாக விழ்ந்து சாந்தலிங்கத் துறவியை வணங்கி எழுகின்றனர். துறவி '' நீடு வாழ்க! முருகன் அருள்க '' என்று அவர்களுக்கு ஆசி வழங்கி அவர்களின் நெற்றியிலே வீபூதி தரித்துப் பின் முருகனின் விக்கிரகத்தை நோக்கி வணங்கிக் கண்மூடி ஒருகணம் தியானித்த பின் தமக்கென இடப்பட்ட பீடத்தில் அமர்கின்றுர். அடியார் கூட்டம் கம்பளத்தில் பயபக்தியுடன் அமர்கின்றது. திசையுக்கிர சோழன் வானவன் மாதேவி ஆகியோர்; தத்தம் இடங்களில் நிற்கின்றனர்.)

சாந்த; (கம்பீரமாக) மன்ன!

திசை; (பணிவுடன் வணங்கிக் கைகட்டி வாய்புதைத்து) ஸ்வாமி

சாந்த: (வல்லியைச் சுட்டிக் காட்டி) இவள் தானே.........?

திசை: என் ஒரே செல்வ மகள், ஸ்வாமி! (விம்மியபடி) இன்று அசுவமுகத்தாளாய் எம்மைக் கணந்தோறும் துடிதுடிக்க வைக்கும் அருமைப் புதல்வி. மாருதப்பிரவல்லி என்று பெயர் சூட்டினேம் (அவள் அருகிற் சென்று) என் அழகுவல்லி. இன்று பண்டை விதி என்னும் சூறைக்காற்றில் தன் நிலை மாறித் துவண்டு விட்ட கோலத்தைப் பாருங்கள் ஸ்வாமி! பாருங்கள். (வல்லியின் முகத்தை மூடியிருந்த திரையை விலக்க முயல்கிறுன். அவளோ துடிதுடித்துத் தன் முகத்தை மேலும் திரையிட்டு மறைத்தவளாய் மறுபக்கம் திரும்பு கின்றுள்.)

சாந்த: (சாந்தமான முறுவல் பூத்து) குழந்தாய்! இங்கே வா...... ஏன் தயக்கம்? வா. (வல்லி அருகில் வந்து அவர் முன்பு மண்டியிட்டு அமர்கின்றுள். துறவி அவளின் முகத்திரையை மெல்ல விலக்கி முகத்தை நோக்கிய பின் மிகுந்த அநுதாபத் தோடு சூள் கொட்டுகின்றுர். வல்லி, தாய், மங்கை விம்மு கின்றனர். வல்லி முகத்தை மீண்டும் திரையிட்டுக் கொண்டு தன் இடத்தில் போய் நிற்கிறுள்.)

சாந்த: வல்லி, உன் முகத்திரையை விலக்கி விடம்மா.

வல்லி: என்னை மன்னியுங்கள் ஸ்வாமி! அது முடியாத காரியம் என் அவலட்சணம் என்னோடேயே இருந்து விடட்டும். பிறர் அதைப் பார்த்து அருவருப்பதையும் அநுதாபம் கொள்வதையும் நான் விரும்பவில்லை. அதை என்னால் தாழ முடியாது.

வானவன்: ஸ்வாமி! வல்லிக்கு முகமாற்றம் (விம்மியபடி) வந்தபின் அவள் இந்த அறையை விட்டு வெளிப்படுவதே இல்லை. எங்களைத்தவிர யார் முகத்திலும் விழிப்பதும் இல்லை.

மங்கை: ஆம், ஸ்வாமி! இந்த அறைக்கு வரத் தம் பெற்றோரையும் என்னையும் தவிர வேறு யாரையும் அநுமதிப்பதும் இல்லை

சாந்த: (முறுவலித்து) பைத்தியகாரப்பிள்ளை! அம்மா! குழந்தாய்!

வல்லி; ஸ்வாமி!

சாந்த: வானத்தில் பவனி வரும் வண்ண மதியினை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா?

வல்லி: (மௌனமாக 'ஆம்' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைக்கிறாள்)

சாந்த: அந்த வட்ட நிலா தேய்கிறது, வளர்கிறது. பின்பு வானத்துள் முற்றாய் மறைந்தும் விடுகிறது. மாதரின் வண்ண முகத்தை நினைவுபடுத்தும் அந்த எழில்மதி தான் தேய்ந்து கூனற்பிறையாவதற்குக் கூசுவதுண்டா? தன்னை உலகுக்குக் காட்டாதிருப்பதுண்டா? தேய்வதும் வளர்வதும் அந்தத் திங்களுக்கு மட்டுமோ? அனைத்து உயிர்களுக்கும் அண்ட சராசரங்களுக்கும் அதுவே இறைவன் வகுத்த நியதி.

திசை: வாழ்வின் உதயப் பொழுதிலேயே என் மகளை இருள் வந்து கவ்வ வேண்டுமா? இதுதான் இறைவன் வகுத்த நியதியா. ஸ்வாமி!

சாந்த: (முருகன் விக்கிரகத்தைக் காட்டி) அவன் திருவுள்ளக்கிடக்கையை அறிய நாம் யார்? ஆனால் இன்னமும் ஒன்றும் முடிமுழுகிவிடவில்லை.

வானவன்: (பெருமூச்சு விட்டு) இனியும் மூழ்குவதற்கு என்ன இருக்கிறது? எங்கள் குழந்தைக்குச் செய்விக்காத வைத்தியமே இல்லை. பாரதநாடு முழுவதிலுமேயுள்ள பெரும் பெரும் வைத்தியர்களை எல்லாம் வருவித்தோம். எல்லாரும் கைவிட்டனர்.

சாந்த: (சிரித்தபடி) இந்தப் பெரும் பெரும் வைத்தியர்களுக்கும் மேலான மகாபெரிய வைத்தியநாதன் ஒருவன் இருக்கிருனே? இதோ! எங்கள் கண்முன்பு கனிவான இளமுறுவல் காட்டி மாயம் புரிந்து கொண்டிருக்கின்ருனே? அவன் அருள் உள்ளவரை அச்சம் ஏன்?

மங்கை: மன்னர் பெருமானும் தேவியாரும் வல்லி நாச்சியாரும் நானும் இருக்காத விரதங்கள் எவை? செய்யாத நேர்த்திக் கடன்கள் எவை? செல்லாத திருத்தலங்கள்தாம் எவை? ஆனுல்.........

சாந்த: ஆனுல்' என்பதும் 'இனி ஆவது என்ன?' என்பதும் நம்பிக்கை அற்றவர்களின் வலுவற்ற சொற்கூட்டம், இன்னும் நம்புங்கள். வல்லி சென்று வழிபட்டுத் தீர்த்தமாட இன்னும் ஒரு தலம் உண்டு

திசை: (ஆவலோடு) அது எந்தத் தலம்? சொல்லுங்கள் ஸ்வாமி, உடனே ஏற்பாடு செய்கிறோம்.

சாந்த: அது இந்தப் பாரத நாட்டில் இல்லை. இலங்கையின் வடபால் உள்ளது.

திசை: (ஏமாற்றத்துடன் சூள் கொட்டி) இங்கே கிடைக்காதது (ஏளனமாக) அங்கே கிடைக்குமா?

சாந்த: அறியாது உரைக்கிருய் மன்னு, இலங்கை மூர்த்தியாற் சிறியது தான். ஆனுல் இறையருளாம் கீர்த்தியால் அது மிகமிகப் பெரிது. எம் முன்னோர் இலங்கையைச் 'சிவபூமி' என்றே அழைத்தனர்',

வானவன்: (வியப்புடன்) அப்படியா?

சாந்த: ஆம், தேவி! ஆம். இங்கிருந்து கடல் மார்க்கமாகச் சென்ருல் இலங்கையிலுள்ள காசாத்துறையை அடையலாம்.

வல்லி: காசாத்துறையா? பெயர் புதுமையாக இருக்கிறதே!

சாந்த: இலங்கையின் தெற்கில் வாழும் பௌத்தர்கள் இந்தத்துறையில் வந்து கப்பலேறிப் பாரத நாட்டின் புனித காயாவுக்கு யாத்திரை செல்வது வழக்கம். இதனுலே முதலில் இதற்குக் காயாத்துறை என்றே பெயர் வழங்கியது. அது திரிந்து காசாத்துறை ஆயிற்று.

வல்லி: உம்......... மேலே சொல்லுங்கள் ஸ்வாமி?

சாந்த: வல்லியின் மனத்திலே திடீரென்று இத்தனை ஆர்வம் ஏற்படக் காரணம்? உம்!......... இதுவும் நல்ல சகுனந்தான். கேளுங்கள். காசாத்துறையிலிருந்து இரு கல் தொலைவில் நகுலேச்சரம் என்ற சிவாலயம் உள்ளது. அதன் பழைய பெயர் திருத்தம்பலேச்சரம்,

மங்கை: திருத்தம்பலேச்சரத்துக்கு நகுலேச்சரம் என்ற பெயர் எவ்வாறு உண்டாயிற்று?

சாந்த: (பத்தியுடன்) அனைத்துயிர்க்கும் அருள்சுரக்கும் அம்மை அப்பன் திருவிளையாடல்தான் அச்சிவாலயத்திற்கு அந்தப் பெயரை வருவித்தது.

வல்லி: ஸ்வாமி! நகுலேச்சரம் என்ற பெயர் கேட்டதுமே என் உடல் புளகாங்கிதம் அடைகிறது. அங்கு நிகழ்ந்த அற்புதத்தினைச் சொல்லுங்கள் ஸ்வாமி!

சாந்த: முன்பொருகால் இச் சிவதலத்தின் அருகிருந்த கீரிமலைத் தீர்த்தத்திலே நீராடி நகுலமுனிவர் என்பவர் தமது கீரிமுகம் நீங்கப்பெற்று இன்றும் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அவர் வழிபட்டதாலே அந்தத் திருத்தலம் நகுலேச்சரம் ஆயிற்று. கடலும் நன்னீரும் கலக்கின்ற தீர்த்தமும் அவர் மூழ்கி எழுந்ததாலே கிரிமலை என்றாயிற்று.

வல்லி: (எழுந்து நின்று தன் முகத்திரையை நீக்கி, மகிழ்வு காட்டி, சாந்தலிங்கத் துறவியை வணங்கி) ஸ்வாமி! நான் உடனே ஈழம் செல்ல வேண்டும். இருள் நிறைந்திருந்த என் உள்ளத்திலே ஒளி விளக்கை ஏற்றி வைத்தீர்கள். என் எதிர்காலம் பிரகாசமாகும். என்று என் மனத்திலே ஒரு நம்பிக்கை தோன்றிக் கணந்தோறும் வளர்ந்த வண்ணமே உள்ளது. முருகன் அருள் என்னை நிச்சயம் காக்கும்.
(ஓடிச்சென்று சாந்தலிங்கத் துறவியின் காலடியிலே பஞ்சாங்கமாய் வீழ்ந்து) என்னை ஆசீர்வதியுங்கள் ஸ்வாமி!

சாந்த: என் அந்தராத்மாவும் உன் ஆசை நிறைவேறும் என்றே உரைக்கிறது. எவ்வாறாயினும் உனக்கு நன்மையே விளையும்! சென்று வாழ். முருகன் அருள்க. (திரும்பித் திசையுக்கிர சோழனையும் வானவன் மாதேவியையும் மங்கையையும் நோக்கி) நாம் சென்று வருகிறோம். வாழ்க! வாழ்க! வாழ்க! (அடுத்து, 'முருகா, முருகா, முருகா' என்ற நாம சங்கீர்த்தனத்தோடு சாந்தலிங்கத்துறவியும் அடியார்களும் செல்கின்றனர், வல்லி எழுந்து அவர்கள் செல்லும் திசை நோக்கிக் கைகூப்பி நிற்கிறாள். வானவன் மாதேவியும் மங்கையும் உறைநிலை அடைகின்றனர். திசையுக்கிர சோழன் ஆழ்ந்த சிந்தனை புலப்படும் முகத்தோடு நிற்கிறான்.)

திரை

# காட்சி 6

(மேடையில் மெல்லிய வெளிச்சம். திசையுக்கிரசோழனும் வானவன்மாதேவியும் நிழல் வடிவங்களாகத் தெரிகின்றனர். மேடையின் உள்ளே சலங்கை ஒலிக்க நடனம் நிகழ்வதான மயக்கநிலை தோற்றுவிக்கப் படுகின்றது.)

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பேர்த்தும் அவனுக்கே பித்தி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

என்ற அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகம் பெண்ணின் கனிந்த மென்குரலிலே வெளியாவதும் இடையிடையே சலங்கை ஒலி கேட்பதும் மாறி மாறி நிகழல் வேண்டும். திருத்தாண்டகத்தில் இறுதி அடி - பாடல் ஆடல் (சலங்கை ஒலி, நிகழ்கையில் மங்கை மேடைக்கு விரைந்து ஓட்டமும் நடையுமாக வருகிறாள். வெளிச்சம் படிப்படியாகக் கூடி ஒளி வெள்ளமாகும் பொழுது திசையுக்கிர சோழனும் வானவன் மாதேவியும் உறைநிலை மாறி மங்கையை வியப்புடன் பார்க்கின்றனர்.

(இந்தக் காட்சி முழுவதும் பின்னணியில் சலங்கை ஒலியும் நடன இசையும் கேட்டுக் கொண்டே இருப்பது நன்று)

**வானவன்:** மங்கை, ஏது இவ்வளவு உற்சாகம்? சிறுமிபோல ஓடி வருகிறாயே!

**மங்கை:** அதை ஏன் கேட்கிறீர்கள் தேவி! உங்கள் புதல்வியாரது உற்சாகத்தின் கிரணங்கள் என் மீதும் படிந்ததன் பிரதிபலிப்புத்தான் இது!

**திசை:** அப்படியா? அவளுக்கு அவ்வளவு உற்சாகமா?

**மங்கை:** அதை விளக்க எனக்குச் சொற்கள் இல்லை. மஹாராஜா! நடன மண்டபத்தில் நீண்ட நாள்களுக்குப் பிறகு சலங்கைகள் ஒலிப்பதையும் நடனமும் இசையும் சங்கமிப்பதையும் நீங்கள் காணவிட்டாலும் கேட்டுகொண்டுதானே இருக்கிறீர்கள்? எல்லாம் இளவரசியின் ஏற்பாடுதான்.

வானவன்: காசாத்துறையே அவள் கனவு நனவெல்லாம் குடிகொண்டு விட்டது போலும்! அதன் வெளிப்பாடுதான் இந்த அமர்க் களம்.

திசை: நன்று சொன்னாய் தேவி! சரியான அமர்க்களந்தான்.

மங்கை: (வேதனையுடன்) இளவரசியாரின் நிலையில் நீங்களும் இருந் தால் அவரது ஆவலின் அளவு உங்களுக்கும் விளங்கும். வேந்தே! இளவரசியாரின் யாத்திரைக்கு ஏற்பாடு செய்து விட்டீர்களா?

திசை: (சிந்தனை வசத்தனாய்ச் சில அடிகள் நடந்து, பின் நின்று பெரு மூச்சு விடுகிறான்) உம்......... அதில்தானே பிரச்சினை எல்லாம்......... ஆ.........

வானவன்: இதில் என்ன பிரச்சினை? இலங்கை என்ன எட்டாத தொலைவா? அதுவும் காசாத்துறை என்பது சில நாழிகைக் கடற்பயணத்தில் சென்று அடைவதல்லவா? இதற்கு ஏன் இவ்வளவு சிந்தனை, தயக்கம்?

திசை: தேவி! மங்கை! காசாத்துறை உக்கிரசிங்கனின் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசம்.

வானவன்: அதனால் என்ன? நாம் அவன் நாட்டின்மீது படை எடுத்தா செல்லப் போகிறோம்.

மங்கை: நாங்கள் செல்வது தீர்த்தயாத்திரை.

திசை: நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான்......... ஆனால்......

வானவன்: என்ன ஆனால்?

திசை: தேவி! உக்கிரசிங்கன் வணிகவேடத்தில் வந்து சிதம்பரத்துத் திருவாதிரை விழாவிற் கலந்து கொண்டதும் அங்கு வல்லி யைக் கண்டதும் அவள் மீது மனம் வைத்ததும் அவளை மணக்க விரும்பித் தூது விட்டதும் எல்லாம் நீ அறிவாய்,

வானவன்: (எரிச்சலுடன்) சரிதான்! எங்கள் குழந்தை இன்று இருக் கும் இருப்பில் அவன் வந்து இவளை எடுத்துச் சென்று விடு வான் என்று அஞ்சுகிறீர்களோ?

திசை: அதற்கில்லை.........

வானவன்: பின் எதற்கு?

திசை: தூது வந்தவனிடம் உக்கிரசிங்கனைப் பலவாறு இழித்தும் பழித்தும் கூறி அனுப்பினேன், ஒரு காலத்திலும் வல்லியை அவனுக்கு மணஞ் செய்து கொடேன் என்று சூளுரை பகர்ந் தேன், உக்கிரசிங்கன் இவற்றையெல்லாம் மனத்தில் வைத்து என் மகளைப் பழிவாங்க எண்ணி நடந்துகொண்டால் என்ன செய்வது?

மங்கை: அந்த அரசர் அத்தகையவர் அல்லர், அவர் ஒரு காலும் அவ்வாறு நடந்து கொள்ளமாட்டார்.

திசை; அது எப்படி உனக்கு அவ்வளவு நிச்சயமாகத் தெரியும்?

மங்கை! (தான் சொன்னதை நினைத்து அச்சமும் தடுமாற்றமும் அடைந்தவளாய்) அது... ...

திசை; சரி, அதுதான் போகட்டும். தேவி! நான் உக்கிரசிங்கனுக்கு என் மகளை மணஞ்செய்து தரமாட்டேன் என்றதற்கான அடிப்படைக் காரணம் அவனது அரசின் சிறுமையோ அவன் குலத்தின்மீது நான் கொண்ட வெறுப்போ அல்ல.........இது உனக்கு விளங்குகிறதா?

வானவன்: (மௌனமாக முகத்தில் கேள்விக்குறியுடன் திசையுக்கிர சோழனைப் பார்க்கிறாள்)

திசை: (பெருமூச்சுக் கலந்த வேதனையோடு) என் மகள் என் கண். என் உயிர். பல்லாண்டு காலம் நானும் நீயும் நோற்ற நோன்பினதும் செய்த தவத்தினதும் பயனும் வாராது வந்த மாமணி. எனக்குப் பின் என் அரசுக்கு உரிமை பாராட்டப் புதல்வன் பிறக்கவில்லையே என்று கூட நான் வருந்தவில்லை அந்த அளவு என் உள்ளமெல்லாம் உயிரெல்லாம் நிறைந்து விட்டவள் வல்லி.

வானவன்: நான் அவள் தாய், உங்கள் பாச உணர்வுகள் எனக்கு மட்டும் இல்லையா? அதற்கும் அவள் திருமணத்திற்கும் என்ன சம்பந்தம்?

திசை: திருமணத்தின் பின்பு என் மகள் அந்நியநாடு செல்ல நேரிடும். அந்தப் பிரிவை என்னாலும் உன்னாலும் தாழ முடியுமா?

(இருவரும் அழுகிறார்கள்)

உள்நாட்டில் சிற்றரசன் ஒருவனுக்கு என் மகளை மணவாட்டி ஆக்கினால் விரும்பிய போதெல்லாம் அவளிடம் சென்றோ அழைத்தோ சந்திக்கலாமே. அந்நியநாடு சென்று விட்டால் அந்த வாய்ப்புக் கிட்டாதே! இதுதான் உக்கிரசிங்கனின் திருமண வேண்டுதலை நான் உறுதியாக மறுத்த காரணம்.

திசை: (மங்கை மெல்லச் சிரிக்கிறாள். அவள் சிரிப்பை விளங்கிக் கொள்ளாத திசையுக்கிரசோழன் சற்றுக் கோபத்துடன் அவளைப் பார்த்து) மங்கை! நீ சிரிப்பதன் காரணம்?

மங்கை: கடலில் முத்துப் பிறக்கலாம். ஆனால், பல இடையூறுகளின் மத்தியில் அதை மூழ்கி எடுத்து மாலையாகக் கோத்து அணிபவருக்குத் தானே அதனால் பயன்? காட்டில் வளரும் சந்தனத்தை வெட்டிக் கொணர்ந்து அரைத்து உடலிற் பூசுபவருக்குத்தானே அதன் நறுமண இன்பம்? யாழில் பிறக்கும் இன்னிசையும் அதனை மீட்டுபவனுக்குத் தானே? யாழுக்கு அல்லவே! நினைத்துப் பார்க்கும் பொழுது தங்கள் மகளாரும் தங்களுக்கு அத்தகையரே!

திசை: கலித்தொகைப் பாடலை நானும் அறிவேன்.

மங்கை: அறிந்து என்ன பயன் மஹாராஜா! உணர்ந்து அநுபவித்து வாழ்க்கையிலும் கடைப்பிடித்த வேண்டும்.

வானவன்: (கவலையை மறந்து சிறிது சிரித்து) வாயாடி! சற்று உன் வாயை அடக்கு. மஹாராஜா! எங்கள் குழந்தையின் வாழ்வுப் பிரச்சினையை எங்கள் சொந்தப் பிரச்சினையோடு கலந்து குழப்புவது நல்லதல்ல.

திசை: (பெருமூச்சுடன்) நீ சொல்வதை என் மனம் ஏற்கத் தயங்குகிறது......... ஆனால் ...... சரி......... சரி......... வல்லியின் பயணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். (மங்கை பக்கம் திரும்பி) மங்கை! உன்னை நம்பித்தான் என் மகளை அனுப்புகிறேன் அவளைக் கண்போலக் காப்பது உன் பொறுப்பு.

மங்கை: மஹாராஜா! இளவரசியார் என் கண் அல்ல உயிர். அவருக்கு எது நன்மை தருமோ அதனை என் உயிரைக் கொடுத்தாவது செய்யத் தயங்கேன். இது உறுதி.

திசை: நல்லது. என் அமைச்சர் பிரதானிகளோடு கலந்து பயண ஏற்பாடுகளைச் செய்தல்வேண்டும். நான் வருகிறேன். (போகிறான். மேடையில் ஒளி குறையும் பொழுது இதுவரை மென்மையாகக் கேட்டுக் கொண்டிருந்த சலங்கை ஒலியும் நடன இசையும் மேலெழுகின்றன. அவை பாடல் ஒன்றிற்கான அபிநயமாகத் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன.

## பாட்டு

மனம்வாக்குக் கடந்தானை மன்னுயிருள் நிலைப்பானைத்
தினந்தோறும் அருள்வெள்ளத் தேனமுதம் பொழிவானை
இனமாகத் தன்னடியார் தமதுள்ளே இருப்பானைத்
தனைநிகரில் பெரியோனைத் தாயனைய முருகோனை
நினையாத ஏத்தாத நாளென்ன நாளே!
நிமலன்தாள் பணியாத நாளென்ன நாளே!

திரை

## காட்சி 7

(உக்கிரசிங்கனின் அந்தரங்க அறை. அவனும் வேல்மாறன், பூபாலன், புவனேந்திரன் ஆகியோரும் ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றனர்.)

வேல்: திசையுக்கிர சோழனின் வாய்க்கொழுப்பை அடக்கி அவனுக்குத் தலைக்குனிவை ஏற்படுத்த அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. அதை நழுவவிட்டது மடைமை.

பூபா: "எங்கள் நாடு சுண்டைக்காய் நாடு. தமிழைப் பேசுவதால் மட்டும் ஒருவன் தமிழனாகிவிட முடியாது"

புவனே: இப்படியெல்லாம் திமிர் பிடித்துப் பேசியவன், தன் மகளின் நோய் போக்க எங்கள் சுண்டைக்காய் நாட்டுக்கு அவளைப் பரிவாரங்களோடு அனுப்புகிறான்.

உக்கிர: ஒன்றை நீங்கள் கருத்திற் கொள்ள வேண்டும். (மூவரும் கேள்விக்குறியுடன் உக்கிரசிங்கனை நோக்குகின்றனர்)

உக்கிர: (வேதனையோடு) வல்லிக்கு நோய். அதுவும் குதிரைமுக நோய். அங்கசுந்தரி அவலட்சணி ஆகிவிட்டாள். மலரும் மணமும் மென்மையும் நிறைந்த வல்லிக்கொடி எல்லாம் இழந்து காய்ந்து கருகிக் கிடக்கிறது.

வேல்: (வியப்போடு) இன்னுமா அந்த வல்லியை மறக்கவில்லை?

உக்கிர: உக்கிரசிங்கனுக்கு உள்ளது ஒரு மனந்தான். அந்த மனத்துக்கு உரியவள் வல்லிதான். வல்லி மட்டுமே தான்.

பூபா: அவலட்சணி என்று தங்கள் வாயாலே சற்று முன்பு சொன்ன.........

உக்கிர: (ஆவேசத்துடன்) ஆம்! அவலட்சணி என்று நான் சொன்னது உண்மைதான். அவள் உலகத்தவரின் கண்களுக்கு அவலட்சணியாய்த் தோற்றுகிறாளே என்பதால் வேதனையும் அடைகிறேன். ஆனால்......... என் மனக்கண்களோ அழகைக் கடந்த மகத்தான ஒன்றினை அவளில் காண்கின்றன. அந்த மகத்துக்கு நான் என்றும் அடிமை.

பூபா: இது என்ன காதலோ!

உக்கிர: (கேலிச் சிரிப்புச் சிரித்து) வாளினால் பாடும் போர்க்காவியத்தை இரசிக்கத் தெரிந்த உனக்கு அன்பு என்ற எழுத்தாணிகொண்டு உயிரினால் எழுதும் மதுரகாவியத்தை இரசிக்க முடியாது மகனே! ஆதலால் உன் பேச்சு எனக்கு வியப்பைத் தரவில்லை.

பூவனே: சரி! இது உங்கள் சொந்த விடயம். ஆனல் சோழனின் படை, குடி பரிவாரங்களும் எங்கள் காட்டு எல்லையில்வந்து பாடி அடித்திருப்பது நாட்டின் பாதுகாப்பிற்கு அறைகூவல். இதற்கு அநுமதி வழங்கியது விவேகமான செயல் என்று எனக்குத் தோன்றவில்லை.

பூபா: வல்லி, தான் தங்கியிருக்கும் பகுதிக்குத் குமாரத்திபள்ளம் என்று பெயர் சூட்டியிருக்கிறாராம். அதாவது எங்கள் சொந்த நாட்டில் அந்நியர் குடியேற்றம்! அவர்களின் ஆதிக்கம்! நாட்செல்லக் கதிரைமலையும் குமாரத்தி மலையாசலாம்.

உக்கிர: பூபாலா, நாவை அடக்கு. வந்தவர்கள் எங்கள் விருந்தினர். அவர்கள் நோக்கம் தீர்த்தாடலாம். சில நாள் தங்கியிருக்க அவர்களுக்கு என் அநுமதி உண்டு. இதற்குமேல் நீங்கள் அஞ்சுவதற்கு ஒன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை.

வேல்: 'ஒண்ட வந்த பிடாரிகள் ஊர்ப் பிடாரிகளை ஒட்டிய' வரலாறுகள் பல உண்டு. அந்த வரலாற்றில் எங்கள் அரசரது வரலாறும் இடம்பெறக் கூடாது. இதுவே எங்கள் ஆசை: வேண்டுகோள்.

உக்கிர: வரலாற்றிலே, ஒண்டவந்த பிடாரிகளால் நன்மைகள் உண்டான நிகழ்ச்சிகளும் இடம்பெற்றே உள்ளன.

பூபா: நாங்கள் அறியோம்.

உக்கிர: ஏன்? என் வரலாற்றிலேயே அத்தகைய நிகழ்வு இடம் பெற்றது. மறந்து விட்டீர்களா?

புவனே: நீங்கள் என்ன சொல்கிறீர்கள், மஹாராஜா!

உக்கிர: நான் நகுலேச்சரத்தானைத் தரிசித்து, கீரிமலையில் நீராடி, சோழமன்னன் முன்பு கட்டியிருந்தானே மாளிகை? அதன் அண்மையிலே வளவர்கோன் பள்ளத்தில் பாடியிட்டிருந்தேன். அவ்வேளையிலும் நீங்கள் என் அருகில் இருந்தீர்கள்.

வேல்: இனி நகுலேச்சரமும் கீரிமலையும் எங்கள் மன்னரின் நினைவில் அடிக்கடி வந்து கொண்டேயிருக்கும்.

பூபா: அங்கு அடிக்கடி பாடி அடித்துத் தங்கவும் நேரலாம்.

உக்கிர: (சற்று வெகுளியுடன் ஆனல் அசட்டுச் சிரிப்புக் கலக்க) கேலியை நிறுத்துங்கள். நான் சொல்வதைப் பொறுமையாகக் கேளுங்கள். கரணவாய், வெள்ளப்பரவை ஆகிய இடங்களில் நல்லுப்புப் படுவதை அறிந்த தொண்டை நாட்டு

பன்னனுன தொண்டைமான் எனது பாடியிலே என்னை வந்து கண்டான். அங்கு விளையும் உப்பை விலைக்குப் பெற்றுத் தனது நாட்டிற்குக் கொண்டு செல்ல என்னிடம் அநுமதி வேண்டினுன். உப்பளங்களுக்குத் தன் கப்பல் வருவதற்குக் கடலிலிருந்து வாய்க்காலாக ஆறு ஒன்று தோண்டுதற்கும் விழைந்தான். நானும் அநுமதி வழங்கினேன்.

புவனே: இதனுல் ஏற்பட்ட பெருநன்மை யாதோ?

உக்கிர: ஆண்டுதோறும் உப்பு ஏற்றுமதியால் பெரும் வருவாய் கிடைக்கிறது. ஆறு இல்லா எம் நாட்டிற்கு ஓர் ஆறும் கிடைத்தது. இந்த ஆற்றைத் தொண்டமாறு என்று மக்கள் அழைக்கின்றனர். இதனுல், தொண்டைமானுறும் அதனைச் சூழ்ந்த பகுதியும் தொண்டைமானுக்கு உரிமையாகி விட்டனவா?

பூபா: வேண்டுதல் வேறு. ஆக்கிரமிப்பு வேறு.

உக்கிர: (உறுதியோடு தலை நிமிர்ந்து) எனக்கு இவற்றின் வேறுபாடு நன்கு தெரியும். வேண்டுவார் வேண்டுவன ஈவேன்; விருந்தினராய் வருவோரை அகமும் முகமும் மலர வரவேற்பேன். ஆக்கிரமிப்புக் கருதி வரும் அந்நியர்க்கு (பல்லை நெருமி) வாளை உறையிலிருந்து உருவி) வன்னியரின் விதியை நிர்ணயித்த வாளும், படைவலியும், உங்கள் தோள்வலியும் உறுதுணையாய் உள்ளன. வேறு என்ன வேண்டும்?

(வேல்மாறனும் பூபாலனும் புவனேந்திரனும் மௌனம்)

திரை

# காட்சி 8

(நகுலேச்சர ஆலயத்தின் முன்பு வட்டக்களரி அமைத்து நளன் கீரிமலை வந்த கதை நாட்டுக்கூத்தாய் அரங்கேற ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. கீரிமலை மக்கள் திரண்டு களரியின் மூன்று புறங்களில் அமர்ந்திருக்கின்றனர். நான்காவது புறத்தில் பீடம் இடப்பட்டு வல்லி, மங்கை ஆகியோர் அவற்றில் அமர்ந்துள்ளனர். அவர்களின் பக்கத்திலே வல்லியின் பரிவாரங்கள். கீரிமலையூர்த் தலைவன் நாடகம் தொடங்குமுன் பின்வருமாறு உரையாற்றுகின்றான்)

தலை: சோழ இளவரசியார் மாருதப்பிரவல்லியாரே, அவர்தம் படைகுடி பரிவாரங்களே! இந்நாள் எமக்குப் பொன்னாள். ஈழம் வாழ் தமிழ் மக்கள், தம் சகோதரநாடு ஒன்றின் இளவரசியாரை வரவேற்கும் நன்னாள். எமது புனித பூமியிலே எம்மையெல்லாம் ஆண்டருள் புரிகின்ற நகுலேச்சரப் பெருமான் இளவரசியாரைப் பீடித்துள்ள குதிரைமுக நோயினைப் போக்கி அருளுவார் என்பது உறுதியான நம்பிக்கை. தமது நோய் நீங்கியதற்கு நேர்த்திக்கடனாகக் காசாத்துறைத் தலைவர் சேந்தனார் வழங்கும் இன்றைய எமது கூத்து நளன் கலி நீக்கல் என்பதாகும். எமது மண்ணின் அரும்பெருங் கலையான கூத்து, ஒரு வகையில் இளவரசியாரின் நோக்கை, எதிர்பார்ப்பை நிறைவேற்றும் நற்சகுனமாகவும் அமைந்துள்ளமை மிகப் பொருத்தமே. அவரை எம்மிடையே வரவேற்பதோடு அவரையும் அவர்தம் படை, குடி, பரிவாரங்களையும் எமது கூத்தைக் கண்டுகளிக்குமாறு அனைவரது சார்பிலும் வேண்டுகின்றேன். வணக்கம்.

(கூத்தின் இயக்குநரான அண்ணாவியும் மத்தளகாரனும் களரியுள் நுழைகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து நளன், பெரியார், சிவபெருமான் வேடம் தாங்கியோரும் பக்கப்பாட்டுக் காரரும் வருகிறார்கள். முதலில் கடவுள் வாழ்த்து இடம் பெறுகிறது)

கடவுள் வாழ்த்து

பொன்னொளிர் மேனியில் மின்னிடு நூலணி
புண்ணிய னேசரணம்
போத மளித்தருள் வீடு மளித்தருள்
போதக னேசரணம்
கன்னலை ஒத்திடு மின்கவைச் சொல்லியின்
காதல னேசரணம்
காலையிற் சூரியர் கோடியைப் போலொளிர்
கந்தனப் பாசரணம்

சென்னி மிசைப்பலர் பொன்னடி வைத்திடும்
சேவக னேசரணம்
சேயென எந்தமைக் கொண்டிடு கின்றஎம்
சிற்பர னேசரணம்
பண்ணிடு வேதங்கள் கண்டிட வரியநற்
பரம்பொரு ளேசரணம்
பார்புகழ் நளன்கதை யாமிவ ணுடிடப்
பரிந்தருள் வாய்சரணம்.

## கட்டியம்

வலிபெற்றுப் புகழுற்று நிலைபெற்று நிடதத்து
மதிமிக்க அரசாயினுன்
வளமிக்க விதர்ப்பத்து மதிதொற்றுக் கொடியொத்த
மடமங்கை தமயந்தியை
நிலைபெற்ற மனத்துற்று வரமுற்ற தனக்குற்ற
மனைத்தீபம் எனவாக்கினுன்
வறிதுற்றுக் கலிதொற்றத் துயருற்றுப் பெயரற்று
வனமெய்தும் தளராசனே.

## நளன் வருகை

## விருத்தம்

சிரசினில் முடியும் இல்லைச் செம்பட்டுத் தரியம் இல்லை
கரத்தினிற் செங்கோல் இல்லைக் கழுத்தில்முத் தாரம் இல்லை
அரையிற்பட் டாடை இல்லை அணிமணி எதுவும் இல்லை
பரித்திடு குடையும் இல்லை பாராண்ட நளன்வந் தானே.

## நளன் தோற்றம்

ஏழரைச் சனியன் எனைப்பிடித் தாட்ட
என்றன் அரசினைப் புட்கரன் கொள்ள
ஆளணி படைகுடி யாவும்இ ழந்தே
அன்புத்த மயந்தி சேய்க ளிழந்தே
பாழ்மனை காடுகள் மேடுகள் எல்லாம்
பாவியாய் நானலைந் தேயலுத் தின்று
வாழ்வினை மீட்டிடக் கோணேச்ச ரத்தான்
வளமிகு கோயிலை வந்தடைந் தேனே.

சபை-தரு

## விருத்தம்

பத்துத் தலைகொண்ட இராவ ணேசன்
பரிவோடே தாய்நாளும் வணங்க என்றே
நத்தியே கயிலாய மலைக்குச் சென்று
நாடியே சிவலிங்கம் பெறுனப் கோபம்
மெத்தமிக எழுந்திடவே வாளைக் கொண்டு
மேவுவரை தனைவெட்ட வீழ்ந்த பாறை
உத்தமராம் சிவனூரின் தக்கி ணத்தின்
உயர்ந்தகயி லாயமாய் ஆயிற் றென்பார்.

## வசனம்.

தெக்கிண கயிலாயமாகிய திருக்கோண மாமலைக்கு என் அப்பனைத் தேடி ஓடி வந்தேன். கோணேச்சரத்தானே. அடியேன் செய்த பாவங்களையெல்லாம் போக்கியருள்வாய். என்னைப் பிடித்த ஏழரை நாட்டுச் சனி விலகி என் மனைவி, மக்கள், நாடு, நகரம், குடி, படை எல்லாம் அடையும்படி செய்வாய் அப்பனே!

## நளன் தோத்திரம்

திங்கள்சூடிக் கங்கைவைத்த எங்களிறைவா—கோணை
தங்கிஎனக் கிங்குநன்மை பொங்கிடச் செய்வாய்

பாறுவதி யாளைக்கூறு பேறெனக் கொண்டாய்— உடலிற்
சீறுபாம்பும் ஏறியாடு மாறு நீ கொண்டாய்

தந்திமுகன் கந்தனுக்குத் தந்தையேயுன்னை —நிதமும்
அந்தரித்துச் சிந்தைநொந்து வந்தனை செய்தேன்

துணியனுகிச் சனியனுலே துனியையுறுகின்றேன் — எனக்குக்
கனிவினோடே இனிமை செய்து வினையகற்றிப்பாயே.

## சபை —விருத்தம்

பக்குவ மாக உள்ளம் பத்தியில் நிறைந்த மன்னன்
இக்கணம் அருளென் றீசன் இணையடி பணிந்து நிற்க
மிக்கிடு தவத்த ரான மேலவர் ஒருவர் வந்து
தக்கநல் லுரைகள் கொண்டு தவிப்புத்தீர் வழிசொல் வாரே.

## பெரியார் கொச்சகம்

தாமரைபோல் முகத்தவரே தயவாகக் கேளுமையா
நாமமுறும் இலங்கையிலே நல்வடக்கில் யாழ்ப்பாணம்
ஏமமுற உண்டாங்கே நகுலமுனி குறைதீர்க்கும்
நாமமுறு நகுலேசு வரத்தினொடு கீரிமலை.

### வசனம்

அகோ கேளும் பிள்ளாய் நளமகாராசனே! நீர் இங்கிருந்து வடக்கே சென்றால் நகுலேசுவரம் என்ற தலத்தைக் காணுவீர். அங்கே கீரிமலை என்ற தீர்த்தமும் உண்டு. அதிலே தீர்த்தமாடி நகுலேசுவரரையும் வழிபட்டால் உம்மைப் பீடித்த சனி தொலையும். அங்கே செல்வீராக

### சபை- தரு

தேங்குபுனல் நீர்நிலைகள் கண்டு — மிக்க
செழித்தபெரும் காடுகள்க டந்து
மேடுபள்ளம் பாலைகளைத் தாண்டி—அங்கு
வீங்கிருள்பு லர்வுபல கண்டு — கொடும்
வாடையொடு பெய்பனிந னைந்து
கூடுபத்தி ஆதிசிவன் மேலே—மிக்க
கொண்டுநள ராசன்விரைந் தேகி—அரிய
கோதில்வள நாட்டினைய டைந்து
ஆடுமிறை வீற்றிருக்கும் கோயில்—அதனை
மீண்டுமன இன்பினொடு கூடி— அதன்
மேற்கிலுள தீர்த்தமதில் ஆடி
வீழ்ந்துபணிந் தேத்துவதைப் பாரீர்.

### நளன்–தரு

காந்தியொளிர் மேனிநகு லேசா—உயர்
கங்கைமதி செஞ்சடையுல் லாசா
சாந்தியினை நீதராயேல் நேசா— நான்
சஞ்சலக்க டல்கடத்தல் லேசா.

நாடுநகர் சுற்றமில்லா வாழ்வே—கடை
நாயினிழி வாழ்வினிலும் தாழ்வே
கூடுதுன்ப வெள்ளமதில் ஆழ்வே—இன்று
கொண்டதனல் மாட்சியாவும் தாழ்வே.

சூததனை ஆடியாவும் தோற்றேன் — என்னைச்
சுற்றிவரும் தீமைகளுக் காற்றேன்
நாதனுந்தன் தாளல்லாது போற்றேன்—இன்று
நாடியுனக் காளடிமை ஏற்றேன்.

நளன்–வசனம்

நாடுவார்க்கு நலமருளும் நாயகா, நகுலேசா! இனியும் துன்பங்களைத் தாங்க என்னால் இயலாது. எனக்கு நல்வாழ்வு தருவாய் அப்பனே.

நகுலேசுவரர் தோற்றம்—கட்டளைக் கலித்துறை

கங்கை மதிகொண்ட வேணியன் செந்தீக் கனல்விழியன்
அங்கம் குளிர்ந்தனல் ஆடிடும் சுந்தரன் ஆண்டடியார்
பங்கங் களைந்திடும் பாங்கினன் மேன்மைப் பரம்பொருளாம்
எங்கள் பிரான்நகு லேசனும் வேந்தன்முன் எய்தினனே.

நகுலேசுவரர்–சந்தவிருத்தம்

நின்ற பெரும்புகழ் வென்ற அருந்திறல்
நீதியு டன்மேன்மை
நீங்கிட லற்றிடு பாங்குகள் உற்றிடு
நேர்மைய னும்நளனே!
அன்று முதற்கொடு நின்று நிலைத்திடும்
அன்புடன் எம்மடிகள்
ஆதர மாகவே கொண்டனை நீயின்(று)
அல்லலில் ஆற்றாதே
கன்றிய துன்புடன் எம்முனர் வந்தனை
காத்தருள் வோம்உன்றன்
காதலி பிள்ளைகள் நாடிய செல்வங்கள்
கடிதில் அடைவாயே
சென்றிடு வாய்மக னேதுயர் சூரியன்
சேர்பனி யாய்ப்போகும்
சீருனைக் கூடிடும் நேரிய வாழ்வினில்
சேர்ந்தும கிழ்வாயே.

(நளன் செல்கிறான்)

(நகுலேசர் திருக்கழுத்திலிருந்து சர்ப்பத்தையும், திருக்கரத்திலிருந்து அக்கினியையும் எடுத்துத் தம் முன்னால் நிறுத்துகிறார்.)

நகுலேசுவரர் வசனம்???

நகுலே: அகோ வாரும் பிள்ளைகளே! நீங்கள் இருவீரும் நளன் செல்லும் வழியில் ஒருவரோடு மற்றவர் கலந்து பிணைந்து கிடவுங்கள். சர்ப்பமே! நீ தீயில் அகப்பட்டுத் துடிப்பதுபோல் அவலக்குரல் எழுப்பு. நளன் உன்னை அக்கினியிலிருந்து வெளியே எடுத்துக் காப்பாற்றுவான். உடனே நீ அவனைத் தீண்டுவாயாக. அவன் நிறமும் உருவமும் உனது விடத்தால் மாற்றம் அடையும். நீ செய்தது நன்றியற்ற கொடுஞ்செயல் என்று நளன் வருந்துவான். ஆனால் அதுவும் அவனுக்கு நன்மையேயாகும். சென்று வருவீராக.

(மேடையில் ஒளி மயங்கி இருள் வருகிறது)

திரை

# காட்சி 9

(அதிகாலைப் பொழுது. வல்லியும் மங்கையும் கிரிமலையில் தீர்த்த மாடி நகுலேசுரரை வழிபட்டபின் தங்கள் இருப்பிடம் திரும்பி இல்லத்துள் நுழைகின்றனர். அவ்வேளையில் ''அம்மா தாயே!'' என்று அழைத்தவண்ணம் கோலூன்றித் தளர்ந்த நடையோடு முதுமையால் நடுங்கிய வண்ணம் முதியவன் ஒருவன் அவர்கள் முன்பு வந்து பணிவாகத் தண்டனிட்டு நிற்கிறான்)

வல்லி: (இரக்கத்துடன் அவனை நோக்கி) யாரப்பா நீ?

முதி: இந்த ஊர்க்காரன் தாயே! பரம ஏழை, அநாதை, எனக்கு யாரும் இல்லை. என்றாலும் உழைத்துப் பிழைக்க என் உடலில் உரம் உண்டு. (நிமிர்ந்து தன் பலத்தினைக் காட்டுவதுபோன்று கையை மடக்கித் தசையை எழுப்ப முற்படுகின்றான். கை சோர்கிறது. கிழவனின் அசட்டுத் தன்னம்பிக்கையையும் கோமாளித் தனத்தையும் பார்த்து வல்லியும் மங்கையும் சிரிக்கிறார்கள்)

முதி: ஏன் அம்மா சிரிக்கிறீர்கள்? என் பலத்தில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லையா? பத்துவருஷங்களுக்கு முன்னால் நீங்கள் என்னைப் பார்த்திருக்க வேண்டும். பத்துப்பேரையும் இந்தச் சிறிய தடிகொண்டு சமாளிப்பேன். ஆமாம்.

மங்கை: (சிரிப்பை அடக்க முயன்ற வண்ணம்) நீ மகாவீரன்தான். நாங்கள் மறுக்கவில்லை. உனக்கு இப்போது என்ன வேண்டும்?

முதி: உங்களுக்குப் பணிவிடை செய்து கொண்டு இங்கேயே ஒரு மூலையில் விழுந்து கிடக்க விடுங்கள் தாயே! அது போதும்.

மங்கை: தாத்தா, இங்கே பார். இதோ எங்களின் ஏவலுக்கென்றே நூற்றுக்கணக்கான ஆட்கள் காத்திருக்கிறார்கள். எங்களுக்குப் பணியாள் வேண்டியதில்லை. ஏதாவது தான தருமம் வேண்டுமா? தருகிறோம். பெற்றுச் செல்.

முதி: (கெஞ்சி மன்றாடி) அம்மா! தாயே! நான் மானஸ்தன். பிச்சை வாங்கும் வழக்கம் இல்லை. காசு பெரிதில்லை. உங்கள் கருணை இருந்தால் போதும்.

மங்கை: (சிறிது எரிச்சலுடன்) இது என்ன? காலைவேளையில் பெருந் தொல்லையாகிவிட்டது.

வல்லி: மங்கை! அவர்மீது சீறி விழாதே. பாவம்! இங்கு எங்களின் அறைவாசலில் விழுந்து கிடக்கட்டும். சரி. பெரியவரே! நாங்கள் பெண்கள். நீரோ வீராதி வீர சூராதி சூரக் கிழவனுர்.........

முதி: கிழவனு? அம்மா! அம்மா! அப்படிச் சொல்லாதீர்கள் அம்மா! (பற்களை இளித்துக்காட்டி) என் பற்களைப் பார்த்தீர்களா? எவ்வளவு உறுதியாக இருக்கின்றன? இரும்பைக் கூட. இந்தப் பற்களாலே கடிக்கமுடியும்.

வல்லி: சரியான கிழ.........இல்லை......இல்லை' இளைஞர்தாம்! நல்லது. இங்கேயே இரும்.
(வல்லியும் மங்கையும் இல்லத்தினுள் நுழைந்து திரும்பிப் பார்க்கிருர்கள். தனது பொய்த்தாடியையும் தலைப்பாகை யையும் போர்வையையும் நீக்கிய வண்ணம் உக்கிரசிங்கன் சிரித்தவண்ணம் அவர்கள் முன்பு நிற்கிருன்)

மங்கை: ஈழத்து மன்னர்! (திகைத்து நிற்கிருள்)

வல்லி; (உறைநிலையடைந்து திகைப்பை வெளியிட்டபின் விம்மிப் பொருமிய வண்ணம் முகத்திரையைக் கொண்டு முகத்தை முற்ருக மறைக்கின்ருள்)

உக்கிர: என்னை நீங்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை (சிரித்தபடி) அப்படித்தானே?...... வல்லி! (அன்போடு வல்லியின் அருகே செல்ல முற்படுகிருன். மங்கை தன் கைகளைப் பரப்பி அவனை முன்னேருதவாறு தடுக்கிருள். உக்கிரசிங்கனே அவளின் கைகளை விலக்கி வல்லியின் அருகிற் செல்ல அடியெடுத்து வைக்கிருன்)

வல்லி: வேண்டாம்......... வேண்டாம்......... என் அருகில் வராதீர் கள். உங்கள் அன்பு வல்லி, அழகு வல்லி, அல்ல நான். இங்கு நிற்பது குதிரைமுகம் கொண்ட அவலட்சணப் பேய்! அதன் முகம் உங்களை வெருட்டி ஓட்டிவிடும் தயை கூர்ந்து என் அருகில் வராதீர்கள்.

உக்கிர: வல்லி! நீ என்னை விளங்கிக் கொண்டது இவ்வளவுதானு?

(மௌனம்)

உன்னை அங்க சுந்தரியாகக் கண்டு உன் அழகை நான் நயந்தது உண்மைதான். ஆனுல்...... ஆனுல்......... உன்னிடம் விளங்கிய புற அழகை மட்டுமா நான் நேசித்தேன்? உனது கள்ளம் அற்ற உள்ளம், தூய அன்பு, அறிவு ஆகிய இவற்ருலேயே நான் உன்னிடம் அதிகம் அதிகமாக ஈர்க்கப்பட்டேன்......... ஈர்க்கப்படுகிறேன். இவற்றின் முன்பு உன் அழகு என்வரையில் வெறும் தூசு......... துரும்பு......... அது எனக்கு வேண்டவே வேண்டாம்.

மங்கை: (வியப்புடன்) மஹாராஜா, கணத்துக்குக் கணம் வேடம் மாறும் நீங்கள் பொய் பேசுவதிலும் மன்னர்தான் போலும்.

வல்லி; வேந்தே! என் மனம் நொந்து கிடக்கிறது. என் முகத்தைப் பளிங்கிலே காணும் ஒவ்வொரு வேளையிலும் என்னையே நான் வெறுத்து என்னுள் நான் அழுது கொண்டிருக்கிறேன். உங்கள் பொய்களாலும் ஏளனப் பேச்சுக்களாலும் என்னை மேலும் அழவைக்காதீர்கள் .. ... போய்விடுங்கள்.

உக்கிர: (கத்துகிறான்) வல்லி! (தடுமாற்றத்தோடு தலையைப் பிடித்த வண்ணம் அங்கும் இங்கும் உலாவுகின்றான். (திடீரென்று நின்று) உனக்கு என்னை விளக்குவது எப்படி என்றே தெரிய வில்லை .... உம்.. ...... (சிந்திக்கின்றான்) வல்லி.

(மௌனம்)

மங்கை: மஹாராஜா, தங்கள் கால்களில் விழுந்து கெஞ்சிக் கேட்கிறேன். இளவரசியின் துன்பம் பெரிது. உயிரோ தவச்சிறிது உங்கள் வருகையாலும் பேச்சாலும் அந்த உயிருக்கு ஊறு விளைக்காதீர்கள் ...... தயை கூர்ந்து போய்விடுங்கள்.

உக்கிர: மங்கை ... மங்கை (சினத்துடன் அவளை நெருங்கிப் பின் தயங்கி நிற்கிறான்) சில நாள்களாவது அன்புரிமையோடு பழகியதைக் கொண்டு உன்னை வேண்டுகின்றேன். எனது நேர்மையிலும் பண்பிலும் உனக்குச் சிறிதாவது நம்பிக்கை இருக்குமானால் என்னையும் வல்லியையும் ஒரு நாழிகைப் பொழுது தனிமையில் விட்டு வெளியில் போய் இரு........ போவாயா மங்கை.

(மங்கை தயக்கத்தோடு வல்லியை நோக்குகிறாள். வல்லி உக்கிரசிங்கனின் வேதனை, குழப்பம் குமைந்த முகத்தை நோக்கி விட்டு, மங்கையை நோக்கி வெளியே போகுமாறு சைகை செய்கிறாள். மங்கை போகிறாள்)

உக்கிர: (ஆழமான, ஆனால் தாழ்ந்த குரலில்) வல்லி.........

வல்லி: (அவனை நேர்ப்பார்வையாகப் பார்த்து வேதனை கொப்பளிக்க முகம் தாழ்த்திச் சோர்ந்து நிற்கிறாள்)

உக்கிர: வல்லி........ நான் உன் முகத்தைப் பார்க்கவில்லை. உன் அருகில் கூட வரவில்லை. ஆனால் உன்னிடம் சில கேள்விகள் கேட்பேன். நீ தயங்காது பதில் சொல்ல வேண்டும். உன் பதில்கள் எனது எதிர்பார்ப்பிற்கு மாறாயிருக்குமானால் நான் தொடர்ந்து உனக்குத் தொல்லை தரமாட்டேன்.

வல்லி: கேளுங்கள்.

உக்கிர: நீ உன் தந்தையாரை மிகவும் நேசிக்கிறாய்?

வல்லி: இது என்ன கேள்வி? இந்தப் பிறவியே அவரால் கிடைத்தது. என்னில் ஓடுவது அவர் குருதி. 'பிதுரு தேவோ பவ' என்பது உபநிடதம் உபதேசிக்கும் உண்மை. தந்தை என் தெய்வம்.

உக்கிர: உன் தந்தை முதியவராகிப் பல் கழன்று சொல்லிழந்து சோர்ந்த நடையினராய் நரை, திரை, மூப்புக்கு ஆளாகிச் சகிக்கவியலாத குரூரத் தோற்றத்தை அடைகிறார். அவ்வேளையிலும் அவரில் நீ அன்பு செலுத்துவாயா?

வல்லி: இது அசட்டுக் கேள்வி.

உக்கிர; அடுத்து உன் தாயை நோக்குவோம். முதுமை அதனால் அவலட்சணம்... ...

வல்லி: தொடர வேண்டாம். இதற்கும் முதற் பதில்தான். தாயை எந்த நிலையிலும் நேசிக்காமல் இருப்பது இயலாத காரியம். தாய் என்றால் பாசம். பாசம் என்றால் தாய். 'மாத்ரு தேவோ பவ.'

உக்கிர: சரி....... நானும் நீயும் திருமணம் செய்து கணவன் மனைவி ஆகிவிட்டோம் என்று வைத்துக்கொள்.

வல்லி: (உக்கிரசிங்கனை நிமிர்ந்து நோக்குகிறாள். குரூரமான அவன் முகத்திலே தோன்றிய உணர்ச்சிகள் விளங்க முடியாதனவாய் உள்ளன. எனினும் உக்கிரசிங்கனுக்கு அவை புதிர்களாய் இல்லை)

உக்கிர: ஒரு கதைக்கு—ஓர் உதாரணத்துக்கு— இதைச் சொன்னேன். வேறொன்றுக்காவும் அல்ல .. கேள். திருமணத்தின் பின் நான் செருக்களத்திலே கையிழந்தோ, காலிழந்தோ, கண்ணிழந்தோ அல்லது உன்னைப்போல் விகார முகம் அடைந்தோ விட்டால், அந்த வேளையில் நீ என்னை வெறுப்பாயா? 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்று வெறுப்பை மறைத்து என்னைச் சகித்துக் கொள்வாயா? அல்லது அன்பால் பிணைந்த உன் உள்ளம் அந்த நிலையிலும் என் மீது பாசம் செலுத்துமா?

வல்லி: (ஓடி வந்து அவன் காலடியில் வீழ்ந்து) எந்த நிலையிலும் என் அன்பு மாறாது; என் பாசம் குறையாது. நீங்கள் என் இதயக் கோயிலில் தெய்வமாகவே என்றும் வீற்றிருப்பீர்கள். இது சத்தியம்.

உக்கிர: (அவளைத் தூக்கி நிறுத்தி) என் அன்பு வல்லி, ஆணாகப் பிறந்த ஒரே குற்றத்துக்காக, நானும் உன்னில் எந்தச் சூழ் நிலையிலும் அன்பு செலுத்துவேன் என்று சொன்னால் அதை உன்னால் நம்ப முடியாது. இல்லையா?

வல்லி: நம்புகிறேன். என் அன்பே! என் உயிரே! நம்புகிறேன். நம் புகிறேன். (விம்மி விம்மி அழுகிறாள்)

உக்கிர (அவள் கூந்தலை ஆதரவுடன் நீவி) இதைத்தான் நான் முதலி லேயே உனக்குச் சொன்னேன். வல்லி, நீ என் உள்ளத்திலே நிலைத்திருப்பது உன் புற அழகால் அல்ல. நீ எந்த நிலையி லும் என் இதயதேவதைதான். இதில் உனக்குச் சந்தேகமே வேண்டாம்.

வல்லி: (அவன் கால்களைக் கட்டிக்கொண்டு அழுகிறாள். உக்ரசிங் கன் அவளின் தோள்களைப் பற்றித் தூக்கி விடுகிறான்)

உக்கிர: அழு. நன்றாக அழு. உன் நெஞ்சிலே என்னைப் பற்றிய சந்தேகக்கறை முற்றாகக் கழுவப்படும்வரை அழு.
(வல்லி தலையை நிமிர்த்தி அவனை உற்று நோக்குகிறாள். மௌனத்தில் சில கணங்கள் கரைகின்றன)

உக்கிர: நான் திரும்பிச் செல்லவேண்டிய நேரம் வந்துவிட்டது. (அவள் நாடியை நிமிர்த்தி) எனக்கு விடை கொடு.

வல்லி: (குழந்தைத் தனமாக) போகத்தான் வேண்டுமா?

உக்கிர: வல்லி! உன்னுள் நானும் என்னுள் நீயும் நிரந்தரமாகக் குடியேறி விட்டோம். போவதும், வருவதும், பிரிவதும், கூடு வதும், எல்லாம் வெறும் உடற்செயல்கள், சட இயக்கங்கள். ... — ஆனால் ஒன்று, என் தலைநகரான கதிரைமலையிலிருந்து நாள்தோறும் உன்னிடம் வருவேன்; உனக்குப் பணிவிடை செய்வேன்.

வல்லி: (விரைவாகத் தலையை ஆட்டி அவன் உதடுகளைக் கையால் மூடுகிறாள்)

உக்கிர: ஆணுக்குப் பெண்ணின் பணிவிடையைப் பெற உள்ள அன்பு ரிமை பெண்ணுக்கு ஆணிடமும் உள்ளது. நான் பெண்ணு ரிமையை மட்டும் அல்ல, உன் உரிமையையும் மதிக்கிறேன்.

வல்லி: நான் பெண் இல்லையா?

உக்கிர: நீ........... (குனிந்து அவள் காதினுள்) நீ என் தெய்வம்.

வல்லி: (நாணித்தலை குனிகிறுள்)

உக்கிர: வருகிறேன்......... வருவேன் ...... அஞ்சாதே........ மாறு வேடத்திலேதான்.

(போகிறுன். மங்கை உள் நுழைகிறுள். வல்லி ஓடிச் சென்று மங்கையைத் தழுவிக்கொள்கிறுள்)

வல்லி: மங்கை, என்னைப் போல் பாக்கியசாலி உலகில் எவருமே இல்லை.

மங்கை: என்ன, அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்?

வல்லி: (கம்பீரமாக)

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே ஆழி
சூழ்ந்தாஈ ழத்துச் சிறுநிலப்
பெருவளம் கொழிக்கும் நாடனெடு நட்பே.

திரை

# காட்சி 10

(குமாரத்தி பள்ளத்தில் வல்லியின் தனியறை. வல்லி களைத்துச் சோர்ந்து அணையொன்றில் சாய்ந்திருக்கிருள். அவள் அருகிலே தூண்டாமணி விளக்கொன்று ஒளியை உமிழ்ந்த வண்ணம் இருக்கிறது. அதன் சுடர் வல்லியின் முகத்தில் வீழ்கையில் அது இரத்தச் சிவப்பாகக் காட்சி தருகின்றது. அதில் முன்னைய அளவு கோரம் இல்லை. எனினும் முற்ருகக் குதிரை முகம் மாருமையால் அவலட்சணத்தின் சாயல் படிந்தே காட்சி தருகின்றது. மங்கை வெள்ளிப் பாத்திரம் ஒன்றில் பால் கொண்டு வருகின்ருள்.)

**மங்கை:** இளவரசியாரே, இன்று முழுவதும் ஒரு கவளம் உணவு கூட உண்ணவில்லை இந்தப் பாலையாவது அருந்துங்கள்.

**வல்லி:** (பலவீனமான மெல்லிய குரலில்) வேண்டாம் மங்கை! என்ஞல் இன்று ஒன்றுமே அருந்த முடியாது. வயிற்றைக் குடைந்து கொண்டு ஒரே வலி வாந்தி வரும் போல் இருக்கிறது. முகம் முழுவதும் தீக்கங்குகளால் தடவுவது போல ஒரே எரிவு...... தாங்க முடியவில்லை.

**மங்கை:** நாச்சியார்! ஒரு மிடறு பாலாவது அருந்துங்கள். உடல் பலவீனமாஞல் நோயைத் தாங்கும் சத்தியும் இல்லாது போய் விடும்.

**வல்லி:** (எரிச்சலுடன்) உன் தொல்லையே பெருந்தொல்லை ஆகிவிட்டது. உன்னேடு வாதாட என்ஞல் இயலாது, என்முன் நில்லதே, போ, பாலும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்,

**மங்கை:** (வேதனையோடு) சரி! உங்கள் பிடிவாதம் இன்னும் சில கணங்கள்தானே! அரசர் வந்ததும்.........

**வல்லி:** (வேதனையோடு முகத்தைத் தலையணையுள்ளே புதைத்தபடி) அவர் வந்தாலும் நான் இன்று பால் அருந்தப் போவதில்லை, என்ஞல் முடியாது,

(உக்கிரசிங்கன் உள் நுழைகிருன், முதியவர் வேடம்)

**உக்கிர:** அப்படியா?

**மங்கை:** (அலுப்புடன்) இளவரசியாரின் பிடிவாதத்தை இன்று தாழ முடியவில்லை, இனி அவர்பாடு, உங்கள் பாடு,
(பாற்பாத்திரத்தை உக்கிரசிங்கனிடம் கொடுத்துவிட்டு உள்ளே போகிருள்)

உக்கிர: (வல்லியின் அருகே சென்று அவள் தலையை மெல்லத் திருப்பி) இது என்ன குழந்தைப் பிடிவாதம்? உம், பாலை அருந்து.

வல்லி: (தலையை நிமிர்த்தி) அருந்தாவிட்டால் விடவா போகிறீர்கள்? தாருங்கள். நேற்று உங்கள் வற்புறுத்தலுக்காகப் பால் அருந்தி நடந்தது தெரியுந்தானே?

உக்கிர: அப்படி என்ன நடந்தது?

வல்லி: உங்கள் உடையெல்லாம்.........

உக்கிர: அதனால் என்ன? என் உடைதானே? (பாலை வேறொரு பாத்திரத்தில் ஆற்றிச் சிறிது சிறிதாக வழங்குகின்றான்)

வல்லி: (பாலை அருந்திய வண்ணம்) உடை நனைந்தது போல.........

உக்கிர: (வல்லியின் கன்னத்தில் செல்லமாகத் தட்டி) உன் அன்பால் என் உள்ளம் எப்பொழுதுமே நனைந்து கொண்டிருக்கிறது.

வல்லி: நான் சொல்ல வந்தது ........

உக்கிர: அதெல்லாம் எதற்கு? நீ பாலை அருந்து.

(வல்லியின் வாய் வாந்தி எடுக்கும் பாவத்தில் சுழல்கிறது. உக்கிரசிங்கனிடம் பாற்பாத்திரத்தைக் கொடுத்துவிட்டு அவள் குனிந்து நெஞ்சைப் பிடித்த வண்ணம் வாந்தி எடுக்க முற்படுகிறாள். உக்கிரசிங்கன் அவசரம் அவசரமாகப் பாத்திரத்தை அப்பால் வைத்துவிட்டு எச்சிற் படிக்கத்தை எடுத்து வந்து அவள் வாயருகிற் கொண்டு செல்ல அவள் வாந்தி எடுக்கிறாள். பின் சோர்ந்து தலையணையிற் சாய்கிறாள். உக்கிரசிங்கன் வெள்ளைத்துணி ஒன்றால் (வல்லி தடுக்கவும் கேளாது) அவளின் வாயைத் துடைத்து விடுகிறான். எச்சிற் படிக்கத்தைப் பழைய இடத்தில் வைத்துத் திரும்புகிறான்)

வல்லி: நீங்களும் மங்கையும் மகா கொடியவர்கள். பாலை அருந்தச் செய்து என் வயிற்றைப் புரட்டி எடுத்துவிட்டீர்கள்.

உக்கிர: (அவளைப் பரிதாபமாகப் பார்த்து) நோய்வேளையில் வயிற்றுக்கு ஏதாவது ஆதாரம் வேண்டாமா? அதனால்தான்......

வல்லி: அரசே, உங்கள் அன்பு என்ற ஒரே ஆதாரத்திலேதான் நான் உயிரைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். குதிரை முகமோ ...

உக்கிர; யார் சொன்னது? முன்னரிலும் எவ்வளவோ மாற்றம். உன் முகத்தில். விரைவில் அது பழைய நிலையை அடைந்துவிடும்.

வல்லி: எனக்கும் அது தெரிகிறது… … என் கனவில் முருகன் குழந்தை வடிவில் ஒவ்வோர் இரவும் வந்து ஆடல் புரிகின்றான். என் நோய் மாறினால் இந்த இடத்திலேயே அவனுக்குப் பெருங்கோயில் எடுப்பேன்.

உக்கிர; நம்பினோர் கெடுவதில்லை. உன் நம்பிக்கை நிச்சயம் நிறைவேறும்; நிறைவேற வேண்டும் என்று நானும் முருகனை நாள்தோறும் மனமொழி மெய்களால் வழிபட்டுக் கொண்டே இருக்கிறேன்……. இப்பொழுது நீ சிறிது தூங்கு …… எல்லாம் சரியாகிவிடும்.

வல்லி: நான் தூங்க வேண்டும் என்றால் ஒரு நிபந்தனை.

உக்கிர: என்ன சொல்?

வல்லி: நீங்கள் முருகப்பெருமான் மீது ஒரு பாடல் பாடவேண்டும்

உக்கிர: கரும்பு தின்னக் கையூட்டா?
(உக்கிரசிங்கன் பாடத்தொடங்குகிறான். ஒவ்வோரடியும் பாடப்பாட வல்லியின் முகத்தில் மாற்றமும் படிப்படியாக வேதனையும் கூடுகின்றன. ஈற்றடியைப் பாடும் பொழுது அவள் வேதனை தாங்காது தன் மஞ்சத்திலுருந்து கீழே விழுகிறாள். அவ்வேளையில் அவளது முகத்தின் குதிரை முகக் குரூரம் மாறி முன்னரிலும் கூடிய சௌந்தரியம் தோன்றுகின்றது. அவள் மூர்ச்சையாகி விடுவதால் தன் முகமாற்றத்தை அவளால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. உக்கிரசிங்னே தான் பாடும் பத்திப்பாடலோடு தன்னையும் கலந்து பரவசமாகி விட்டதால் அவனுக்கும் அவளின் முகமாற்றம் தெரியவில்லை)

பாட்டு

அழகு தமிழின் நிலவும் இனிமை
அறிய அருளும் முருகோனே!
அரிய நறிய மணமும் ஒளியும்
அருளும் உலவும் திருமார்பா!
விழையும் அடியர் உயிரும் மனமும்

விரவி அருளைப் பொழிவோனே!
மிகவும் இழிவு மலியும் அசுரர்
வெதிர அயிலை விடுவோனே!
குழையை அளவும் நெடிய விழியள்
குழலின் இனிய மொழியாளைக்
குறவ ரிடையில் கவர முதிய
கிழவன் உருவில் வருவோனே!
பழையன் எனினும் இளமை நிலவும்
பகர அரிய எழிலோனே!
பரமன் அருளக் கதிரை மலையில்
பயிலும் எமது பெருமானே!

(பாடலின் இறுதியடியின் போது ' முருகா! முருகா! ' என்று கதறியபடி வல்லி கீழே விழுந்த ஓசை கேட்ட மங்கை உள்ளேயிருந்து ஓடி வருகிறாள். மன்னனின் மெய்ம் மறந்த நிலையையும் வல்லியின் மயக்க நிலையையும் கண்டு திகைத்து ஓடிச் சென்று குப்புறக் கிடந்த வல்லியின் முகத்தைத் திருப்புகிறாள். வல்லியின் முகக்கோலம் அவளைப் பரவசமாக்குகின்றது. '' மஹாராஜா, மஹாராஜா '' என்று அவள் கத்த, மெய்ம் மறந்த நிலையிலிருந்து விடுபட்ட உக்கிரசிங்கன் வல்லியின் நிலைகண்டு அவள் அருகே ஓடி வருகிறான்)

மங்கை: (மகிழ்ச்சியால் உரத்த குரலில்) எங்கள் இளவரசியாரின் முகத்தைப் பாருங்கள் மஹாராஜா, பாருங்கள்.

உக்கிர: (வல்லியின் அருகில் வந்து அவள் முகத்தை நெடிதுநோக்கி) முருகா! முருகா!

மங்கை: எங்கள் இளவரசியார் முன்பு பூரண சந்திரனாய் ஒளிவிட்டவர். இடையில் வந்து மூடிய கிரகணம் விலக இப்பொழுது கதிரவனின் சுடரொளியாய் ஒளிவிட்டுக் கண்களைக் கூச வைக்கிறார். (மகிழ்ச்சியால் மங்கைக்கு வார்த்தைகள் வெளிவரவில்லை. அவள் வல்லியை ஆரத்தழுவிக் கொள்கிறாள்)

உக்கிர: சரி, வல்லியைத் தூக்கி மஞ்சத்தில் கிடத்துவோம். (இருவரும் வல்லியைத் தூக்கி மஞ்சத்தில் கிடத்துகிறார்கள்)

மங்கை: என் மகிழ்ச்சியை என்னால் தாங்கவே கூடவில்லை. மஹாராஜா உங்களுக்கும் அப்படித்தானே?

உகிர: உனக்கும் வல்லிக்கும் மகிழ்ச்சி என்றால் எனக்கும் மகிழ்ச்சி தான். நல்லது....... வல்லி களைத்து மயங்கிக் கிடக்கிறாள் அவள் விழித்தெழுந்ததும் ஏதாவது அருந்துவது நல்லது. புதிதாகப் பால் காய்ச்சி எடுத்துவா......... போ.

(மங்கை உக்கிரசிங்கனின் முகத்தைப் பார்க்கிறாள். அதில் அவள் எதிர்பார்த்த பெருமகிழ்ச்சி எதுவும் இல்லை. சலனமற்ற அந்த முகத்தைப் பார்க்க அவளுக்கு ஏமாற்றமாக இருக்கிறது. புதிர் மனிதனாக அவனை நினைத்துக்கொண்டு தன் ஏமாற்றத்தைத் தோளில் முகத்தை இடிப்பதால் வெளிப்படுத்திய வண்ணம் அவள் உள்ளே செல்கிறாள்.)

உக்கிர: (வல்லியின் முகத்தை நோக்கிய வண்ணம்) வல்லி! உன் அழகு மறைந்தது, பின்பு உதித்தது. நான் இந்த இருநிலைகளையும் சமமாகவே ஏற்கிறேன். ஏன் தெரியுமா? எனக்கு வல்லி என்ற புனித ஜீவன் மீதுதான் காதல்.

திரை

# காட்சி 11

(காவிரித் துறைமுகம். மரக்கலம் ஒன்று புறப்படத் தயாராக இருக்கின்றது. துறைமுக மண்டபம் ஒன்றிலே மணிமாலைகள் தோரணங்கள் முதலியன அழகாகத் தொங்குகின்றன; உள்ளே முத்துக் கம்பளம் விரித்து அவற்றின்மேல் பொன் மெருகிட்ட அழகிய ஆசனங்கள் இடப்பட்டிருக்கின்றன. ஆசனங்களுக்குச் சற்றுத் தள்ளி உயர்ந்த பீடம் ஒன்று. அதன்மீது கம்பளம் விரித்து ஐம்பொன்னாலான ஆறுமுக சுவாமி, கந்தசுவாமி, பழனியாண்டவர், விநாயகர் ஆகியோரின் விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ளன. அவை தெய்விகத்தையும் அழகையும் அள்ளிச் சொரிந்த வண்ணம் காட்சி தருகின்றன. இந்தப் பீடத்தின் பக்கலிலே இதனிலும் சற்று உயரம் குறைந்த பீடம் ஒன்று கம்பளம் விரிக்கப்பட்டு இருக்கிறது. சற்றுப் பொறுத்து அம்மண்டபத்தின் வெளியிலே பெரிய ஆரவாரம், நாதசுவரம் மேளதாளங்களோடு பேரிகை. சங்கு, சேமக்கலமும் கலந்து ஒலிக்கின்றன அடுத்து திசையுக்கிரசோழன் வருகைக்கு அறிகுறியாகக் கட்டியம் கூறப்படுகின்றது )

**கட்டியம்:** ராஜாதிராஜ, ராஜமார்த்தாண்ட வீர விஜய கம்பீர உபய உத்கிருஷ்ட க்ஷத்திரிய குலோத்பவ, ஸ்ரீஸ்ரீஸ்ரீ திசைஉக்கிர சோழ மன்னர் பிரான் எழுந்தருளுகின்றார். பாரக்!

அவர்தம் பட்டத்துத் தேவியார் அங்க, வங்க, கலிங்கம் எறிந்த பராந்தக சோழ பரம்பரைத் தோன்றல் குமாராதித்த சோழரின் திருப்புதல்வியார் வானவன் மாதேவி நாச்சியார் எழுந்தருளுகின்றார். பராக்!

(பெண்கள் இருபக்கங்களிலும் கவரி இரட்ட முன்னே கொடி, குடை, ஆலவட்டம், சூழ்ந்துவரப் பின்னே சேவகன் முத்துக் குடை பிடிக்க மெய்காவலர் புடைசூழத் திசையுக்கிர சோழனும் வானவன்மாதேவியும் மெல்ல நடந்து வந்து தமக்குரிய ஆசனங்களில் அமர்கின்றனர். சவரிவீசும் மகளிரும் முத்துக் குடைபிடிப்போனும், மெய்காவலரும் தத்தம் இடங்களில் நிற்க, கொடி குடை ஆலவட்டம் தாங்கியோர் வெளிச் சென்றதைத் தொடர்ந்து அமைச்சர் அருண்மொழித் தேவரும், தளபதி மார்த்தாண்டனும் வந்து தங்களுக்குரிய ஆசனங்களில் அமர்கின்றனர். வெளியில் மக்கள் கூட்டம்,

மன்னர் பிரான் திசையுக்கிர சோழப்பிரபு வாழ்க!

வாழ்க! வாழ்க!

மன்னரின் தேவியார் வானவன் மாதேவியார் வாழ்க!

வாழ்க! வாழ்க!

முதலமைச்சர் அருண்மொழித் தேவர் வாழ்க!

வாழ்க! வாழ்க!

தளபதி மார்த்தாண்ட தேவர் வாழ்க!

வாழ்க! வாழ்க!

என்று கோஷித்து அடங்குகிறது)

திசை: அருண்மொழித் தேவரே! எங்கள் குழந்தை கட்டிய கோயிலிலே எழுந்தருளப் போகும் கந்தனுக்கு என்ன திருநாமம் சூட்டுவது என்று தீர்மானித்து விட்டீரா?

அருண்: ஆம் பிரபு! எம்பெருமானின் விக்கிரம் சிதம்பரத்திலே உருவாக்கப்பட்டுள்ளமையால் சிதம்பரத்தையும் அங்கு எழுந்தருளிய அம்பலவாணரையும் நினைவு கூருமுகமாகச் 'சிதம்பரம் அம்பலவாணர் கந்தசுவாமி' என்று திருநாமம் சூட்டலாம்.

வானவன்: மிகப் பொருத்தமான திருநாமந்தான். திருக்கோயிலுக்கு மாவிட்டபுரம் என்று பெயர் வழங்கலாம். எங்கள் அருமைப் புதல்வியின் குதிரை முகம் நீங்கியதன் நினைவுச் சின்னமாக அப்பெயர் நின்று நிலைக்கும்.

திசை; நன்று சொன்னாய் தேவி. அவ்வாறேயாகட்டும். அமைச்சரே அநாவர்த்தன கும்பாபிடேகத்துக்கான பூசைத்திரவியங்கள் யாவும் அனுப்பப்பட்டு விட்டனவா?

அருண் சென்றவாரமே எல்லாம் அனுப்பப்பட்டு விட்டன மஹாராஜா!

மார்த்: பூசைத் திரவியங்கள் மட்டுமா? திருக்கோயிலின் சூழலிலே நிலையாக வசித்துக் கோயிற் பணிவிடைகள் புரியப் பொருத்தமான குடும்பங்களையும் தெரிந்து அனுப்பியுள்ளோம்.

வானவன்; மிக நல்ல ஏற்பாடு இசையாளர்கள், சிற்பாசாரியார்கள், கம்மாளர், மாலைகட்டுவோர், ஏகாலியர்கள், ஏவற்பணியாளர். சோதிடர் என்று ஓர் ஆலயத்திற்கு வேண்டப்படுவோர் பலர்.

அருண்: தேவியாரின் கூற்று ஏற்புடையதே. தாங்கள் குறித்த அத்தனை வகையினரும் ஏற்கெனவே அனுப்பப்பட்டு விட்டனர்.

திசை: (மெல்லச் சிரித்தபடி) திருமணத்தில் மங்கல நாணாகிய தாலியை மறந்தது போல முக்கியமான ஒருவரை அருண்மொழித்தேவர் மறந்து விட்டார் போலும்.

அருண்: (முறுவல் பூத்து) மறப்பேனா? கோயிலின் கும்பாபிடேகத்தை நடத்தி வைக்கவும் தொடர்ந்து பூசைக்கிரமங்களை ஒழுங்காகச் செய்து வரவும் சிவாசாரியார் மிக இன்றியமையாதவர் என்பதை நான் அறிவேன்.

திசை: தில்லை மூவாயிரவருள் ஒருவரை அனுப்பல் வேண்டும் என்பது எம் குழந்தையின் விருப்பம். இதை உமக்கு முன்னரே கூறியிருந்தேன். (பெருமூச்சு விட்டு) அவர்களோ கடல் கடந்து செல்லாத நியமம் பூண்டவர்கள். ஈழம் செல்லக் கடல் கடந்தாக வேண்டுமே!

மார்த்: (சிரித்து) இலங்காபுரி வேந்தனான இராவணேசனிடமிருந்த புட்பக விமானந்தான் அவர்களை அனுப்பத் தேவைப்படும். அவனும் இன்று இல்லை. புட்பக விமானம் அமைக்கும் தொழில்நுட்பமும் நாம் அறியோம்!

அருண்: காராதி மார்த்தாண்டருக்குச் சமயசந்தர்ப்பம் தெரிவதில்லை எல்லா விடயத்திலும் விளையாட்டும் பரிகாசமுந்தான்.

மார்த்: (வாயைப் பொத்துவது போலப் பாசாங்கு செய்து) மன்னிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சரே! உங்கள் சூரந்தனம் எனக்குத் தெரியாதா? மணலையும் கயிறாகத் திரிக்க வல்ல உம்மால் ஆகாததும் உண்டோ?

(அனைவரும் சிரிக்கின்றனர்)

அருண்: என்னைச் சீண்டுவதே இவருக்குப் பொழுதுபோக்கு. மஹாராஜா! ஆரம்பத்தில் மூவாயிரவர் என் வேண்டுகோளைத் தாங்கள் கூறிய நியாயத்தைக் காட்டி மறுத்தது உண்மையே.

வானவன்: (மகிழ்ச்சியுடன்) பின்பு ஏற்றுக் கொண்டு விட்டார்களா?

அருண்: மிகுந்த தயக்கத்தைத் தொடக்கத்தில் அவர்கள் காட்டியது உண்மையே. எம்பெருமான் தில்லையிலாடி, சிதம்பரநாதன் திருவருளால் கடைசியில் அவர்கள் ஒப்புதல் அளித்துவிட்டார்கள். இந்த ஒப்புதலுக்காக ஆடலழகனை வேண்டிக் குறையிரந்து அவன் சந்நிதியிலே மூன்று நாள் நோன்பு நோற்றுப் பழிகிடந்தார்கள்.

திசை: உம்...... பிறகு...... ..

அருண்: ''பிராமணர் கோயிற் சேவைக்குச் செல்வதை மறுத்தல் கூடாது. அல்லாமலும் அங்குக் காசிப் பிராமணர் கூட வாழ்ந்து வருகின்றனர். பிராமணர் கடற் பிரயாணம் இரவிலேதான் மேற்கொள்ளக் கூடாது. பகலிற் செல்வது சாத்திர சம்மதம்'' என்ற அசரீரி வாக்கைக் கேட்டபின்னரே அவர்களில் ஒருவரை அனுப்பச் சம்மதித்தனர்......... அவரும் குடும்பத்தினரும் வருவதற்காகவே காத்திருக்கிறேன்.

மார்த்: (சிரித்தபடி) அவர் வருவதற்கு முன்பு மாலையாகி விட்டால்... எங்கள் பிரயாணம் .. ?

திசை: இல்லை மார்த்தாண்டா! தில்லைவாழ் அந்தணர்கள் வாக்குத் தவறாத கண்ணியர்கள். சிவாசாரியார் வருவதற்கு என்ன தடையோ? முருகன் எங்கள் குழந்தையின் ஆசையை நிறைவேற்றத் தவறான். சற்றுப் பொறுப்போம்.

வானவன்: (பெருமூச்சு விடுகிருள்)

திசை: ஏன் இந்தப் பெருமூச்சு தேவி!

வானவன்: எங்கள் குழந்தை ஈழம் சென்று ஆறு திங்கள் கடந்து விட்டன,

திசை; ஆனல் எங்கள் உள்ளங்களிலே ஆறாத வடுவாய் நெருடிக் கொண்டிருந்த துன்பம் இந்த ஆறு திங்களில் ஆறிப்போய் விட்டதல்லவா?

அருண்: ஆம், மஹாராஜா! சரியாகச் சொன்னீர்கள். கிரகணத்தால் மூடுண்டிருந்த பூரண சந்திரன், கிரகணம் நீங்க முன்னரிலும் பன்மடங்கு பிரபையுடன் ஒளிர்வதுபோல, இன்று இளவரசியார், வல்லிநாச்சியார் ஒளிவிட்ட வண்ணம் உள்ளார்.

வானவன்: (ஆவலும் பாச உருக்கமும் ததும்ப) அப்படியா? இப்போதே ஓடிச் சென்று அவளை கட்டித் தழுவி என் பாசத்தையெல்லாம் கொட்டி அவளை உச்சி முகர்ந்து, முத்த மாரி பொழிந்து........

திசை: எனக்கு மட்டும் அந்த ஆசை, பாசம் இல்லையா தேவி! (பெருமூச்சு விட்டு) என்ன செய்வது? ஆட்சிப் பொறுப்புக்

கள் என்னைச் கட்டித் தளையிடுகின்றனவே! மாவிட்டபுரக் கும்பாபிடேகம் நிறைவு பெறும் வரை இன்னும் இருதிங்கள் எங்கள் ஆவலுக்கு அணையிட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

மார்த்; மஹாராஜா, தங்களின் ஏக்கங்களும் தாபங்களும் எங்களுக்கு விளங்காமல் இல்லை. நானும் அமைச்சர் அருண்மொழித் தேவரும் காசாத்துறை சென்று ......

அருண்: காசாத்துறை அல்ல. காங்கேயன்துறை என்று சொல்லும். எம்பெருமான் முருகனின் திருநாமங்களில் ஒன்ருன அதுவே அந்தத் துறைக்குப் பொருத்தமான பெயர்.

திசை: இனிக்கின்ற பெயர்தான். உள்ளத்தைக் கனிவிக்கின்ற திருநாமந்தான். உக்கிரசிங்கன் வல்லியையும் எமது பரிவாரங்களையும் தன் நாட்டில் தங்க அநுமதி தந்தான்; கோயில் கட்டவும் ஒப்புதல் வழங்கினுன்; வல்லி தங்கியுள்ள இடத்திற்குக் குமாரத்தி பள்ளம் என்று பெயரிடுவதையும் அவன் மறுக்கவில்லை. ஆனல் அவனுடைய ஆதிக்கத்திலுள்ள துறைக்கு நாம் விரும்பும் பெயர் சூட்ட அவன் ஒப்புவானு? இது அளவுக்கு மீறிய எதிர்பார்ப்பாக எனக்குத் தோன்றுகிறது.

அருண்: (மகிழ்ச்சி பொங்க) முருகனின் அடியவனுன அவனது சம்மதம் எப்பொழுதோ முடிந்த காரியம். சென்றவாரம் நான் தூதுவரை அனுப்பி இந்தப் பெயர்மாற்ற வேண்டுகோளை அவனுக்கு விடுத்திருந்தேன். அவனும் பூரண சம்மதம் என்று தெரிவித்துவிட்டான்.

திசை: (சற்றுக் கோபமாக) அப்படியா? எனக்குத் தெரியாமலே .....

அருண்: மன்னிக்க வேண்டும் மஹாராஜா! தாங்கள் சோழச் சக்கரவர்த்தியாரின் அழைப்பை ஏற்றுச் சென்றிருந்ததால், தங்கள் அநுமதிக்குக் காத்திருக்க அவகாசம் போதியதாய் இருக்கவில்லை. என் ஆசைக்கு அணைபோட்டுத் தடுக்கவும் கூடவில்லை.

திசை: (முகம் மாறி) நல்ல காரியந்தான் செய்தீர். ஆனல் ஒன்று, உக்கிரசிங்கனின் உதவிகள், அடிப்படையிலே வேருெரு நோக்கைக் கொண்டவை — அந்த நோக்கம் உமக்குத் தெரியும்.

அருண்: ஆம், பிரபு! தாங்கள் அவன் அனுப்பிவைத்த திருமணத் தூதை இன்னும் மறக்கவில்லை.

திசை: என்றும் மறவேன்...... உக்கிரசிங்கனின் உதவிகளுக்கு நாம் கடப்பாடுடையோம். அவனுக்கு வேண்டிய பிரதியுபகாரங்

கலையும் சந்தர்ப்பம் ஏற்படும் பொழுது ஒன்றுக்குப் பத்தாகச் செய்யவும் தயங்கோம். ஆனல் அந்தப் பத்தினுள்ளே அவன் எதிர்பார்க்கும் அந்த ஒன்று என்றைக்கும் அடங்காது தெரிகிறதா?

அருண்: (பணிவோடு) தெரிகிறது மஹாராஜா!

வானவன்: (கணவனின் கவனத்தை வேறுதிசையிலே திருப்ப எண்ணி) அது போகட்டும். தில்லைவாழ் அந்தணரை இன்னும் காணவில்லையே; நேரம் ஆகிக்கொண்டிருக்கிறதே!

(அவ்வேளையில் ஏவலன் ஒருவன் வந்து அரசனுக்கு வணக்கம் செலுத்திப் பணிவோடு வாய்பொத்தி நிற்கிருன்)

திசை: என்ன செய்தி? சொல்.

ஏவ: மஹாராஜா, தில்லை மூவாயிரவருள் ஒருவரான பெரிய மனத்துளார் தமது குடும்பத்துடன் சிவிகையில் எழுந்தருளி வந்து கொண்டிருந்தார். வழியிலே பலத்த மழை. பயண தாமதத்திற்கு இதுவே காரணம் என்றும் இன்னும் சில நொடிப் பொழுதில் தாம் இங்கு வந்து விடுவார் என்றும் கூறி, என்னை அந்தச் செய்தியை அறிவிக்க அனுப்பி வைத்தார்.

(எல்லாரது முகங்களிலும் மகிழ்ச்சி மலர்கிறது. சிறிது பொழுதில் பெரிய மனத்துளாரும் குடும்பத்தினரும் உள்நுழைகின்றனர். அரசன் உட்பட யாவரும் எழுந்து வணங்குகின்றனர். பெரிய மனத்துளார் தமது வலக்கையைத் தூக்கி "வாழ்க வாழ்க, நீடு வாழ்க" என்று எல்லாரையும் ஆசீர்வதிக்கின்ருர்; சோழன், தேவி, அமைச்சர், தளபதி யாவர்க்கும் வீபூதி வழங்குகின்ருர்.)

திசை: (தாழ்ந்து பணிந்து வணங்கி) தேவரீர் வரவு நல்வரவாகுக.

(பெரிய மனத்துளார் புன் முறுவலோடு தமக்கென இடப்பட்ட பீடத்திலே சென்று அமர்கிருர். அவர் குடும்பத்தினர் அமர்கின்றனர். தொடர்ந்து திசையுக்கிரசோழன் உட்பட யாவரும் தத்தம் ஆசனங்களில் அமர்கின்றனர்)

பெரிய: எங்கள் வருகைக்காக நெடும் பொழுது காத்திருந்தீர்களா?

மார்த்: (முந்திக் கொண்டு) அதிக பொழுதில்லை ஸ்வாமி! நான்கே நான்கு நாழிகைப் பொழுதுகள் தாம்!

(திசையுக்கிர சோழனும் வானவன் மாதேவியும் தவிர்ந்த மற்றவர்கள் உதடுகளுள் சிரிக்கின்றனர்)

திசை: (மார்த்தாண்டனை உறுத்து விழித்து அடக்கிவிட்டு) அந்தணப் பெரியீர்! மாலை மங்கி மடிவதற்குள் ஈழத்தைச் சென்றடையாவிட்டால் தங்களுக்கு நாங்கள் அபசாரம் செய்தவர்களாவோம. இந்த அச்சந்தான் எங்கள் தளபதியை அப்படிப் பேச வைத்தது. மன்னிக்க வேண்டும்.

பெரிய: (சிரித்து) இதில் மன்னிக்க என்ன இருக்கிறது? அவர் சொன்னது உண்மை. சூரியன் அஸ்தமிக்க முன்பு நாங்கள் ஈழத்தைச் சென்றடைவது கட்டாயந்தான்.

அருண்: எதற்கும் யோசிக்க வேண்டாம். எங்கள் மீகாமன் மிகுந்த திறமைசாலி. காற்றும் பயணத்துக்குச் சாதகமாகவே இருக்கிறது.

பெரிய: அப்படியானல் சரி, நாங்கள் பயணத்துக்கு ஆயத்தம் (எழுந்திருக்கிருர். தொடர்ந்து அவரின் குடும்பத்தினரும் எழுகின்றனர்)

திசை: (பெரிய மனத்துளாரை வணங்கி) ஐயன்மீர், இந்த விக்கிரகங்களும் ஈழத்துக்குத் தங்களுடன் எழுந்தருள்கின்றன.

பெரிய: (அவற்றைக் கூர்ந்து கவனித்து) ஆஹா! சாஸ்திரோக்தமாக அமைக்கப்பட்ட விக்கிரகங்கள். இவற்றை அஷ்டபந்தனம் பண்ணி அஷ்டோத்ர கும்பாபிஷேகமும், கும்பாபிஷேகமும் செய்தபின், இவை சாந்நித்தியம் பெற்றுக் கிருபாசமுத்திரங்களாய் அருளை அள்ளி அள்ளி வழங்கும். இதற்குச் சந்தேகம் வேண்டாம். ஈழத்துச் சைவ மக்கள் பெரும் பாக்கிய சாலிகள் தாம்.

திசை; அடியேனின் சிறியதொரு வேண்டுகோளையும் தேவரீர் ஏற்றருளல் வேண்டும்.

பெரிய: என்ன? தயங்காது சொல்லும்.

திசை: இன்றிலிருந்து தங்களுக்கு ''மஹாராஜஸ்ரீ'' என்ற பட்டத்தினை வழங்குகின்றேன். இந்தப் பட்டம் தங்கள் மூத்த புதல்வருக்கோ அவர் இன்றேல் மூத்த புதல்விக்கோ தங்களின் பின் வழங்கிவரல் வேண்டும். அவர் பட்டத்திற்கு வரும் காலம்வரை 'இளவரசு' என்றே அழைக்கப்படல் வேண்டும். இந்தப் பணிப்பினைச் செப்புப் பட்டயத்தில் எழுதுவித்து

இந்தப் பேழையுள் வைத்துள்ளேன். தயை கூர்ந்து ஏற்ற ருள்க.

(பேழையைக் கொடுக்கிறான்)

பெரிய: (அதனைப் பெற்ற வண்ணம்) நன்று. நன்றி!

திசை: தங்களுடன் அமைச்சர் அருண்மொழித் தேவரும் தளபதி மார்த்தாண்டனும் பரிவாரங்களும் வருகிறார்கள். பூசைத் திரவியங்கள் முன்னரே அனுப்பப்பட்டுவிட்டன. இவர்கள் தங்களுக்கு வேண்டிய உதவியும் ஒத்துழைப்பும் வழங்குவார் கள். எனது குழந்தையின் குதிரை முகம் நீங்கியதால் 'மாவிட் டபுரம்' எனப் பெயர் பெற்றுள்ள ஆலயத்தின் சூழல் இனிக் கோயிற்கடவை ஆகின்றது.

(அருண்மொழித் தேவரைத் திரும்பி நோக்குகிறான். அவர் குறிப்பறிந்து ''யார் அங்கே'' என்று அழைக்கின்றார். வெளியி லிருந்து விபூதி உருத்திராட்சதாரிகளான பணியாளர்கள் உள்ளே வந்து விக்கிரகங்களைத் தூக்குகின்றனர். சங்கு, சேமக் கல வாத்தியத்துடன் அவர்கள் முன்செல்ல, அடுத்துப் பெரிய மனத்துளாரும் குடும்பத்தினரும், தொடர்ந்து சோழனும் தேவியும், அமைச்சரும் தளபதியும் செல்கின்றனர். பரிவா ரங்கள் பின் தொடர்கின்றன)

திரை

## காட்சி 12

(இக்காட்சி முழுவதும் பாத்திரங்களின் பாவனைகளும், இயக்கங்களுமாகவே இடம்பெறும் உரையாடல் இல்லை.)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மண்டலாபிடேக இறுதிநாள். மூலஸ்தானத்தில் அபிடேக ஆராதனைகள் இடம் பெறுகின்றன. கண்டாமணி ஓசையும் மங்கல வாத்திய இசையும் கலந்து சங்கமிக்கின்றன. இவற்றையும் விஞ்சிக்கொண்டு சிவாசாரியார்களின் வேதமந்திர ஓசைகள் கம்பீரமாக ஒலிக்கின்றன. அடியார் கூட்டம் அர்த்தமண்டபம், மகாமண்டபம் எங்கணும் நிறைந்து நின்று அரஹர கோஷம் எழுப்புவதும் தோத்திர கீதங்களை இசைப்பதுமாக ஒரே பத்திச் சூழல்.

வல்லி அடியார்களின் முன்வரிசையில் முதலில் நின்று கண்மூடி (கண்களில் நீர்வார) மெய்ம்மறந்து முருமப் பெருமானைத் தியானித்து வணங்குகின்றாள். சில நொடிகள் கழிய மங்கை அவள் அருகில் வந்து அவள் தோளை மெல்லத் தொடுகிறாள். திடுக்குற்ற வல்லி கண்களைத் திறந்து, திரும்பி மங்கையைப் பார்த்துக் கண்சாடையாலேயே விடயம் என்ன என்று கேட்கிறாள். மங்கை திரும்பி ஆண்வரிசையை நோக்குமாறு சாடைகாட்ட வல்லி திரும்பிப் பார்க்கிறாள். அங்கு உக்கிரசிங்கன் முதியவன் வடிவில் அவளையே பார்த்து வெளியில் வருமாறு சைகை செய்கிறான்.

வல்லி அதனை விளங்கிக் கொண்டு மங்கை உடன்வர வெளியில் வருகின்றாள். அவர்கள் வருவதைக் கண்ட உக்கிரசிங்கன் ஆண்கள் கூட்டத்திலிருந்து வெளிப்பட்டு வல்லியும் மங்கையும் சென்ற திசையை நோக்கிப் போகின்றான்)

திரை

# காட்சி 13

(நகுலமுனிவரின் ஆசிரமம் நகுலமுனிவர் தியானத்தில் அமர்ந் துள்ளார். அவர் முன்பு குத்துவிளக்கு ஒன்று சுடர் விடுகின் றது. நேரம் நடுயாமப் பொழுது. வெளியில் சிள்வண்டுகளின் ஓசை, இடையிடையே நாய்களின் குரைப்பு. வல்லியும் மங் கையும் முகத்திரையிட்டபடி ஆசிரமத்தினுள் நுழைகின்றனர். வல்லியின் முகத்திரையினூடே அவள் முகம் பூரணசந்திரன் போன்று ஒளிவிட்டு எழில் மலரப் பிரகாசித்த வண்ணம் இருக்கிறது.)

நகுல: ஓம், நமசிவாய! ஓம் நமசிவாய! ஓம் நமசிவாய! (தியானம் முடிந்து கண் விழிக்கின்றார். அதற்கே காத்து நின்ற வல்லியும் மங்கையும் அவரடியில் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்குகின்றனர்.)

நகுல: நீடு வாழ்க! எம்பெருமான் அருள்க. கள்வரும் தூங்கிவிழும் நள்ளிரவு இது. இவ்வேளையிலே கன்னியராகிய உங்களை இங்கு வர வைத்த காரணம் யாதோ?

மங்கை: ஸ்வாமி! நாளை நாங்கள் நாடு திரும்புகிறோம்.

நகுல: (சிரிப்பு மாறாமல்) வைகறைப் பொழுதிலோ?

மங்கை: இல்லை, ஸ்வாமி! விடிந்து ஐந்து நாழிகை கழிந்த பின்புதான்,

நகுல; அப்படியானால் காலையிலேயே வந்திருக்கலாமே? பரிவாரங் கள் சூழப் பகிரங்கமாய் வருவதை விடுத்து அர்த்த சாமத் தில், யார் துணையும் இன்றி.........?

வல்லி: அவ்வாறு வரக் காரணம் உண்டு ஸ்வாமி!

நகுல: (சிரிப்புடன்) சொல்.

வல்லி: (தயங்குகிறாள் பின் மங்கையை நிமிர்ந்து நோக்கி 'நீயே சொல்' என்று சைகை செய்கிறாள்)

மங்கை: நாளை அமைச்சர், தளபதி, படை குடி பரிவாரங்களும் நானும் மட்டுமே நாடு திரும்புகிறோம்.

நகுல: (வியப்புக் காட்டி) இளவரசி... ...?

மங்கை: அவர் வரமாட்டார்.

நகுல: வியப்பாக இருக்கிறதே! யாருக்காக நீங்கள் எல்லாம் இங்கு வந்தீர்களோ அவர் மட்டும் இங்குத் தங்கிவிட, நீங்கள் போவ தென்றால்... ... இதன் பொருள்?

மங்கை: (தயங்குகிறாள்)

வல்லி: நானே சொல்லி விடுகிறேன் ஸ்வாமி! நகுலமுகம் நீங்கி நன் மானிட முகம் பெற்ற முனிபுங்கவர் தாங்கள். தங்கள் அறிவு ரையும் பொருளுரையும் எனக்கு வாழ்வில் பிடிப்பை உண் டாக்கின. தங்களின் அடியொற்றி நடந்ததால் என் அசுவ முகம் நீங்கிப் பழையமுகம் பெற்றேன்.

நகுல: (பரிகாசமாக) அந்த நன்றிக் கடனைச் செலுத்த இந்தக் கிழவனோடேயே இந்த மண்ணில் தங்கி இவனுக்குப் பணி விடை செய்யப் போகிறாயா?

மங்கை: அதுவும் ஒரு காரணமே.

நகுல: (சிரித்து) அதுவும் ஒரு காரணம் என்றால்.........? ஓஹோ! இளவரசியார் கட்டிமுடித்த கந்தசுவாமி கோயிலையும் அங்கு எழுந்தருளிய கந்தசுவாமியையும் விட்டுப் பிரிய மனம் இடந் தரவில்லையோ? அம்மா வல்லி! முருகன் நீ கட்டுவித்த கோயி லில் மட்டுமோ? கருதுவார் உள்ளங்களையும் கோயிலாகக் கொண்டவன். 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்ட வன்' என்ற அப்பர் திருவாக்கினை நீ அறியாயோ? உன் மன மும் அவனுக்கு உகந்த கோயில்தான்.

மங்கை: ஸ்வாமி! தங்களுக்கு ஒளிப்பான் ஏன்? ஈழத்து மன்னர் உக்கிரசிங்கரை மணந்து ஈழத்து மண்ணின் மகளாக எங்கள் நாச்சியார் வாழ விழைகின்றார்.

நகுல: ஆ......... அப்படியா? வல்லியின் தந்தை.........?

வல்லி: ஒப்புதல் வழங்கார் என்பதை அறிந்தே இந்த முடிவு.

மங்கை: அவர் இவர்களை மணவுறவில் காண விரும்பவில்லை, எங்கள் மஹாராஜா இவர்களின் காதலுக்கு முதற் பகை.

வல்லி: எங்கள் நாட்டிலிருந்து எங்களை நாடி வருவோர் எனக்கும் மங்கைக்கும் வழங்கும் ஒரே ஒரு அறிவுரை ஈழத்து மன்ன ரோடு நாங்கள் எவ்வித உறவும் கொள்ளவேண்டாம் என் பதே.

நகுல: மன்னரும் மக்களும் விரும்பாத ஒன்றில் நீ பிடிவாதமாக இருக்கலாமா?

வல்லி: (தளதளக்கும் குரலில்) ஸ்வாமி! என் தலைவருக்கு என்னைவிட வேறு உயிர் இல்லை. நான் பிரிந்து சென்றால் அவர் வாழ மாட்டார் ஸ்வாமி, வாழ மாட்டார்.

மங்கை: அவர் உயிர் மட்டும் அல்ல; எங்கள் இளவரசியாரின் உயிரும் பிரிந்து விடும்.

நகுல: (மௌனம்)

மங்கை: நான் பொய் சொல்லவில்லை. இளவரசியார் குதிரை முகத்தில் குரூரமாகக் காட்சி தந்த காலத்திலும் உக்கிரசிங்கனின் மனம் திரியவில்லை; அவர் தமது அன்பைக் கைவிடவில்லை. மாறு வேடத்தில் நாள்தோறும் வந்து நாச்சியாரின் நோய் தீரும்வரை அவருக்குப் பணிவிடை செய்தார்.

வல்லி: இனத்தால் வேறுபட்டவர் என்றும் சிறியதொரு நாட்டின் மன்னர் என்றும் இழிப்பது போல் வெளிக்காட்டி, எக்காலத்திலும் தமக்கருகில் என்னை வைத்திருக்கவே விரும்பும் என் தந்தைக்காக என் தலைவரின் பரிசுத்தமான அன்பை, தியாக மனப்பான்மையை, பாசத்தை நான் துறக்கத்தான் வேண்டுமா ஸ்வாமி!

மங்கை: மன்னரின் அன்புக்கு இணையே இல்லை. அந்த அன்பு இளவரசியாரின் புற அழகினால் உண்டான போலிக் கவர்ச்சி அன்று.

வல்லி: வாழ் நாள் முழுவதும் நான் குதிரை முகத்தோடு இருந்தாலும் அவரின் அன்பூற்று வற்றாது பெருகிய வண்ணமே இருக்கும். இத்தகைய ஒருவரைத் தந்தையின் பிடிவாதத்திற்காகத் துறக்க நினைத்தலே கொடும் பாவம் அல்லவா? சொல்லுங்கள் ஸ்வாமி! என் முடிவு தவறானதா?

நகுல: இல்லை ...... ஒரு காலும் நீ அவனைத் துறத்தல் கூடாது. அவனுக்காக உன் தந்தை, தாய், உற்றார், உறவினரையெல்லாம் துறப்பதை நான் தவறு என்று கூறமாட்டேன்.
(இவ்வேளையில் வெளியில் குதிரையின் குளம்பொலி தொலைவில் கேட்டுச் சிறிது சிறிதாக அண்மி வருகிறது.)

மங்கை: ஆலய மண்டலாபிடேக இறுதி நாள். மன்னர் மாறுவேடத்தில் ஆலயத்திற்கு வந்திருந்தார். அவரிடம் இளவரசியார் தமது உறுதியான முடிவை எடுத்துரைத்ததன் பயன் தான்...... அதோ ... (குளம்பொலி கேட்கும் திசையைச் சுட்டிக் காட்டுகிறான்)

(குளம்பொலி நிற்கிறது. தொடர்ந்து சில கணங்களில் உக்கிர சிங்கன் உள்நுழைந்து நகுலமுனிவரை வணங்குகின்றான். பின்பு அவனும், வல்லியும் அவரின் பாதங்களில் ஒன்றாக வீழ்ந்து வணங்குகின்றனர்.)

இருவரும்: ஸ்வாமி! எங்களை ஆசீர்வதியுங்கள்.

நகுல: உள்ளத்தில் உறுதியோடும், மாவிட்டபுரக் கந்தனில் இடையறாத பத்தியோடும் அறவழி நின்று நீங்கள் நீடு வாழ்க. அவன் அருள் உங்களுக்கு என்றும் உண்டு. சென்று வருக. (இருவரும் எழுந்திருக்கின்றனர். கண்ணீர் மல்க இவர்களையே பார்த்து நின்ற மங்கையை வல்லி ஆற்றாமையோடு சென்று தழுவிக் கொள்கிறாள்.)

வல்லி: என் உயிர்த்தோழி, எனக்கு விடைகொடு. (மங்கை வல்லியை அணைத்தபடி விம்முகிறாள். பின் தனது கண்ணீரைத் துடைத்தபடி உறுதியாக நிமிர்கிறாள்.)

மங்கை: மஹாராஜா! வல்லி நாச்சியாரே! உங்கள் உள்ளங்களில் எழும் நம்பிக்கை போலப் பொழுதும் புலரத் தொடங்குகின்றது.

(மாவிட்டபுரக் கோயில் மணி ஓசை) எங்கும் நிறைந்து எல்லாமாயுள்ள முருகனின் ஆசி அவன் ஆலய மணியோசையாய் எழுகின்றது. நான் எங்கிருந்தாலும் என் உள்ளம் உங்களையே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும்.

சென்று வாருங்கள்

(உக்கிரசிங்கனும் வல்லியும் வெளியிற் செல்கின்றனர் அவர்கள் செல்லும் திசையையே நோக்கி மங்கை உறைநிலை அடைகின்றாள். காதலர் இருவரையும் ஆசீர்வதிக்கும் பாவனையில் தமது வலக்கரத்தை தூக்கி, நகுலமுனிவர், பின்பு கையைக் கீழ விட்டுக் கண்களை மூடியவாறு 'ஓம் நமச்சிவாய ஓம் நமச்சிவாய, ஓம் நமச்சிவாய' என்று ஓதுகின்றார். பின்னணியில்

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்''

என்ற திருத்தாண்டக அடிகள் (முன்பு நடனத்தின் போது பாடப்பட்ட அதே இசையில்) நாதஸ்வரத்தில் வாசிக்கப்படுகின்றன அதனோடு இணைந்து குதிரையின் குளம்பொலி எழுந்து, நலிந்து கரைகின்றது.)

நிறைவு

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

தெளிந்த இலட்சியப் பயணம்
சிறகுகள் அமையம்
Siraikukal
Foundation